LB 4.6
N13
119904

பார்வதி பரணிய மென்னும்

# விஷவைத்ய சிந்தாமணி

இஃது

"பிரபஞ்ச உற்பத்தி, வைத்திய சிகாமணி, நாரதர் கலகம், மூலிகை மர்மம், இன்பரசக் கோவை, சுகந்த பரிமள சாஸ்திரம், கனக சாஸ்திரம்"
முதலிய நூல்களுக்கு ஆசிரியராகிய

சிறுமணவூர்

## முனிசாமி முதலியார்

இயற்றியது.

சென்னை:

சி. முனிசாமி முதலியார் & கம்பெனியார்

வெளியிட்டது.

1913.

Copy Right.] [விலை அணா-12.

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலருக்குந் தெரிவிப்பதென்னவெனில், 1867-வது வருஷத்திய 25-வது ஆக்ட்டின் 20-வது பிரிவின் 6-வது விதியின்பிரகாரம் இந்நூலை கனம்பொருந்திய கெவர்ன்மெண்டார் அவர்கள் சட்டத்திற்கிணங்க பிறர் யாவரும் அச்சிடாதபடி காப்பிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றது. ஆகையால் சிறுமணவூர் முனிசாமி முதலியார் அண்டு கம்பெனியார் அவர்களின் அனுமதியில்லாமல் இந்நூலையாவது இதில் கண்டிருக்கிற பாகங்களையாவது, இதை வேறு பாஷையில் மொழிபெயர்த்தாவது ஒருவரும் அச்சிடலாகாது. அப்படி அச்சிட்டால் அதனால் உண்டாகும் நஷ்டத்தை சட்டப்படி வசூல் செய்யப்படும்.

இப்படிக்கு:
சிறுமணவூர்-முனிசாமி முதலியார் அண்டு கம்பெனி,
சிவகாமி விலாசம் பிரஸ்,
நெ. 12, செட்டிநாய்க்கன் தெரு, சூளை-போஸ்ட், மதராஸ்.



# புத்தக விளம்பரம்

| | ரூ. | அ. |
|---|---|---|
| இங்கிலீஷ் - பிரபஞ்ச உற்பத்தி | 2 | 0 |
| தமிழ்-பிரபஞ்ச உற்பத்தி | 2 | 0 |
| பெரிய சோதிடசிகாமணி | 3 | 8 |
| உலகவிசித்திர கதைபடத்துடன் | 1 | 0 |
| சுதேசகைத்தொழில்சாஸ்திரம் | 1 | 0 |
| வேதாந்த ஜட்ஜிமெண்டு | 1 | 0 |
| பட்டணத்தார் புராணம் வசனம் | 1 | 0 |
| இன்பரசக்கோர்வை | 1 | 0 |
| கிராமமுனிசிப்பு சட்டம் | 3 | 0 |
| தஸ்தாவேஜுகளின் சட்டம் | 1 | 4 |
| இந்தியா சாட்சி ஆக்ட்டு | 0 | 12 |
| எட்டாவது ஆக்ட்டு | 0 | 2 |
| போலீஸ் ஆக்ட்டு | 0 | 4 |
| தேவஸ்தான ஆக்ட்டு | 0 | 4 |
| பார்வதிபரணியம் | 0 | 12 |
| 44-பதிவிரதைகள் சரித்திரம் | 0 | 12 |
| விராடபர்வம் வசனம் படம் | 0 | 12 |
| இராஜவமிச பரம்பரை | 0 | 10 |
| மூலிகைமர்மம் முதற்பாகம் | 0 | 8 |
| டை. 2-வது பாகம் | 0 | 8 |
| டை. 3-வது பாகம் | 0 | 8 |
| டை. 4-வது பாகம் | 0 | 8 |
| டை. நான்குபாகமும்ஒரேகட்டடம் காலிகோ பைண்டு | 2 | 0 |
| மாணிடரகசியம் சர்பசாஸ்திரம் | 0 | 8 |
| சுகந்த பரிமளசாஸ்திரம் | 0 | 8 |
| சிவமகாமந்திரம் | 0 | 4 |
| நவக்கிரக மஹாமந்திரம் | 0 | 4 |
| நவக்கிரக நவகண்ட ஆருடம் | 0 | 8 |
| கஷ்டஜாதக கணிதம் | 0 | 8 |
| வன்னியநாடகம் | 0 | 8 |
| திருத்தணிகைச் சந்நிதிமுறை | 0 | 8 |
| நன்றியற்றசண்டாளர்சகவாசம் | 0 | 8 |
| இந்தியா சமயல்சாஸ்திரம் | 0 | 8 |
| சிவசொரூபசாஸ்திரம் | 0 | 8 |
| தெய்வருளைவெளிச்சம் | 0 | 8 |
| சிவவாக்கியம் 1000-பாடல் | 0 | 8 |
| ஜகன் நர்வதாசரித்திரம் | 0 | 8 |
| தாய்க்கிழவிகள் தருக்கு | 0 | 8 |
| சர்வ தேவதா வசியம் | 0 | 8 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| நாரதர்கலகம்முதற்பாகம் | 0 | 6 |
| டை. இரண்டாம்பாகம் | 0 | 6 |
| டை. மூன்றாம்பாகம் | 0 | 6 |
| டை. நான்காம்பாகம் | 0 | 6 |
| டை நான்குபாகமும்ஒரேகட்டடம் காலிகோ பைண்டு | 1 | 8 |
| கண்கட்டுவித்தை முதற்பாகம் | 0 | 6 |
| டை. இரண்டாம்பாகம் | 0 | 6 |
| டை. மூன்றாம்பாகம் | 0 | 6 |
| டை. நான்காம்பாகம் | 0 | 6 |
| டை நான்குபாகமும் ஒரேகட்டடம் காலிகோ பைண்டு | 1 | 8 |
| கொழுத்தசிரிப்பு அகசியநூல் | 0 | 6 |
| பழைய பக்காக்கதை | 0 | 6 |
| மதிகெட்டான் நாடகம் | 0 | 5 |
| திருக்ஷேத்திரசிந்தாமணி | 0 | 5 |
| நூதன மார்க்கண்ட நாடகம் | 0 | 4 |
| அக்கடவிகடசம்சாரி | 0 | 4 |
| மலையாளமாந்திரீகபோதினி | 0 | 4 |
| விவாகசாஸ்திரம் | 0 | 4 |
| கலியாணப்பாட்டு | 0 | 4 |
| வியாசர் விபரீதம் | 0 | 4 |
| சகுனசாஸ்திரம் | 0 | 4 |
| பெண்கள் ருதுஜெனனஜாதகம் | 0 | 4 |
| ருஷியாஜப்பான் யுத்தசரித்திரம் | 0 | 4 |
| வைத்தியசத்தகாதி | 0 | 4 |
| சோதிடநாடி | 0 | 4 |
| மாமாங்கபுராணம் | 0 | 4 |
| ஜீவோற்பத்திசிந்தாமணி | 0 | 4 |
| சுருக்கு பஞ்சபக்ஷி | 0 | 2 |
| விடுகவித்திரட்டு | 0 | 2 |
| திருப்பதிவேழுமலைவெண்பா | 0 | 1 |
| வாந்திபேதி நிவாரணி | 0 | 2 |
| சுப்பிரமணியர் பஜனைகீர்த்தனை | 0 | 1 |
| அவிவேகபூரணகுருக்கதை | 0 | 1 |
| விபூதிருத்திராக்ஷ மகத்துவம் | 0 | 1 |
| 1008-சிவலிங்கப்படம் | 0 | 2 |
| நவக்கிரகபடம் | 0 | 2 |
| காசிப்படம் | 0 | 1 |
| ராஜராஜேஸ்வரிபடம் | 0 | 1 |

சிறுமணவூர் முனிசாமி முதலியார் கம்பெனி,
பெரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு, மதராஸ்.

உ
சிவமயம்.

# விஷவைத்திய சிந்தாமணியின் அகராதி.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| நான்முகம் | 9 |
| சர்ப்பங்களின்பெயர் | ,, |
| ஜாதிபேதம் | 10 |
| உத்தமஜாதிசர்ப்பவுற்பத்தி | 12 |
| பலஜாதிசர்ப்பவுற்பத்தி | ,, |
| பிரமஜாதிசர்ப்பம் | 13 |
| க்ஷத்திரியஜாதிசர்ப்பம் | ,, |
| வைசியஜாதிசர்ப்பம் | ,, |
| சூத்திரஜாதிசர்ப்பம் | 14 |
| பற்களின்பெயர் | ,, |
| விஷநீர் அடையாளம் | 15 |
| பல்லின் அடையாளம் | ,, |
| கடிகணக்கு | ,, |
| விஷகணக்கு | ,, |
| மீளாக்கடி | ,, |
| காடைப்பல்லின் லக்ஷணம் | 16 |
| கடியின் அசாத்தியநிறம் | ,, |
| கடிமனைத்தின் நிதானம் | ,, |
| மரணஸ்தானம் | ,, |
| திதிபேதம் | ,, |
| நட்சத்திரபேதம் | ,, |
| சர்ப்பந்தீண்டப்படா அசாத்திய இடங்கள் | ,, |
| கடித்தசர்ப்பத்தின் கடிணக்குறி | ,, |
| அற்பவிஷங்கள் | ,, |
| கடியாக்கடி | ,, |
| விஷபரிட்சை | 18 |
| உயிர்நிலை | ,, |
| உயிர்பரிட்சை | ,, |
| கடிப்பதற்குக் காரணம் | 19 |
| சர்ப்பவருக்கச் சத்துருவகை | ,, |
| பலஜாதிசர்ப்பபேதம் | ,, |

| விஷயம். | பக்கம். |
|---|---|
| பௌமசர்ப்பம் | ,, |
| தருவிகரசர்ப்பம் | ,, |
| மண்டலிசர்ப்பம் | 20 |
| ராஜமந்தசர்ப்பம் | 21 |
| கௌதோசர்ப்பம் | 22 |
| நிர்விஷசர்ப்பம் | ,, |
| நிர்விஷலட்சணம் | ,, |
| வைகரஞ்சசர்ப்பம் | 23 |
| ஆண்சர்ப்பம் | ,, |
| பெண்சர்ப்பம் | ,, |
| அலிசர்ப்பம் | ,, |
| மலட்டுசர்ப்பவிஷம் | ,, |
| பாலியசர்ப்ப ஆண்விஷம் | ,, |
| எவ்வனசர்ப்ப ஆண்விஷம் | ,, |
| விருத்தசர்ப்பம் | ,, |
| கர்ப்பசர்ப்பவிஷம் | 24 |
| சூசிகாசர்ப்பம் | ,, |
| கோனசசர்ப்பம் | ,, |
| வழிச்சர்ப்பம் | ,, |
| விஷவிருத்திலட்சணம் | ,, |
| சர்ப்பவிஷவேகபேதம் | ,, |
| கருநாகவிஷம் | 25 |
| கிழுநாகவிஷம் | 26 |
| விரியன்பேதம் | ,, |
| பருவிரியன்விஷம் | ,, |
| இரத்தவிரியன்விஷம் | ,, |
| வழலைவிஷம் | ,, |
| கருவழலைவிஷம் | ,, |
| மூர்க்கன்விஷம் | 27 |
| மயக்குசர்ப்பம் | ,, |
| முருக்குசர்ப்பம் | ,, |
| சாரைப்பாம்பு | ,, |





| விஷயம். | பக்கம். |
|---|---|
| புடையன்பாம்பு | ,, |
| மண்ணுளிப்பாம்பு | ,, |
| காலியாங்குட்டி | 28 |
| கண்குத்திப்பாம்பு | ,, |
| வெண்ணூக்கைதப்பாம்பு | ,, |
| சில்லரைவிஷவகுப்பு | ,, |
| ஓணான் | ,, |
| தவளை | ,, |
| அட்டைவிஷ | 29 |
| வீட்டுப்பல்லி | ,, |
| காட்டுமசகம் | ,, |
| மட்சிகா | ,, |
| மலைப்பீலிகா | ,, |
| சிலந்தியின்பேதம் | ,, |
| வாதச்சிலந்திபொது | 30 |
| பித்தச்சிலந்திவிஷம் | ,, |
| குமுதச்சிலந்திவிஷம் | ,, |
| இரத்தச்சிலந்திவிஷம் | ,, |
| சித்திரச்சிலந்திவிஷம் | ,, |
| சங்காளிகச்சிலந்தி | ,, |
| மேகச்சிலந்திவிஷம் | ,, |
| பித்தச்சிலந்திபொதுக்குணம் | 31 |
| கபிலாசிலந்திவிஷம் | ,, |
| அக்கினிச்சிலந்திவிஷம் | ,, |
| பீதச்சிலந்திவிஷம் | ,, |
| பதுமச்சிலந்திவிஷம் | ,, |
| மூத்திரச்சிலந்திவிஷம் | ,, |
| சுவேதச்சிலந்திவிஷம் | ,, |
| கறுப்புச்சிலந்திவிஷம் | ,, |
| சிலேட்டுமச்சிலந்தியின் பொதுக்குணம் | 32 |
| பாண்டுச்சிலந்தி | ,, |
| இரத்தபாண்டுசிலந்தி | ,, |
| வண்டுசிலந்தி | ,, |
| பிங்கலச்சிலந்தி | ,, |
| திமிர்மண்டலச்சிலந்தி | ,, |
| அர்க்கந்தசிலந்தி | ,, |
| சித்திரமண்டலிச்சிலந்தி | 33 |
| காகச்சிலந்தி | ,, |

| விஷயம். | பக்கம். |
|---|---|
| அக்கினிவாதச்சிலந்தி | ,, |
| லாஜவர்ணச்சிலந்தி | ,, |
| வைதேகச்சிலந்தி | ,, |
| ஜாலமாலினிச்சிலந்தி | 34 |
| மாலாகுணச்சிலந்தி | ,, |
| சுவர்சிலந்தி | ,, |
| பிரத்தியோகச்சிலந்தி | ,, |
| சிலந்திகடிக்கும் ஸ்தானம் | ,, |
| கடிகாலநிதானம் | 35 |
| சிலந்தியின்சப்தபேதநிதானம் | ,, |
| சிலந்தியின் அஷ்டபேதம் | 36 |
| சிலந்தியின்சுவாசம் | ,, |
| சிலந்தியின்பல் | ,, |
| சிலந்தியின்மலம் | ,, |
| சிலந்தியின் மூத்திரம் | ,, |
| சிலந்தியின் சுக்கிலம் | ,, |
| சிலந்தியின் வாய் | 37 |
| சிலந்தியின்வாய்நீர் | ,, |
| சிலந்தியின் ஸ்பரிசம் | ,, |
| சிலந்திவிஷத்தின் அவுஷதம் | ,, |
| மீன்கடி விஷம் | ,, |
| நாட்டு மரவட்டை | 38 |
| விருச்சிக உற்பத்தி | ,, |
| தேளின்பேதம் | ,, |
| உச்சிலிங்கத்தேள் | 39 |
| வாதத்தேள் | ,, |
| பித்தத்தேள் | ,, |
| சிலேத்துமத்தேள் | ,, |
| நட்டுவாய்க்காலி | ,, |
| மூஷிகபேதம் | 40 |
| எலிவகுப்பு | ,, |
| லாலஜஎலி | ,, |
| சபளஎலி | ,, |
| புண்டாஎலி | ,, |
| ஹரிதஎலி | ,, |
| சிகுரஎலி | ,, |
| அகிதஎலி | ,, |
| கஷாயதந்தஎலி | ,, |
| சூனகஎலி | 41 |

| விஷயம். | பக்கம். |
|---|---|
| கோகிலஎலி | ,, |
| கபிலஎலி | ,, |
| கிருஷ்ணஎலி | ,, |
| ராசாலஎலி | ,, |
| சுந்தரிஎலி | ,, |
| எலிசுக்கிலம் | 42 |
| அசாத்தியஎலி | ,, |
| எலிவிஷசிகிச்சை | ,, |
| சகலஎலிக்கும்வேறுபிரயோக | ,, |
| திருவடிவிளக்கன்எலி | 43 |
| மாரபுத்திரன்எலி | ,, |
| உதிரமண்டலி | ,, |
| அருணன்எலி | ,, |
| குலந்தகன்எலி | ,, |
| மந்திரிஎலி | ,, |
| முத்திரையன்எலி | ,, |
| உத்திரியன்எலி | ,, |
| விரிசங்கன்எலி | ,, |
| விரையன்எலி | ,, |
| அலியன்எலி | ,, |
| உத்தமன்எலி | 43 |
| எலிகள்கடிவிஷம் | ,, |
| கொப்பிளங்கண்டால் | ,, |
| சுவாசங்கண்டால் | ,, |
| இருமல்கண்டால் | 45 |
| இரைப்புகண்டால் | ,, |
| உடல்வீங்கினால் | ,, |
| நாய்க்கடிக்கு | 46 |
| பேய்நாய்க்கடிக்கு | 47 |
| சகலமிருகவிஷம் | ,, |
| தந்தகவிஷம் | 48 |
| ஞாஷிகாவிஷம் | ,, |
| கிலசாஸ்திரக்சேனவி | 49 |
| சிதமண்டலி | ,, |
| இரத்தமண்டலி | ,, |
| பூரான் | ,, |
| செய்யான் | ,, |
| செஞ்சோரா | 50 |
| கருஞ்சோரா | ,, |

| விஷயம். | பக்கம். |
|---|---|
| ஆறுபுள்ளிவண்டு | ,, |
| செவ்வட்டை | ,, |
| அரணை | ,, |
| சாரகுண்ணி | ,, |
| எலிபேதம் | ,, |
| அவுஷதவகுப்பு | 51 |
| பரஞ்சோதிக்குழம்பு | ,, |
| மகாசிந்தாமணிக்குழம்பு | 52 |
| சஞ்சீவிக்குழம்பு | ,, |
| சஞ்சீவிகாணித்தைலம் | 54 |
| இராமபாணத்தைலம் | ,, |
| சஞ்சீவி மை | 53 |
| பரஞ்சோதி மை | ,, |
| சூரன் மை | ,, |
| பரஞ்சோதிமாத்திரை | 55 |
| சூடாமணிமாத்திரை | ,, |
| கட்டுமாத்திரை | 56 |
| அகோரருத்திராஞ்சனம் | 57 |
| கண்கலிக்கம் | 58 |
| சித்தாந்தபிரிசமாத்திரை | ,, |
| சங்காரமீட்டான்குளிகை | 59 |
| மகாபரஞ்சோதி மை | 60 |
| காளபட்டவிஷத்திற்கு | 61 |
| விரியன்கடித்த புண் | 62 |
| சூராதிசூரன் | ,, |
| கஞ்சிறபாய்ந்தான்குளிகை | ,, |
| மலைக்காத்தான்குளிகை | 64 |
| விரியன்பாம்புகளின் | 65 |
| செவ்விரியன்கடி | ,, |
| பெருவிரியன்கடி | ,, |
| கத்திரிவிரியன்கடி | ,, |
| புல்விரியன்கடி | ,, |
| சுழற்றுக்கோல்விரியன் | ,, |
| கடிவாயிற்பூசும் மருந்து | 67 |
| கருவழலைக்கடி | 68 |
| மற்றவழலைக்கடி | ,, |
| மயக்கரவுகடி | ,, |
| மூர்க்கரவுகடி | ,, |
| கூளைப்பாம்புகடி | ,, |





| விஷயம். | பக்கம். |
|---|---|
| செஞ்சோர்வுகடி | 69 |
| கருஞ்சோராகடி | ,, |
| புடையான்கடி | ,, |
| நெடுங்கழுத்தப்புடையன் | ,, |
| கட்டைப்புடையன் | ,, |
| வரிப்புடையன் | ,, |
| ஊதுபுடையன் | 70 |
| இரத்தமண்டலிகடி | ,, |
| சீதமண்டலிகடி | ,, |
| திமிர்மண்டலிகடி | ,, |
| சஞ்சீவிபுன்னை | ,, |
| சொரிமண்டலிகடி | 71 |
| வீங்குமண்டலிகடி | ,, |
| மண்டலிபுடையன் | ,, |
| சுருட்டைப்பாம்பு | 72 |
| செவிப்பாம்பு | ,, |
| பூரான்கடி | ,, |
| செவ்வரணை, பெரியஅரணை | ,, |
| 18-வன்கேடிக்கும் | 73 |
| செவ்வட்டைகடி | ,, |
| தேள்கட்டுவாகாலி | 74 |
| பரணிமருந்து | 75 |
| நல்லபாம்புவிஷத்திற்கு | 76 |
| தேள்கடிவிஷத்திற்கு | 77 |
| சகலஎலிகடிக்கும் | ,, |
| (மூலிகைமர்மம் அநுபந்தம்.) | ,, |
| பிராணசஞ்சீவி | 78 |
| கர்ப்பமுண்டாக | ,, |
| மதனசிந்தாமணி | 79 |
| மதனகாமேசுரம் | 80 |
| மதனகாமேசுரக்குளிகை | 81 |
| ஜெகபலக்குளிகை | ,, |
| மதனசஞ்சீவி | 82 |
| சொர்ணபற்பக்குளிகை | 83 |
| பூரணவல்லாதி | 84 |

| விஷயம். | பக்கம். |
|---|---|
| மதனப்பால் | ,, |
| அழுகண்ணிவிபரம் | ,, |
| சர்வசுரக்குளிகை | 85 |
| ஆனந்தபைரவன் | 86 |
| நேத்திரரோகதைலம் | ,, |
| பாலசஞ்சீவி | 87 |
| பிள்ளைகள்மாத்திரை | 88 |
| அள்ளுமாத்திரை | 89 |
| சிவகாதந்தைலம் | ,, |
| புறவீச்சுக்கு | 90 |
| கூஷ்மாண்டலேகியம் | ,, |
| சாமிநாதனெண்ணெய் | 91 |
| அமிர்தாஞ்சூரணம் | ,, |
| விரைவீக்கத்திற்கு | 92 |
| வாந்திபேதிக்கு | ,, |
| அதிசாரத்திற்கு | ,, |
| தாம்பிரமாத்திரை | ,, |
| தங்கபற்பம் | 93 |
| வெள்ளிபற்பம் | ,, |
| பவளச்சுன்னம் | ,, |
| அபிரேகச்செந்தூரம் | 94 |
| அயச்செந்தூரம் | ,, |
| அன்னபேதிச்செந்தூரம் | ,, |
| வெள்வங்கபற்பம் | ,, |
| கருமேகத்திற்கு | 95 |
| கெந்தகபற்பம் | ,, |
| பவளபற்பம் | 96 |
| கல்நாரபற்பம் | ,, |
| சிங்கிபற்பம் | ,, |
| சிலாசித்துபற்பம் | 97 |
| வெண்காரபற்பம் | ,, |
| கஸ்தூரிமெழுகு | 98 |
| சண்டமாருதச்செந்தூரம் | ,, |
| மூலிகைவயணம் | 101 |


விஷவைத்திய சிந்தாமணியின் அகராதி

முற்றுப்பெற்றது.

# நாரதர் கலகம் 4 பாகம்.

நேரிசை வெண்பா.

நான்மறையுமாராய்க்கில் நாரதனூர்தன்கலகம்
மீனினத்தின்மேலாகும் மேதினியில்—கானினம்போல்
யான்பெரிதென்றெள்ளேற்று மாற்றலுர வேண்டாங்காண்
நான்முகத்தை நின்முகத்தால் நோக்கு.

4,வேதம் 6,சாஸ்திரம் 18, புராணம் 7, ஸ்மிருதி 2, யிதிகாசம் முதலிய முதநூல் சார்பு நூல் வழிநூல் முழுதும் விடாமற் படித்தாலொழிய நாரதர் கலகங்கள் உணர்த்தாருக்குவிள ங்காதென்று நீண்டநாள்ஆராய்ச்சிசெய்து கி-முனிசாமி முதலியாரால்யெழுதப்பட்டது இந்த நாரதர்கலகம் 4. பாகமும் படித்தபேர்கள் சகலசாஸ்திரமும் கற்றுணர்ந்த வித்துவானென்பதற்கு ஐயமில்லை. ஆகையால் நான்முகத்தை நின்முகத்தால்நோக்கு என்றெழுதத்துணிபு.

சில சரித்திரங்களின் பெயரை மாத்திரம் இதனடியிற்காண்க.

நாரதர் கலகரகசியம்
நாரதர் குருச்சாபம்வந்த வரலாறு
நாரதர் இராமாயணைக்கலகம் செய்தது
நாரதர் பத்மாசுரனிடம் கலகம் செய்தது
நாரதர் மிருகண்டேயரிடம் கலகம்செய்தது
நாரதர் ருக்மணியிடம் கலகம் செய்தது
நாரதர் உஷாவினிடம் கலகம்செய்தது
நாரதர் அகத்தியரிடம் கலகம்செய்தது
நாரதர் தேவேந்திரனிடம் கலகம்செய்தது
நாரதர் மகாவிஷ்ணுவிடம் கலகம் செய்தது
நாரதர் பார்வதியிடம்கலகம் செய்தது
நாரதர் கெந்தருவரிடம்கலகம் செய்தது
நாரதர் தருமரிடம்செய்தகலகம்
நாரதர் சொன்ன யமசபைச்சிறப்பு
நாரதர் சொன்ன வருணசபைச்சிறப்பு
நாரதர் சொன்னபிரமசபைச்சிறப்பு
நாரதர் சூரியனிடம் செய்தகலகம்
நாரதர் காகண்டனிடம் செய்தகலகம்
நாரதர் கவுசிகரிடம் செய்தகலகம்
நாரதர் வல்லாளரிடம் செய்தகலகம்
நாரதர் சுக்ரீவனிடம்செய்தகலகம்
நாரதர் பாகவத உற்பத்திசொன்னது [து
நாரதர் வியாசருக்குஅரிப்பிரபாவம்சொன்ன
நாரதர் சித்திரகேதுவின் சோகந்தீர்த்தது
நாரதர் இந்திரனைத் தூண்டினது [யது
நாரதர் தேவேந்திரனுக்குத் ... [illegible] ... காட்டி
நாரதர் பரபிரம்ம தெரிசனஞ்செய்தது
நாரதர் இந்திரன் நந்தவனத்திற் கலைஞ்செய்
நாரதர் பூர்வசபிறப்பும்சாபமும்
நாரதர் லக்ஷ்மி பார்வதி சரஸ்வதிகலகம்செ
நாரதர் எமனிடம் செய்தகலகம்
நாரதர் ஸ்ரீராமரிடம் செய்தகலகம்
நாரதர் திருமூர்த்திகளிடம்செய்தகலகம்
நாரதர் சுகவியாசருக்குபதேசம்செய்தது
நாரதர் ஸ்ரீராமலோகக்கண்டது
நாரதர்வியாசரிடம்மாயைவிசாரணைசெய்தல்
நாரதருக்கு குரங்குமுகமானது
நாரதர் விவாகம் செய்துகொண்டது
நாரதருக்கு ஸ்ரீரூபம் லபித்தது
நாரதர் தாலத்துவஜன் மனைவியானது
நாரதர் பலபடி புருஷரூபம் பெற்றது
நாரதர் பிரமனைக்கண்டது
நாரதர் ஜெனமாந்தரம்
நாரதர் கலிபுருஷனைக்கண்டது
நாரதர் தேவிபூஜை சொன்னது
நாரதர் தருமசர்மனிடம் செய்தகலகம்
நாரதர் ஊர்வசியை நாணச்செய்தது
நாரதர் மாயை மயக்கம்தெளிந்தது
நாரதர் விஜயனுக்கு கலியாணம்செய்தது
நாரதர் வள்ளி கல்யாணம்முடித்தது
நாரதர் பரீக்ஷித்து மரணத்தை விசாரித்தது
நாரதர் பாண்டவ வம்ச விசாரணை

இம்மாதிரி இன்னும் அனேக சரித்திரங்கள்சேர்ந்தது நான்குபாகமாகும்.

| | | | |
|---|---|---|---|
| நாரதர்கலகம் முதற்பாகம் | விலை | அணா | 6 |
| டை இரண்டாம்பாகம் | விலை | ,, | 6 |
| டை மூன்றாம்பாகம் | விலை | ,, | 6 |
| டை நான்காம்பாகம் | விலை | ,, | 6 |

டை நான்குபாகமும் ஒரே கட்டடம் புஸ்தகமிகோ. பைண்டு ரூபா 1 8 0


உ

சிவராமஜயம்.

பார்வதி பரணியமென்னும்

# விஷவைத்திய சிந்தாமணி.

OFFICE OF THE REGISTRAR ... 21 JUL 1913 MADRAS



## காப்பு.

சீராரும் பார்வதிநற் றிம்பரணி யாநூலைப்
பாரா ரறியவுரைப் பன்னுதற்கு—நீராரும்
பிஞ்சுமதி குஞ்சிசடைப் பெம்மானு ரன்றளித்த
கஞ்சமத வாரணன்றுள் காப்பு.

## நான்முகம்.

கேளாய், அகஸ்தியமகாமுனியே! நீர் நம்மை வணங்கிக் கேட்டபடியால் விஷப்பிராணிகளின் பூர்வோத்திரங்களை நன்குணர்த்துவோமாக. அதாவது காசிபன்மனைவியாகிய கத்துருவென்பவளின் வயிற்றிலுதித்த விஷப்பிராணிகள் அளவிறந்தனவாயினும் இந்த அண்டகோடிகளுக்குள் இராநின்ற சர்ப்பங்களில் தலைமையாயும் உத்தமஜாதியாயுமுள்ள சர்ப்பபேதங்களையும் ஆதியோடந்தமாக மற்றுமுள்ள சில விஷபேதங்களையும் கிரமமாகச்சொல்வோம் கேட்டுக்கொள்வாயாக முனிசிரேஷ்டா.

### உத்தமஜாதி சர்ப்பங்களின் பெயர்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1 | வாசுகி | 5 | குளிகன் |
| 2 | அநந்தன் | 6 | பதுமன் |
| 3 | தக்கன் | 7 | மகாபதுமன் |
| 4 | சங்கபாலன் | 8 | கார்க்கோடகன் |

ஆக சர்ப்பபேதம்-8.

## ஜாதிபேதம்,

| | |
|---|---|
| வாசுகியென்னும் சர்ப்பமானது | க்ஷத்திரியஜாதி |
| அநந்தனென்னும் சர்ப்பமானது | பிரமஜாதி |
| தக்கனென்னும் சர்ப்பமானது | வைசியஜாதி |
| சங்கபாலனென்னும் சர்ப்பமானது | க்ஷத்திரியஜாதி |
| குளிகனென்னும் சர்ப்பமானது | பிரமஜாதி |
| பதுமனென்னும் சர்ப்பமானது | சூத்திரஜாதி |
| மகாபதுமனென்னும் சர்ப்பமானது | வைசியஜாதி |
| கார்க்கோடகனென்னும் சர்ப்பமானது | சூத்திரஜாதி |

மேற்படி உத்தமஜாதி சர்ப்பங்க ளிருக்குமிடங்களும் அவைகளினுடைய மணமும், ஆடுந்திசையும், படத்தின்குறியும், நிறமும், வயசும் சொல்வோமாக.

### 1-வது வாசுகி.

வாசுகியென்னும் சர்ப்பமானது கிழக்குத்திக்கில் விருட்சத் தடியிலிருக்கும். அது இருக்குமிடத்தில் தாழம்பூவாசனை வீசும். மனிதரைப்பார்த்தபடி எதிர்நோக்கி ஆடும். அதன்படத்தில் சக்காம்போல் குறியும் கருங்குவளைப்பூப்போல் புள்ளிகளுமிருக்கும் அறுகங்கிழங்கு, வண்டு, இவைகளைப்புசிக்கும். அதன் தேகம் பொன்னிறமாயிருக்கும். அதற்கு வயசு 800.

### 2-வது அநந்தன்.

அநந்தனென்னும் சர்ப்பமானது தென்கிழக்குத்திக்கில் தெய்வஸ்தலத்தில் வாசமாயிருக்கும். அது இருக்குமிடத்தில் நாவிப்பூமணம் வீசும். அண்ணாந்துபார்த்து ஆடும். படத்தில் சங்குபோல் குறியும், வெண்டாமரைப் பூப்போல் புள்ளிகளுமிருக்கும். அது பசிவேளையில் காற்றைப்பிடித்து உணவு கொள்ளும். அதின் தேகம் சிவந்தநிறமாயிருக்கும். அதற்கு வயசு 1008.

### 3-வது தக்கன்.

தக்கனென்னும் சர்ப்பமானது தெற்குத்திக்கில் பாழ்மனையில் வாசமாயிருக்கும். அது இருக்குமிடத்தில் பாதிரிமலர் வாசனைவீசும். நான்குதிசைகளும் நோக்கியாடும். அதின் படத்தில் வில்லைப்போல்குறியும், துவாதசத்தின் வடிவான புள்ளிகளுமிருக்கும். அதின் தேகம் கம்மிய வெண்மைநிறமாகும். ஓணான், எலி இவைகளை உணவாகக்கொள்ளும். இதற்கு வயசு 500.



### 4-வது சங்கபாலன்.

சங்கபாலனென்னும் சர்ப்பமானது தென்மேற்குத்திக்கில் மரத்தடியில் வாசமாயிருக்கும். அது இருக்குமிடத்தில் தாழம்பூ வாசனைவீசும். எதிர்நோக்கியாடும். அதின் படத்தில் திரிசூலம் போலாவது அல்லது பிறைபோலாவது குறியிருக்கும். கிழங்கு நினுசுகளைப்புசிக்கும். அதின்தேகம் பொன்னிறமாயிருக்கும். அதற்கு வயசு 800.

### 5-வது குளிகன்.

குளிகனென்னும் சர்ப்பமானது மேற்குத்திக்கில் பாழடைந்த தேவாலயங்களில் வாசமாயிருக்கும். அது இருக்குமிடத்தில் மலர்மணம்வீசும். அண்ணாந்துபார்த்தாடும். அதின் படத்தில் சங்குபோல்குறியும் சிறுபுள்ளிகளுமிருக்கும். வாயுவைப்பிடித்து ஆகாரமாய்க்கொள்ளும். அதின் தேகம் சிவந்த நிறமாயிருக்கும். அதற்கு வயசு 1008.

### 6-வது பதுமன்.

பதுமனென்னும் சர்ப்பமானது வடமேற்குத்திக்கில் புற்றுகளிலிருக்கும். அது இருக்குமிடத்தில் இலுப்பைப்பூவாசனைவீசும். பூமியைப்பார்த்தபடி ஆடும். அதின்படத்தில், புள்ளடிபோல் குறியும் பஞ்சகோணப்புள்ளிகளுமிருக்கும். அதின் தேகம் கருமைநிறமாயிருக்கும். மீன், தவளை இவைகளைப்புசிக்கும். வயசு 300.

### 7-வது மகாபதுமன்.

மகாபதுமனென்னும் சர்ப்பமானது வடக்குத்திக்கில் பாழ்மனைகளில் வாசமாயிருக்கும். அது இருக்குமிடத்தில் பாதிரிப்பூ வாசனைவீசும். பலதிசைகளையும் நோக்கியாடும். அதின் படத்தில் தனுசைப்போல் குறியும் ராஜவர்த்தனைக்கல்லைப்போல் பிரகாசமான புள்ளிகளுமிருக்கும். அதற்கு ஆகாரம் ஓந்தி, தவளை, எலி, நத்தை இவைகளைப்புசிக்கும். அதின் தேகம் வெண்மைநிறமாயிருக்கும். இதற்கு வயசு 500.

### 8-வது கார்க்கோடகன்.

கார்க்கோடகனென்னும் சர்ப்பமானது வடகிழக்குத்திக்கில் புற்றுகளில் வாசமாயிருக்கும். அதுஇருக்குமிடத்தில் இலுப்பைமலர்வாசனைவீசும். பூமியைப்பார்த்தபடியாடும். அதின் படத்தில் புள்ளடிபோற்குறியும், மூன்று கண்களைப்போல் புள்ளிகளுமிருக்கும். ஜலத்திலும் குளக்கரையிலுமுள்ள ஊர்வனவாகிய ஜீவன்களைப்புசிக்கும். இதின் தேகம் மிகவும் கறுத்தநிறமாயிருக்கும். அதற்கு வயசு 300.

அஷ்டநாகங்களின்விபரம் முற்றுப்பெற்றது.

## உத்தமஜாதிசர்ப்பங்களுற்பத்தி.

இவைகள் ஆனிமாதத்தில் புணர்ந்து ஆடி ஆவணிமாதங்களில் வயிறுளைந்து கார்த்திகைமாதத்தில் பூ பொன் எருக்கம்பூ வெண்மை, ஆகிய இந்தநிறங்களாக 248-முட்டைகளிட்டு ஏழுநாள் அவயங்காக்குமென்றும் அம்முட்டைகளில் ஆண்முட்டைகள் முகிழ்விரியாத எருக்கம்பூ மொக்கைப்போலும் பெண் முட்டைகள் வாகைப்பூ அரும்பைப்போலும் இரண்டு பேதமாயிருக்குமென்றும் அதையீன்றதாயானது ஏழுநாட்குள் 228-முட்டைகளைப் புசிக்குமென்றும் 4-முட்டைகள் அழியுமென்றும் 16-முட்டைகள் பொரிந்து குட்டிகளாகத் திரியுமென்றும் அக்குட்டிகளுக்கு மயிர்போல் 24-கால்களிருக்குமென்றும். இவைகள் பிறந்த 28-வது நாளில் சூரியனைநோக்கிப் படம்விரித்து ஆடி விஷம் பெற்றுக்கொண்டு தனித்தனியேபிரியுமென்றும் 60-வது நாளில் தோலுரிக்குமென்றும் 6-வதுமாதத்தில் பல்லும் நஞ்சும் வாலும் பிரகாசமாய்த் தோற்றுமென்றும் இவைகள் ஒருவனைக் கடிக்கும்போது கடியுண்டவனுக்கு இறப்புண்டோ இல்லையோவென்று சந்தேகிக்குமென்றும் இவைகளுக்குக் கண்களே காதாகவிருக்குமென்றும்(ஆகையால் இவைகளுக்குக்கட்செவியெனப்பெயர்) இவைகளின் வாய்க்கீழ்வரிசையில் காளி, காளராத்திரியென இரண்டுபற்களும் மேல்வரிசையில் எமன், எமதூதனென இரண்டுபற்களும் உண்டென்றும் இவ்விஷங்கள் மணி மந்திர அவுஷதாதிகளுக்கு அஞ்சுமென்றும் சித்தர் ஆரூட விருத்தப்பா என்னும் சாஸ்திரங் கூறுகின்றது.

## பலஜாதிசர்ப்பங்களினுற்பத்தி.

உத்தமஜாதி சர்ப்பங்கள் சித்திரைமாதம் புணர்ச்சியில் இச்சையுண்டாகி ஆனிமாதத்தில் ஆணும்பெண்ணும் இடைவிடாது திரிந்து ஆடிமாதத்தில்கூடி இழைந்து சூலுண்டாகி கார்த்திகை மாதத்தில் ௰, உ௰, ச௰, முட்டைகளிடும் இவற்றுள் சிலமுட்டைகள் பெருங்காற்றினாலும் அதிகதீட்சண்யத்தினாலும் கெடுதியை அடையும் மற்ற முட்டைகள் தனக்குத்தானே விரிந்துடைய அவைகளில்நின்றும் சிறுசிறுகுட்டிகள் வெளிப்பட்டுலவும் இக்குட்டிகளுக்கு கீழ்வாய்வரிசையில் காட்டுவாகைப்பூ, கேசர்ப்பிரமாணங்களையொத்து மஞ்சள் நிறமான எழுகோரப்பற்கள் முளையும். இவற்றுள் பகலில் விஷமிருப்பது-4, இரவில் விஷமிருப்பது 3, இவ்விஷம் 4, 3-என்னும் துளிக்கணக்காகவிழும். இக்கோரைப்பற்கள் வருஷத்திற் கொருதரம் விழுந்து முளைக்கும். இவ்வித விஷசர்ப்பஜாதிகள் 40-விதங்களும், விஷமில்லாத சர்ப்பஜாதிகள் 44-விதங்களுமாம். இவற்றுள் பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர



ரென்னும் 4-ஜாதி சர்ப்பங்களும் ஆண் பெண் அலியென்னும் 3-குறிப்புகளையுள்ள சர்ப்பங்களும், மலடென்னும் நோய்க்குறி பெற்ற சர்ப்பமும், பால்யம் யௌவனம் விருத்தாப்பியமென்னு முப்பருவங்களையுடையசர்ப்பங்களுமுண்டு. இவைகளுக்கு ஆயுள் 1000, 800, 500, 300, 200, 100, 26-என்னும் வருஷங்களாம். சில ஜாதிகளுக்கு ஆயுள் 5, 20, 50, 55-என்னும் வருஷங்களும் இச் சர்ப்பஜாதிக்குள் பிறக்காமல் பசுவின் நாசியில் ஜனித்து வருகின்ற சர்ப்பம் ஒரு விதமுண்டென்றறிக, ஆனால் சூரியவெப்பம் மிகுந்த தேசத்திலிருக்கின்ற சர்ப்பங்களுக்கெல்லாம் விஷம் அதிகமாம்.

### 1-வது பிரமசர்ப்பம்.

இது மேற்புறத்தில் வெளுப்பு கறுப்பு சிவப்பு கபிலமென்னும் நிறங்களையும் படத்திற் சங்கத்தின்வடிவான புள்ளிகளையும் அதிக சீறலுடன் கோபத்தையும், தாமரைப்பூ குருவேர் வெட்டிவேர் காட்டுவாகைப்பூ குங்கிலியம் நாபியாகிய இவைகளின் மணங்களையும்பெற்று ஆலயங்களில் சஞ்சரிக்கும். இதுபடம்விரித்து ஆடும்போது ஆகாயத்தைப்பார்த்து நின்றாடும். காற்றையும் பூமணத்தையும் புசிப்பாகக்கொள்ளும். இதற்கு வயது 1008-என்றறிக. அன்றியும் இது ரத்தநிறத்தைப்பெற்று சனிவாரத்தினிரவிலும் ஆதிவாரத்திலும் இரையெடுக்குமென்றும் உதயமுதல் பத்துநாழிகைவரைக்கும் வெளியில் திரியுமென்றும் கடிக்கும்போது முன்பக்கத்திலும் வலப்பக்கத்திலுங் கடிக்குமென்றும் அக்கடியினால் வாதமே அதிகரிக்குமென்றும் சித்தர் ஆரூடமென்னும் சாஸ்திரம் சொல்லுகின்றது.

### 2-வது க்ஷத்திரியசர்ப்பம்.

இது மேற்புறத்தில் பொன் பேரீச்சம்பழம் திராட்சைப்பழம் நாவற்பழமென்னும் நிறங்களையும், படத்தில் சந்திரன் சங்கு சக்கரம் கலப்பை ஆகிய இவைகளையொத்த புள்ளிகளையும் மிகுந்த பகையுடன்கோபத்தையும் சிவந்தநேத்திரத்தையும் காசிப்பூசெண்பகப்பூ தாழம்பூ புன்னைப்பூ அறுகங்கட்டையென்னுமிவைகளின் மணத்தையும்பெற்று விருட்சப்பொந்துகளில் வாசஞ்செய்யும். இது படம்விரித்து ஆடும்போது சமபார்வையுடன் ஆடும். அறுகங்கிழங்கையும் வண்டையும் உணவாகக்கொள்ளும். இதற்கு வயசு 800-என்றறிக. அன்றியும் இது சனிவாரப்பகலிலும் சோமவாரத்திலும் எலியை இரையாகக்கொள்ளுமென்றும் பகலில் உதயம் பத்துநாழிகைமுதல் இருபதுநாழிகைவரைக்கும் வெளியில் திரியுமென்றும் இடப்பக்கத்திலும் வலப்பக்கத்திலும் கடிக்குமென்றும் அக்கடியினால் பித்தமே அதிகரிக்குமென்றும் சில நூற்கள் கூறுகின்றன.

### 3-வது வைசியசர்ப்பம்.

இது மேற்புறத்தில் வச்சிரம் கோமேதகம் புரு இவைகளின் சாயலையும் உடல்முற்றிலும் சிவப்பு வெளுப்பு மஞ்சள் புகை இவைகள் நிறஞ்சேர்ந்த விருத்தாகாரமும் வில்லுருவமுமொத்த புள்ளிகளையும் பாதிரிப்பூ பால் நெய் வெள்ளாடு செம்மறியாடு இவைகளின் மணத்தையும்பெற்று மீனகளில் வாசஞ்செய்யும்.

இது படம்விரித்தாடும்போது நாலுதிசையும்பார்த்து நின்றாடும். ஓந்தியையும் எலியையும் உணவாகக்கொள்ளும். இதற்கு வயசு 500 என்றறிக. அன்றியும் இது சுக்கிரவாரத்திலும் மங்களவாரத்திலும் தவளையை இரையாகக்கொள்ளுமென்றும் உதயாதி இருபதுநாழிகைமுதல் முப்பதுநாழிகைவரைக்கும் வெளியில் திரியுமென்றும் இடப்புறத்திலும் பின்புறத்திலும் கடிக்குமென்றும் அக்கடியினால் கபமே அதிகரிக்குமென்றும் விஷநூல் சொல்லுகின்றது.

### 4-வது சூத்திரசர்ப்பம்.

கரி கோதுமை நிறங்களையும் உடலெல்லாம் புள்ளடிபோன்று சிறந்த நீண்ட புள்ளிகளையும் யானை காட்டெருமை அழுகிய சேறு ரத்தம் இலுப்பைப்பூ இவைகளின் மணத்தையும் பெற்று புற்றுகளில் வாசஞ்செய்யும். இது படம்விரித்தாடும்போது பூமியைப்பார்த்து கவிழ்ந்துநின்றாடும். தவளை மீன் இவைகளை உணவாகக்கொள்ளும். இதற்கு வயசு 200 என்றறிக. அன்றியும் இது மங்களவாரத்திலும் குருவாரத்திலும் எலிமுதலிய யாவற்றையும் இரையாகக் கொள்ளுமென்றும் வைசியசர்ப்பத்தைப் போலவே கடிக்குமென்றும் அந்தக்கடியினால் தொந்தகபம் அதிகரிக்குமென்றும் சில நூலிற் சொல்லப்படுகின்றன. இந்நான்கு ஜாதி சர்ப்பங்கள் தவிர மற்றசங்கரஜாதிசர்ப்பங்கள் கடிப்பதற்குப் பக்கபேதமும் ஸ்தானபேதமு மில்லையென்றறிக.

---

## உத்தமஜாதிசர்ப்பங்களுடைய

### பற்களின் பெயர்.

முதற்பல்லின்பெயர்—காளி.
இரண்டாம்பல்லின்பெயர்—காளாத்திரி.
மூன்றாம்பல்லின்பெயர்—இயமன்.
நான்காம்பல்லின்பெயர்—இயமதூதன்.

இந்தப்பற்கள் நான்கில் காளி, காளாத்திரியென்னும் இரண்டு பற்கள் மேல்வரிசையிலும் எமன், எமதூதனென்னும் இரண்டு பற்கள் கீழ்வரிசையிலுமிருக்கும். இவைகட்கு நாட்டியைப்போன்ற சிறு தொளைகளுள்ளனவாம். சர்ப்பம் கடிக்கும்போது அந்தத் தொளையின் வழியாய் விஷம் சுழன்று கடிவாயிலிறங்கும்;



இறங்கினவுடன் 96-மாத்திரை நின்று ஒவ்வொரு பல்லுக்கும் உடையபாகம்போல் அதிவிரைவில் இரத்த தாதுவிற் பாய்ந்து மேலுக்கேறி தத்தமது ஜாதிபேதப்படி மனிதருக்கு இடுக்கணுண்டாக்கும்.

### விஷநீர் அடையாளம்.

காளியென்றபல்பட்டால் பனிஜலம்போல்நீர்கசியும்.
காளாத்திரியென்றபல்பட்டால் மஞ்சள்நிறநீர்கசியும்.
எமனென்றபல்பட்டால் செந்நீர்கசியும்.
எமதூதனென்றபல்பட்டால் கழுநீர்போல்கசியும்.

### பல்லின் அடையாளம்.

காளியென்றபல் பட்டவிடம் புள்ளடிபோலிருக்கும்.
காளாத்திரியென்றபல் பட்டவிடம் முக்கோணம்போலிருக்கும்.
எமனென்றபல் பட்டவிடம் முள்தைத்த கீற்றுபோல் காயமிருக்கும்.
எமதூதனென்ற பல்பட்டஇடம் வில்லைப்போலிருக்கும்.

## கடி கணக்கு.

ஒருபல்பட்டால் கால்கடியென்றறியவும்.
இரண்டுபல்பட்டால் அரைக்கடியென்றறியவும்.
மூன்றுபல்பட்டால் முக்கால்கடியென்றறியவும்.
நான்குபல்பட்டால் முழுக்கடியென்றறியவும்.

## விஷக் கணக்கு.

ஒருபல்பட்டால் விஷமானது தோலைப்பற்றியேறும்.
இரண்டுபல்பட்டால் விஷமானது மாமிசத்தைப்பற்றியேறும்.
மூன்றுபல்பட்டால் விஷமானது எலும்பைப்பற்றியேறும்.
நான்குபல்பட்டால் விஷமானது மூளையைப்பற்றியேறும்.

### விஷப்பல்லின் சாத்தியாசாத்தியம்.

ஒருபல்லழுந்தினால் அந்தவிஷம் மூலிகைசிகிச்சையால் தீரும்.
இரண்டுபல்லழுந்தினால் அவ்விஷம் மணிமந்திர ஔடதத்தால்தீரும்.
மூன்றுபல்லழுந்தினால் அவ்விஷம் ஓர்விதத்தால் தீரும்.
நான்குபல்லழுந்தினால் அவ்விஷம்நீங்குவது அசாத்தியமாகும்.

## மீளாக்கடி.

ஒரேபல் அழுந்தினபோதிலும் அந்தப்பல் அழுந்தினவிடத்திலிருந்து இரத்தம்வடிந்தாலும் அல்லது பல்லழுந்தின விடத்தில் திருகியதுபோல் சக்கராகாரமாகத் தோற்றினாலும் அந்த இடம் ஆமையோட்டைப்போல் மேலெழும்பித் தடித்து வீங்கி

னாலும் அசாத்தியமாகும். ஆகிலும் மணி மந்திர ஔஷதவலியும் தெய்வவலியும், விதிவலியும் திடமாயிருக்குமாகில் கஷ்டத்தின் பேரில் உயிர் மீண்டுவரும்.

## தாடைப்பல்லின் லக்ஷணம்.

சில சர்ப்பங்களுக்கு தாடைக்குள் முள்ளைப்போல் ஒவ்வொரு கோரைப்பல் முளைத்திருக்கும். அந்தகோரைப்பல்பட்டு விஷமேறுமானால் உடனே அபாயமாய் அவ்விஷம் மீளாது.

## கடியின் அசாத்திய நிறம்.

சர்ப்பம் கடித்தஇடத்தில் கறுப்புநிறமாகவும், கனிந்த காவற்பழ நிறமாகவுமிருந்தால் அவ்விஷம் மிகவுங் கொடியதென்றறிக.

## கடிமணத்தின் நிதானம்.

சர்ப்பம் கடித்த இடத்தில் முகர்ந்து பார்த்தால் தாழைமலர்வாசனை வீசினால் நல்லபாம்பென்றறியவும், புளியம்பூவாசனைவீசினால் மண்டலிப்பாம்பென்றறியவும், சுக்கு மிளகு இவைகளின் வாசனைவீசினால் சிறியபாம்பென்று நிதானிக்கவும். இந்த மணம் யாதொன்றும் வீசாமலிருந்தால் சில்லரை விஷங்களென்றறியவும்.

## மரணஸ்தானம்.

மனிதருடைய தலை, நெற்றி, புருவ மையம், தாடை, உதடு, நெஞ்சு, உள்ளங்கை, மார்பு, ஸ்தனம், அக்குள், தொப்புள், ஆண்குறி அல்லது பெண்குறி, குதம், உள்ளங்கால் இந்த இடங்களில் சர்ப்பம் தீண்டுமாகில் தப்பாமல் மரணமேயாம்.

## திதிபேத மரணநிதானம்.

பருவம், அமாவாசை, பஞ்சமி, பிரதமை, அஷ்டமி, நவமி இந்த ஆறுதிதிகளில் சர்ப்பம்கடித்தாலும் மயானத்தில் சர்ப்பம் கடித்தாலும் பலபேர் கூடும்போது மரத்தடியில் கடித்தாலும் சூரிய உதயத்திலாவது, மாலைமயங்குங்காலத்திலாவது அந்தி நித்திரைசெய்கிறகாலத்திலாவது, பாதிராத்திரியிலாவது சர்ப்பம் கடிக்குமாகில் மரணமாகும்.

## நக்ஷத்திரபேத நிதானம்.

பரணி, கார்த்திகை, ஆயில்யம், விசாகம், பூரம், பூரட்டாதி, பூராடம், சதையம், மகம், திருவோணம், மூலம், சித்திரை, சோதி இந்த நக்ஷத்திரங்களும், இந்த நக்ஷத்திரத்துடன் பூரணபருவம் அமாவாசிசை கூடின தினமானாலும் தன்னுடைய ஜென்மநாளானாலும் அப்போது சர்ப்பம் கடிக்குமாகில் அசாத்தியமாமென்று சில நூல் சொல்லுகின்றது.



## சர்ப்பந் தீண்டப்படா அசாத்திய விடங்களாவன.

| | |
|---|---|
| பிடாரிகோவில் | மூங்கிற்புதர் |
| தூர்க்கைகோவில் | நந்தவனம் |
| பாழுங்கோவில் | பிரப்பம்புதர் |
| ஐயனார்கோவில் | மசானம் |
| யாகசாலை | நாணற்புதர் |
| பாழும்வீடு | ஏரிக்கரை |
| பாழூர் | நதிக்கரை |
| ஆலமரத்தடி | சுனைக்கரை |
| அரசமரத்தடி | நீரில்லாத்தாமரைக்குளம் |
| புன்னைமரத்தடி | முகத்துவாரம் |
| புளியமரம் | புதுமனை |
| முருங்கைமரம் | தேரடி |
| சந்தனமரத்தடி | புற்று |
| வீட்டுக்கூரையிலிருந்து | நாற்சந்துநடு |

மேற்கூறிய இடங்களிலிருந்து உத்தமஜாதி சர்ப்பமாவது சங்கரஜாதிசர்ப்பமாவது எந்தச்சர்ப்பம் கடித்தாலும் அந்தவிஷம் அசாத்தியமாமேயன்றி கைவில் இறங்காது, பிழைப்பானென்கிற நிச்சயம் கிடையாது.

## கடித்த சர்ப்பத்தின் கடினக்குறி.

மனிதனைக்கடித்த சர்ப்பமானது கடித்தவுடனே படத்தை விரித்து ஆடினாலும் தரையில் புரண்டாலும் கடித்த இடத்தில் ஆடிப், பின்பு அசைவற்றிருந்தாலும் கடியுண்டவனுக்கு விஷம் மீளாதென்றறிக.

## அற்ப விஷங்கள்.

பசி, தாகம், வியாதி, கீரியைக்கண்டு வெருண்டோடல் அக்கினிபட்டு மீண்டோடல், தோலுரித்தல், விஷங்கக்குதல், இவைகளால்மெலிந்த சர்ப்பங்களும் தர்ப்பைப்புதர், முள், எறும்புப்புற்று இவ்விடத்திலுள்ள சர்ப்பங்களும் மந்திரவாதிகள் இருக்கிற ஊரிலுள்ள சர்ப்பங்களும் வர்ணவீனம் (அதாவது கீழ்ஜாதிப்பாம்பு) களும் கடிக்குமாகில் அது அற்பவிஷமென்றறிக. இவ்விஷங்கள் எளிதில் நிவர்த்தியாகும்.

## கடியாக்கடி.

கடிவாயினிடத்தில் அணுவேனும் விஷப்பட்டால்மாத்திரம் எரிச்சல், அக்கினிபட்டகுணம், கடிவாயில்தினவு, நோவு, வீக்கம்,

எச்சில், கண்சோர்வு, சிற்றல், இக்குணங்கள் உண்டாகும். இந்த சகுணங்கள் இல்லாவிட்டால் அந்தமனிதன் சர்ப்பத்தின்வாய்க்கு சம்பந்தப்பட்டு விதிவசிவரால் மீண்டாலேயன்றி விதியும் விஷ மும் சம்பந்தப்படவில்லையென்றறிக. (அதாவது) பாம்பை அடுத்த பயந்து மருண்டு விரண்டோடி மயங்கிப் பிதற்றுகிறானென் றறிக. இந்த மயக்கம் தந்திரத்தால் நிவர்த்தியாகும்.

## விஷப் பரிட்சை.

சர்ப்பங் கடித்தவுடன் கசப்புவஸ்துக்களைத் தின்றால் அந்த சுவை மாறுபட்டு இனிப்பு, துவர்ப்பு, புளிப்பு, முதலியவைதோ ற்றினாலும் தலைமயிரைப்பற்றி யிழுத்தால் நோவு தெரியாதிருந் தாலும் காதைமூடினால் உள்ளிரைச்சல் இல்லாதிருந்தாலும் சூரி யன், சந்திரன், அக்கினி அல்லது விளக்கு இவைகள் கண்ணுக் குத் தோராதிருந்தாலும் தன்விரல் நகங்களைக் கிள்ளினாலும் விஷம் தலைக்கேறினதென்று நிதானித்து உடனே சகல சிகிச் சையும் செய்யவேண்டும்.

## உயிர்நிலை.

விஷத்தினால் உயிர் அடங்கி யிருக்குங்காலத்தில் கண்கள் மேல்நோக்கியிருக்குமாகில் உயிரானது ஊர்த்துவாகாயமானமேற் புறம்நோக்கி லலாடத்திலிருக்கிறதென்றறியவும். கண்களானவை கீழ்நோக்கி யிருக்குமாகில் உயிர் கீழடங்கி யிருக்கிறதென்றறிய வும். கண்களானவை பக்கங்கள்நோக்கியிருக்குமாகில் பக்கங்களில் ஒடுங்கியிருக்கிற தென்றறியவும். கண்களானவை விழித்தபடியே எதிர்நோக்கிச் சமபார்வையாய் இமைசிமிட்டாதிருந்தால் உடலை விட்டு உயிர் நீங்கிப்போய் விட்டதென் றறியவும்.

## உயிர் பரிட்சை.

விஷத்தால் இறந்தவனது தேகத்தில் பிரம்புகொண்டடிக் கில் தடித்தாலும், அல்லது வெறுப்பலோடு சிவந்தாலும், அச்ச வத்தை குளத்தில் போட்டு அழுத்தினாலும், அல்லது சுத்தஜலத் தை மேலேகொட்டினால் உடம்பு குளிர்ச்சிகண்டு ரோமஞ்சிலிர்த் தாலும், கைவிரல் கால்விரல்களைக் குலுக்கி யிழுத்தொடிக்கையில் நெட்டம் ஒடித்தாலும், தலைமயிரைப்பற்றி யிழுத்தால் சொற்ப வலியுடன் அருகளிப்பு கண்டாலும் தாதுக்களில் ஒன்றாவது சொற்ப நடையாகக்கண்டாலும் உயிர் அடங்கியிருக்கிறதென்று நிதானித்து உடனே பலவித சிகிச்சைகளையும் செய்தால் பிழை ப்பான். ஆதலால் விஷாதியினால் உயிர் அடங்கிய சவத்தை (90) தொண்ணூறு நாழிகைவரைக்கும் தகனம்செய்யக்கூடாதென்று சத்தியாருடம் சித்தராருடம் காகாருடம் இன்னும் சில சாஸ்திர ங்கள் கூறுகின்றன.



## சர்ப்பம் கடிப்பதற்குக் காரணம்.

தன் பசிக்காகவும், பயந்தகாலத்திலும், கோபத்தினாலும், சுபாவ குரூரத்தினாலும், தன்னை மிதித்தாலும், வைராக்கியத்தா லும், சாபத்தினாலும், ஏவலினாலும், தெய்வகதியினாலும், காலகதியினாலும், கோரைப்பல்விஷம் அதிகரித்தாலும், சர்ப்பம் கடிக்கநேரிடுகிறதென்றறியவும்.

## சர்ப்பவருக்கச் சத்துருவகை.

சர்ப்பங்களுக்கு இருதலைமணியன், செந்நாய், மயில், அன்னம், எருதின்குளம்பு, மின்னல், இடி, கிரி, காடி, பன்றி, செம்போத்து கருடன், முதலை, ஆந்தை, காக்கை, கூகை, புதுவெள்ளம், புகை மூடிய அனல் முதலியவைகளும் மனிதரும் சத்துருக்களாம்.

---

சங்கரஜாதியென்னும்

# பலஜாதி சர்ப்பபேதம்.

## பௌமசர்ப்ப ஜாதிபேதம்.

பௌமசர்ப்பம் என்பது தருவீகரம், மண்டலி, ராஜமந்தம் நிர்விஷம், வைகாஞ்சம் என ஐவகைஜாதியை உடைத்தாய் முறையே ௨௬, ௯௪, ௰௩, ௭, ௩ என்னும் ௮௨-பேதங்களைப் பெற்றிருக்கின்றது. ஆயினும் தருவீகரம் மண்டலி ராஜமந்தம் எனக்கூறிய மூவகைச் சர்ப்பங்களுக்குள் பிறக்கிற சங்கரசர்ப்பஜாதிபேதங் களுக்குக் கணக்கில்லையென்றறிக. இங்ஙனம்கூறிய ஐவகை சர்ப்பஜாதிகளுக்கும் பௌம சர்ப்பங்களெனப்பெயராம். பூமி சம்பந்தம் பௌமம்.

## தருவீகர சர்ப்பம்.

இது மிகுந்த வேக நடையைப் பொருந்தி படத்திலும் சரீ ராங்கத்திலும் வண்டுக்கண், கலப்பை, குடை, துவசம், அங்குசம் என்னும் உருவங்களையொத்த புள்ளிகளைப் பெற்றிருக்கும். இது இதன் விஷமானது கொஞ்சம் உஷ்ணத்துடன் புளிக்கும். இது தலைக்கேறினால் முகம், கண், நகம், சருமம், மூத்திரமாகிய இவை கள்கறுக்குதல், சிரசில்பாரிப்புடன்நோவு, தலைசுழலல், ?சுககனதி, வயிற்றிற்சூலை, எரிச்சல், பொருமல், முதுகில் குத்தல், எலும்பு, நரம்பு, இடுப்பு இவ்விடங்களில் வேதனை, தாளிறுகல், இருமல், இரைப்பு, கொட்டாவி நித்திரைபங்கம் அரோசகம் மலமூத்திரக்

கட்டு, நெஞ்சிற் களகளவென்னும் ஒருசத்தம், விக்கல், மயசகூடாமையான ஈனத்தொனி, ஏப்பம், வாயில் நொப்பும் நுரையும் விழுதல், அறிவுநீங்குதல் என்னும் இக்குணங்களுடன் வாதசுபாவக்குறிகளெல்லாம் உண்டாகும் இதற்கு எழுவேகம் உண்டு அவையாவன:—

1-வது வாயில் ரத்தங்கக்கி முகம் நேத்திராதி இந்திரியங்களுங்கறுத்து சரீரத்தில் பூச்சி யூருதல்போ லிருக்குதல்.

2-வது சர்வாங்கமும் வீங்குதல்.

3-வது சிரசு கனத்து கண்சிவந்து பல்லுகளில் நோயுண்டாகுதல்.

4-வது நுரைநுரையான வாந்தியும், எலும்பின் சந்துகளில் நோயும் பிறக்குதல்.

5-வது சகல கில்களிலும் உபத்திரவம் உண்டாகி விக்கலும் தாகமும் அதிகரிக்குதல்.

6-வது மார்படைப்புடன் தேகம் பாரித்து மூர்ச்சைகண்டு பேதியாகுதல்.

7-வது முதுகு, தோள், இடுப்பு ஆகிய இடங்களில் வேதனையுண்டாகி அவயவங்களில் கொதிப்பேறி சுக்கிலநாசம் அடைதல் என்பனவாம்.

இந்த எழுவேகத்தில் ஐந்துவரைக்கும் சிகிச்சைசெய்யலாம். அதற்குமேல் அவுஷதம் நாசமாம். இது கரண்டியைப்போல் பட்முள்ளதாகையால் தருவிகரசர்ப்பம் எனப் பேர்பெற்றது. இது நொச்சில், கருந்துளசி, தும்பை, கஞ்சாங்கோரை, பருத்தி, சிறுதேக்கு, கொட்டாங்கரந்தை என்னும் ஏழுசரக்குகளையும் சிறுநீரில் ஊரவைத்து நசியங்கட்டத்தீரும்.

அல்லது குப்பைமேனி, சுக்கு, மிளகு, வேளை, வெள்ளுள்ளி என்னும் ஐந்துசரக்கையும் சிறுநீர்விட்டுநறுக்கிப்பிழிந்து நசியஞ்செய்யவிஷமிறங்கும். சீந்தில்கிழங்கையாவது கோவைக்கிழங்கையாவது சிவிச்சிவி ஒரு ஆழாக்குரசம் உள்ளில் தங்கும்படிக்குத் தின்னச்சொல்ல விஷம் மீளும்.

## மண்டலி சர்ப்பம்.

இது மந்தநடையை உடைத்தாய் சிரசில் அநேகபேதவன்னமாய் மண்டலாகார உருவங்களையொத்த புள்ளிகளைப் பெற்றிருக்கும். இதன் விஷமானது மஞ்சள்நிறத்துடன் காரமாக உறைக்கும். இது தலைக்கேறினால் கடிவாயில் கடுமையாயிருக்கும், வேதனையுடன் குத்துதல், எரிதல், நோதல், முகம் மினுமினுத்து மஞ்சளைப்போலிருத்தல், அவ்வாறே சகலவஸ்துக்களும் காணப்படுதல் தலைநோதல் வயிறுகறுத்தல் வாயுவால் சுரம், தாகம், நரம்புகளுப்புதல், நாசியிலும், வாயிலும் அக்கினிச்சுவாலைபோல் சுவாசம்வருதல், பாதாதிகேசம்வரைக்கும் புகைசூழ்ந்ததுபோ லிருத்தல், மூர்ச்சை. சீதளத்தில் விருப்பமென்னும் இக்குணங்களுடன் பித்தசுவாசக்குறியெல்லாம் உண்டாகும். இதற்கு எழுவேகமுண்டு அவையாவன:—



1-வது குளிர்ச்சியான ரத்தம் வடிந்து வாயுங் கண்ணுங்கறுத்து தேகத்தில் பூச்சி யூருதல்போ லிருத்தல்.

2-வது தாகமும் வீக்கமுங் காணுதல்.

3-வது பற்கள் கறுக்குதல்.

4-வது சர்வாங்கத்திலும் எரிச்சலெழும்புதல்.

5-வது சப்ததாதுக்களும் துர்ப்பலம் உண்டாக்கல்.

6-வது வாழைத்தண்டைப்போல் தேகஞ் சில்லிடல்.

7-வது தன்னை மறத்தல் என்பனவாம்.

சுருட்டை, பனையன், விரியன், முதலிய பாம்புகளுக்கு மண்டலிசர்ப்பமெனப் பெயராம். இவ்விஷங்களுக்கெல்லாம் புங்கம்வேர், விளாம்வேர், கிருஷ்ணகுரிகைவேர் இம்மூன்றையும் சமமாக நிறுத்து முருங்கைப்பட்டை ரசத்தினால் அரைத்துக் கடிவாயில் நன்றாக லேபனம்பண்ணி உள்ளுக்குப் பாகலிலை ரசங் கொடுக்க இறங்கும். வாகைப்பூவைப்பாலில்பிசைந்து வடிகட்டிக்குடிக்கில் திரணமண்டலிவிஷந்தீரும். திரணமண்டலி என்பது புல்விரியன்.

## ராஜமந்த சர்ப்பம்.

இது அதிக மந்தநடையை உடைத்தாய் சிரசிலும் உடலின் மேலினும் கீழிலும் பக்கங்களிலும் மினுமினுத்து சித்திரவன்னங்களையொத்த புள்ளிகளைப் பெற்றிருக்கும். இதன் விஷமானது குளிர்ச்சியுடன் தித்திக்கும், இது தலைக்கேறினால் கடிவாயில் குளிர்ச்சியோடு வீங்குதல், சோம்பல், முகமும் நகமும் வெளுக்குதல், சரீர நமைச்சல், பாரிப்பு, மறத்தல், கேசாதிபாதம்வரைக்கு மினுமினுத்து சில்லிடுதல், சிரசும் கண்ணும் நாசியும் குளிர்ச்சியாகுதல், சிரோபாரம், சுரம், வாயினிப்பு, அரோசகம், வாந்தி, இருமல், மேற்சுவாசம், தாகம், பொறுத்துப்பொறுத்து பெருமூச்சுவருதல், நெஞ்சிற் களகளவென்னும் ஒரு சத்தத்துடன் தினவு, அடிக்கடி அலறல், ரோமச்சிலிர்ப்பு, வாயில் நொப்பும் நுரையுந்தள்ளுதல், மார்புதுடித்தல், மனச்சங்கடம், மயங்கிய நித்திரையென்

னும் இக்குணங்களுடன் சிலேஷ்மகபாவக்குறி யெல்லாம் உண்டாகும், இதற்கு ஏழுவேகம் உண்டு அவையாவன:—

1-வது ரத்தமானது வெண்மையாய்முறிந்து தேகமுங் கண்ணும் வெளுக்குதல்.

2-வது சர்வாங்கமும் வீங்குதல்.

3-வது கண்ணிலும் மூக்கிலும் வாயிலும் ஜலம்வடிதல்.

4-வது சிரோபாரமும் தாள்பிடிப்பும் உண்டாகுதல்.

5-வது பேசக்கூடாதவருத்தமும் குளிர்சுரமுங்காணுதல்.

6-வது தேகங்கனத்து சில்லிடுதல்.

7-வது அவயவங்களெல்லாங் கொதித்து மூர்ச்சையுண்டாகி தன்னை மறக்குதல் என்பனவாம்.

மலைப்பாம்பு தாசரிப்பாம்பு கட்டுவிரியன் முதலியவைகளுக்கு ராஜமந்தம் எனப்பெயராம்.

இவைகட்கு காட்டுக்கருணை, பழுபாகு, சீந்தில், கோவையென்னும் கிழங்குவகை-௪ சுண்டை, கிளிமூக்கு, வெட்டிவேர், செந்தொட்டி, நீலி,மருக்காரை, வெற்றிலை, பேய்ப்பீர்க்கு,பாலை,வுமத்தை,செப்புநெருஞ்சில், வெண்சாரணையென்னும் வேர்வகை 12-ம் ஆகிய இப்பதினாறுவகையையும் தனித்தனியே வஸ்திரகாயப் பொடிசெய்து சமமாகநிறுத்து கலந்துவைத்துக்கொண்டு இதில் அரைப்படியும் அரிசி அரைப்படியும் சேர்த்துப் பொங்கி உண்ணக்கொடுத்தால் விஷமேறுது ஏறியவிஷ மிறங்கும்.

## கௌதேர சர்ப்பபேதம்.

கௌதேரசர்ப்பமானது 92-விதப்படும். இவைகளின் விஷங்கள் தருவீகாசர்ப்பவிஷங்களைப்போலவேஇருக்கும். ஆனால் இவைகளில் நின்றும் பிறக்கின்ற சங்கராசாதிகள் அநந்தமென்றறிக. இதனைச் சாரைப்பாம்பென்பார்.

## நிர்விஷ சர்ப்பபேதம்.

நிர்விஷசர்ப்பமானது திவ்யகம், சாலகம், பாதகம், விருட்சசாயி, கலதி,புட்காம், க்ஷீரிகாகினி,சரிவாகி, வருஷாப்திகம், சோதிரதம், சுட்கம்,கோத்திரம், பலாசகம், கசபட்சம்,பிலவோற்பேதசம்என 16-விதப்படும்.நிர்விஷமென்பதுவிஷமில்லாதசர்ப்பமாம்.

## நிர்விஷ லக்ஷணம்.

விஷமில்லாத சர்ப்பங்கள் கடித்தால் அக்கடிவாயில் ஆமைமுதுகைப்போல் தடித்து அச்சருமங் கறுத்து அற்ப சோம்பலுண்டாக்கும்.



## வைகரஞ்ச சர்ப்பம்.

இது மூவிதபேதங்களை உடையதாயிருந்தாலும் இவற்றின் விஷம் அதிகமான வேகத்தைப் பெற்றிருக்கும். இதற்குத் தருவீகர சிகிச்சை உதவும்.

## ஆண்சர்ப்பம்.

இது அகலமுள்ள படத்தையும் அதிகநீடத்தையும் மிகுந்த சிறலையும் பெற்றிருக்கும். இவ்விஷம் தலைக்கேறினால் மேல்நோக்கியபார்வையும், வலதுகால் பூமியில் பாவாதிருக்குதலும் ஊர்த்துவகாயத்தில் மிகுந்த பலவீனமென்னும் குணங்களுமுண்டாம்.

## பெண்சர்ப்பம்.

இது குறுகிய படத்தையும் அற்பச் சிறலையும் பெற்றிருக்கும் இவ்விஷத்தினால் கீழ்ப்பார்வையும், இதினுடையகால்பூமியில் பாவாதிருத்தலும் அதேகாலத்தில் பலவீனமுமுண்டாகும்.

## அலிசர்ப்பம்.

இது மிருதுவுடன் நீண்ட உருவத்தையும் வெளுத்தபடத்தையும் மந்தநடையையும் குறைந்த தொனியையும் அற்பகோபத்தையும் உடையதாயிருக்கும். இவ்விஷத்தினால் சனத்தொனி, பேதி, நடுக்கல், பயம், சுரம், புணர்ச்சியிலிச்சை, சரீரம் காற்றில் பறப்பதுபோலிருத்தல் என்னும் இக்குணங்களுண்டாகும். இச்சர்ப்பம் பிறந்த 3-தினத்தில் விருத்தியடைவதும் திவ்விய சர்ப்பத்தால் அடிபடுவதுமாயிருக்கும்.

## மலட்டுச்சர்ப்ப விஷம்.

இது சீக்கிரத்தில் அநந்தம் வேதனையைப் பிறப்பித்தாலும் முக்கியமாக வியர்வையை விஸ்தாரம் ஒழுகச்செய்யும்.

## பாலியசர்ப்ப ஆண்விஷம்.

இது இடதுகண்ணைக் கோவைப்பழம்போல் சிவக்கச்செய்யும் பெண்சர்ப்பக் குட்டி விஷத்திற்கு இக்குணம் கொஞ்சம் பேதிக்கும்.

## யௌவனசர்ப்ப ஆண்விஷம்.

இது வலப்பக்கத்தில் கடிக்கும், இவ்விஷத்தால் அப்பக்கத்துக்கண் இரத்தம்போற்சிவக்கும். பெண்சர்ப்பம்இடப்பக்கத்தில் கடிக்கும், இவ் விஷத்தினால் தடிப்புத்தடிப்பாகச் சில ரோகங்கள் பிறக்கும்

## விருத்தசர்ப்ப விஷம்.

இது கடித்தவாயில் வீக்கம், அற்பநோய், பிதற்றல், இவைகளைத்தரும்.

### கேர்ப்பசர்ப்ப விஷம்.

இது சிரசு, உதடு, வயிறு, தொடை ஆகிய இடங்களில் நோதல், நாவுகறுத்தல், உண்ணாக்கு வளருதலென்னும் இக்குணங்களை உண்டாக்கும்.

### சூதிகாசர்ப்ப விஷம்.

இது வயிறு உளைதல், வாயில் ரத்தங் கக்குதல், மார்படைப்பு, கண்ணில்நோயுடன் சிவத்தல், சர்வாங்கமும் ஊசியாற் குத்துவதுபோல் மிகுந்த குத்தலென்னும் இக்குணங்களை யுண்டாக்கும். முட்டையிட்டசர்ப்பத்திற்கு சூசிகாசர்ப்பமெனப்பெயராம்.

### கோனச சர்ப்பம்.

இது அதிகவெயிலினாலும் அலைச்சலினாலும் அடிபட்ட பசுக்களின் நாசிக்குள் சனித்து ஊர்த்துவ பார்வையுடன் அற்பஉருவமும், நீண்ட நாவும், சிரசினால் கத்துந் தொனியுமுடையதாய் வெளிப்பட்டுத்திரியும், பசுவின் நாசியால் பிறப்பதால் கோனச சர்ப்பமெனப் பெயர்பெற்றது.

### வழிச்சர்ப்ப விஷம்.

இது எப்போதும் கடிப்பதற்கே வழிகட்டிக் கொண்டிருக்கும். இப்பாம்பு கடித்தால் மரணக்குறிகளெல்லாம் சீக்கிரத்திலுண்டாகும். இந்த விஷம் மணிமந்த்ர ஔஷதத்தினால் நீங்குமென்றறிக.

### விஷவிருத்தி லட்சணம்.

சர்ப்பக் கடியினால் அற்ப விஷம் ஏறியிருந்தாலும் அதுபசி, தாகம், தூக்கம், பயம், கோபமுமிகுந்து [illegible]கப்பு, அக்கினித்தொழிலிருக்குதல், சுடுகையான நிலத்தில் [illegible]க்குதல், கீழ்காற்றில்திரிதல், இரட்டை அலரிப்பூவை முகருதல், சரீரகட்டம, பேதி, அசீரணம், துர்ப்பலம், பித்தவாயுமுதலிய ரோகத்தினால் மெலிதல் யானை, மேகம், எலி முதலிய தொனிகளை உற்றுக்கேட்குதல் என்னும் இவைகளினால் மகா விஷம் மாறுமென்றறிக.

### சர்ப்பவிஷபேதகம்.

சகலமான சர்ப்பவிஷத்திற்கும் வாயுவேகம், தேயுவேகம், வருணவேகமென மூன்றுவிதவேகமும் இவற்றுள் உட்பிரிவுமுண்டு.

### 1-வது வாயுவிஷ வேகநிதானம்.

வாயுவைப்பற்றி விஷமேறும்போது எட்டுவித வேகமுண்டாகும். அவையாவன் 1-வது மூர்ச்சையும் மிகுந்த வியர்வையுமுண்டாகும். 2-வது சரீரம் வெதுப்புதல் 3-வது கண்சொருவுதல் 4-வது செவியை அடைக்குதல் 5-வது நெஞ்சில் கபங்கட்டுதல்



6-வது அறிவு மாறுதல், 7-வது மேல்மூச்சுவாங்குதல், 8-வது உயிர்நீங்குதலென்பனவாம். ஆனால் இவ்வேகம்பிறக்குமுன் விஷமானது கடிவாயில் 50-மாத்திரைக்காலம் நின்று பின்பு தேகமெங்கும் பரவிச் சிரசிலேறும்.

### 2-வது தேயுவிஷ வேகநிதானம்.

தேயுவென்னும் பித்தத்தைப்பற்றி விஷமேறும்போது 10-வித வேகமுண்டாகும். அவையாவன:—1-வது முகங்கறுத்து கண்கள் சிவக்குதல், 2-வது ரோமங்களின் முனைபிளந்து சிறுநீர் கறுத்திறங்கி முகம்வெளுத்தல், 3-வது வேதனையுடன் சரீரம் நீண்டு சிந்தைமயங்கி வாய்குளருதல், 4-வது கோபம்பிறந்து குடலில் எரிச்சல்கண்டு தேஜஸ்மாறி நாசியால் ஜலம்வடிதல், 5-வது தேகமுங் கண்ணும் விடவிடத்து ஆடுதல், 6-வது அங்கம் பதைத்து இளைத்து நாசியில் ஜலம்பெருகி மொழிமாறி பல்லைக் கடிக்குதல், 7-வதும் 8-வதும் கபங்கட்டி சுவாசமெழும்பி ஊர்த்துவ திருஷ்டியாகப் பார்க்குதல், 9-வது உயிர் அடங்கியிருக்குதல், 10-வது உடலைவிட்டு ஆவி நீங்குதல் என்பனவாம். இவ்வேகம் பிறக்குமுன் விஷமானது கடிவாயில் 150-மாத்திரை நின்று பின்பேறும்.

### 3-வது வருணவிஷ வேகநிதானம்.

வருணனென்னும் சிலேஷ்மத்தைப்பற்றிவிஷமேறும்போது பத்துவிதவேகம் உண்டாகும். அவையாவன:—1-வது தேகஞ் சிவந்து ரோமஞ்சிலிர்க்குதல், 2-வது வாயுலர்ந்துதேகங்கறுத்து வெதும்புதல், 3-வது தேகத்திற்குட்புறத்திலுளைக்குதல் 4-வது கபம் அதிகரித்து மனங்கலங்கி தத்தளிக்குதல், 5-வது தலைநடுக்கலும் அறிவழிதலும் பிறக்குதல், 6-வது கண் மலரவிழித்து மேல்நோக்குதல், 7-வது அவயவம் முறைக்குதல், 8-வது சரீர வியாபாரமடங்குதல், 9-வது சுக்கிலம் கசிக்குதல், 10-வது உயிர் நீங்குதல் என்பனவாம். இவ்வேகம் பிறப்பதற்குமுன் விஷமானது கடிவாயில் 150-மாத்திரை நின்று பின்பு ஏறும்.

### கருநாகவிஷம்.

இது ஔஷதாதிகளாலிறங்கினாலும் இரண்டொருதினங்களையும் பாரிசவாதத்தைப்போல்செவிடாக்கும். இந்தவிஷம் நிலப்பனைக்கிழங்கும் உப்பிலாங்கொடிவேரும் அரைத்து சிறு எலுமிச்சங்காய்ப்பிரமாணம் முகூர்த்தத்திற் கொருதரமாக 8-தரம் கொடுக்கில் முறியும்.

### சிறுநாகம்.

இது கருப்பை அகலமுள்ள படத்தையும் பருத்த ஈர்க்கையொத்த உடலையும்பெற்று தாழைமலர்க்குள் வாசமாயிருக்கும். இவ்விஷத்திற்கு மகாவிஷ சிகிச்சைவேண்டும் இதனைப் பூநாகம், புல்நாகமென்பர்.

### விரியன்பேதம்.

விரியனென்பது பெருவிரியன், ரத்தவிரியன், செவ்விரியன், நீர்விரியன், பொறி விரியன், புல் விரியனென ஆறுவிதப்படும். இவைகள் பத்திரகாளியினுடையிலிருந்து பிறந்ததாகச் சிலர் சொல்லுகிறார்கள்.

### பருவிரியன்விஷம்

இது மயக்கம், தாபம், உறக்கம், வெப்பமென்னும் இவைகளையுண்டாக்கும். ஆனால் கடிவாயில் ரத்தமும் வீக்கமும் எரிச்சலும் பிறக்கும்.

### ரத்தவிரியன்விஷம்.

இது வயிற்றில் வியாபித்தால் அவ்வயிற்றில் வலியையுண்டாக்கிக் கொல்லும் அப்போது கடித்த வாயில் உதிரமும் மேலில் தடிப்பும் பிறக்கும் இதுதவிர மற்ற நான்குவித விரியன் விஷத்தினால் நித்திரை மயக்கமுண்டாகுமென்பர். இவைகளுக்கு மகிழம்பருப்பு, வசம்பு, உள்ளி, மிளகு, சுக்கு, கள்ளிப்பால், வேப்பெண்ணெய், இலுப்பைப்புண்ணாக்கு, ரசம், வெண்காரம், மருக்காரைப்பழம், பூவன்பழம் இப்பனிரெண்டும் வகைக்குவிராகனிடை 1-ம் வெற்றிலை 14-ம் ஒன்றாயரைத்து சீலையில்தடவி காயவைத்துக்கொண்டு சிறுநீரில் நனைத்து நாசியிற்பிழிய சகல விரியன்விஷங்களுந் தீரும்.

### வழலைச்சர்ப்பவிஷம்.

இது கடித்தவிடத்தில் ரத்தமும் வாயில் அனலும் உண்டாக்கும். இதற்குசிகிச்சை ஏலம், மிளகு, வக்கணத்திவேர் இம்மூன்றும் சமனாகக்கூட்டி கர்ப்பூரவள்ளிச் சாறுவிட்டரைத்து உலர்த்தி அம்மாத்திரையைத் தண்ணீரி லுரைத்துக் கடியுண்டவன் கண்ணில் கலிக்கமிட விஷந்தீரும்.

### கருவழலைச்சர்ப்பவிஷம்.

இது சரீரத்திற் காங்கையோடு அதிக வியர்வையும் உள்ளங்கால் உள்ளங்கையில் சிவப்பும் கோழையால் மார்பில் அடைப்பும் பிறக்கும்படிக்குச்செய்யும், இதனால் அநந்தம்வேதனையுமுண்டாக்கும். இதுநீலஞ்சோதியும், கடுரோகணியும், கோழிமுட்டைவெண்கருவும் சமமாகக்கூட்டி யரைத்துப் பசும்பாலிற் கலந்து உள்ளுக்குக்கொடுக்கத் தீரும்.



## மூர்க்கன்.

இது கடித்தவிடத்திலும் முதுகிலும் வேதனை பிறப்பதுந்தவிர அவ்விஷத்தினால் வாயுங் கழுத்தும் முறுக்கிக்கொள்ளுதல் குரல் நெரிதல், தேகம் பதறல், தலைசுழலல் என்னும் இக்குணங்களுண்டாகும். இவ்விஷம்காடியைத்தெளித்து வன்னியிலையையிடித்து அரையாழாக்குச்சாறுபிழிந்து உள்ளுக்குக்கொடுத்துமேலுக்கும் அத்துவாலையிடத்தீரும். இதற்குக் கொம்பேறிமூர்க்கன் சாரைமூர்க்கன், பனையேறிமூர்க்கன் எனப்பெயராம். இது தன்னால் கடியுண்டவன் சுடுகாட்டில் தகிக்கப்படுகின்றானாவென்று உயர்ந்தமரக்கொம்பிலேறிப் பார்க்குமென்னும் அவ்வளவு தெரிந்தவர்களே உடனே வைக்கோல்சுமை முதலியவைகளை அச்சுடுகாட்டிவிட்டுப் புகைக்கக்கண்டு அவன் இறந்தானென் றிறங்கி விடுமென்றும் அதன்பின் சிகிச்சைசெய்யில் விஷம் திரும்புமென்றும் சொல்வது உலகவழக்கம்.

### மயக்குச் சர்ப்பம்.

இது கண்ணில் விஷத்தையுடையது, இப்பார்வை சற்றுநேரம் படினும் உடனே அவர்களுக்கு மயக்கமும் கண்களில் கழற்சியும் உண்டாகும்.

### முறக்கஞ் சர்ப்பம்.

இது சரீரமெல்லாம் திருகுக்கள்ளியைப்போல் முறுக்கிக்கொள்ளுதலையும் முறத்தால் தெள்ளுவதுபோல் பதறலையும்உண்டாக்கும்.

### சாரைப்பாம்பு.

இது நீண்ட உடலையும் வேகநடையும்பெற்று மனிதரை வாலாலடிப்பதும் அன்றி பாதமுதல் மார்புவரைக்கும் சுற்றி இடுப்பையுமொடிக்கும் இதில் வெண்சாரை, கருஞ்சாரை, செஞ்சாரை, மஞ்சட்சாரையெனநான்குபேதமுண்டு. அவைகளும் இவ்வாறேசெய்யும். இவைகளைப்பார்த்த எருமைமாடுகளுக்கு மாலைக்கண் உண்டாகுமென்பர்.

### புடையன்.

இது நீண்ட உருவத்தையும் அழுக்குநிறத்தையும் பெற்று வாலின்முனையால்குத்தி தேகத்தில் படைகளை விஸ்தாரமுண்டாக்கும்.

### மண்ணுளிப்பாம்பு.

இதுதம்பாக்கு, வெள்ளி, ரத்தம் ஆகிய இவைகளின் நிறத்தைப்பெற்று நீண்டபயிற்றங்காய்ப்பிரமாணமுள்ளதாயிருக்கும். செவியில் நுழையில் அபாயமாம். இவ்விஷத்தினால் தேகமுழு

வரும் சிறுசிறு தடிப்பும் நமைச்சலுமுண்டாகும். இதனை சிறு பாம்புக்கடியென்பர். இத்தடிப்பு எண்ணெய்விட்டுக்கலந்த கூழை ஏழுநாள் சாப்பிடத்தீரும்.

### காலியாங்குட்டி.

இது ஒருசாண் இரண்டுசாண் நீளத்துடன் தேஜசு குறைந்திருக்கும். ஆனால் கடிக்க அறியாது. கடிக்கில் பெருஞ்சிகிச்சை செய்யவேண்டும்.

### கண்குத்திப்பாம்பு.

இது பசியநிறத்துடன் நீண்ட உருவத்தையும்பெற்று விருட்சங்களில் வாசம்பண்ணுவதாம், நேரிட்டவர் கண்களைக் குத்துவதுமாயிருக்கும். இதுவே பச்சைப்பாம்பாம்.

### வேண்ணாந்தைப்பாம்பு.

இது பருத்த தேகமும், பனைமரம், தென்னை முதலிய பிரமாணங்களையும் உடம்பெல்லாம் வழுவழுப்புமுள்ளதாய் வாலும் தலையும் ஒரேமொத்தமாய் மேலில் வெளுத்த வரிகளைப்பெற்று கோழி, ஆடு, மாடு முதலியவைகளை விழுங்குவதாயிருக்கும், சிலர் யானையை விழுங்குமென்றும் சொல்லுகிறார்கள். இது மலைப்பாம்பு தாரிப்பாம்பெனச் சொல்லப்படும்.

---

# சில்லரைவிஷவகுப்பும்

## அதற்குச்சிகிச்சையும்.

### 1-வது ஓணான்.

இது கடிக்கில் அங்கு பிறையைப்போல் காயமுண்டாகும். அப்போது வீக்கம், நமைச்சல், குத்தல், நோய், சோருதல், மலத்தில் பலநிறம் என்னும் இக்குணங்களுண்டாகும். இவ்விஷத்திற்கு மூங்கில்குருத்து ரசம் காலாழாக்கில் மிளகுச்சூரணம் பலம் கால்சேர்த்து 5-நாள் 2-வேளையும் சாப்பிடத்தீரும். இது பச்சைபோணானுக்கும் தவளைக்கும் உதவும்.

### 2-வது தவளை.

இது கடிக்கில் அதிக சோம்பலான நித்திரையும் மூர்ச்சையும், கறுத்துப் பரவுகின்ற சொறியுமுண்டாகும். இவ்விஷம் ஓட்டலாறு, லவணம், உத்தாமணிவேர் இம்மூன்றையும் சமமாக நிறுத்துச் சிறுநீரால் அரைத்துக் குழம்பாக வைத்துக்கொண்டு கடிவாயிலும் தேகமுற்றிலும் 8-நாள் லேபனம்பண்ணத்தீரும். லேபனமென்பது பூசித்தேய்த்தல்.



### 3-வது அடவிஈ.

இது கடிக்கில் அதிகநித்திரையும் மிகுந்தமூர்ச்சையும் உண்டாக்கும்.

### 4-வது வீட்டுப் பல்லி.

இது கடிக்கில் நோய், வியர்வை, வீக்கம், எரிச்சல், மார்பு வேதனை, பொடிச்சிரங்கு எழும்புதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும் இவ்விஷம் குதிரைச்செவி மரத்தின்வேர், பெருங்காந்தைவேர் இவ்விரண்டும் வகைக்குப்பலம் 2-ஆகச் சேர்த்து அதை பாகையிலைச்சாறும் பசும்பாலும் சமமாகக் கலந்துவிட்டு அரைத்து தடிப்பாக வைத்துக்கொண்டு கடிவாயில் லேபனம் பண்ணி உடம்பெங்கும் தவாலையிடத்தீரும். இவ்விஷம் கொடியதென்றும் அதிவிரைவில் மகாவிஷசிகிச்சைகளைச்செய்யவேண்டுமென்றும் இல்லாவிடில் ஒருவருஷத்திற்குள் மரணமுண்டாகுமென்றும் சிலநூல் சொல்லுகின்றது.

### 5-வது காட்டு மசகம்.

இது கடிக்கில் அவ்விடத்தில் நமைச்சலும் அற்பவீக்கமும் வேதனையுமுண்டாகும் இது அசாத்தியமாயினும் வேலியிலை கலிக்கத்தாலும் அவ்வேரின் கஷாயத்தாலும் போம். மசகம் என்பது கொசுவு.

### 6-வது மக்ஷிகா.

இது கடித்தாலும் கொட்டினாலும் அவ்விடத்தில் வீக்கம், நமைச்சல், எரிச்சல்முதலியகுணங்கள் உடனேயுண்டாகி அடங்கிப் பின்பு தடித்து உபத்திரவமுண்டாக்குவதுந்தவிர அத்தடிப்பில் மாறாமல் சிலைத்தண்ணீரும் வடியும், மக்ஷிகா என்பது குளவி முதலிய வண்டுகளாம்.

### 7-வது மலைப்பிபீலிகா.

இது கடிக்கில் அவ்விடத்தில் நீர்த்துளியைப்போல் தடித்தல், அதிகநோய், நெருப்பால்சுட்டதுபோல்எரிச்சல், நமைச்சல், தேகத்தில் அழலையென்னும் இக்குணங்கள் உண்டாகும். பிபீலிகா என்பது எறும்பு.

### 8-வது சிலந்திப்பூச்சியின் பேதம்.

சிலந்திப்பூச்சி 28-பேதப்படும். அதன்விவரம் வாதத்தில்-7, பித்தத்தில்-7, சிலேஷ்மத்தில்-7, சங்கீரணத்தில்-7, ஆக 28-ஆம். அன்றியும் பிரத்தியேகச் சிலந்தி என்பதொன்றுண்டு.

### வாதச்சிலந்திகளின் போதுக்குணம்.

இவைகள் வெளுப்பு, சிவப்புநிறத்தையும் ஆசனத்தில் சித்திரங்களானமெல்லிய நூலையும் உள்ளவைகளாயிருக்கும் இவ்விஷங்களால் இருமல்முதலியவாதரோககுணங்களெல்லாமுண்டாகும்.

### 1-வது பீதச்சிலந்தி விஷம்.

இது தலைநோயும், அரோசகமும் சுரமுமுண்டாக்கும்.

### 2-வது குமுதச்சிலந்திவிஷம்.

இது பட்டவிடத்தில் கொப்புளங்களெழும்பி அதில் நின்றும் மாறாது சீழ்வடிவதும் எரிச்சல் பிறப்பதுமாக இருக்கும். இதனால் இரைப்பும் நெஞ்சடைப்புமுண்டாகும்.

### 3-வது மூலச்சிலந்திவிஷம்.

இது அதிக கொப்புளங்களையும் அக்கினிக் குணத்தையும் உண்டாக்கும்.

### 4-வது ரத்தச்சிலந்திவிஷம்.

இது பட்டவிடத்தில் சிவந்து கடித்தது அதைச்சுற்றிலும் சிறியதான கொப்புளங்களெழும்பி அதில் நின்றும் ஓயாது ரத்தமும் சீழும் வடிந்துகொண்டேயிருக்கும். இதனால் இரைப்பும் பேதியுமுண்டாகும்.

### 5-வது சித்திரச்சிலந்திவிஷம்.

இது பட்டவிடத்தில் சிவந்தகொப்புளங்களெழும்பி அவைகள் பழுத்து உடைந்தபின்பு அங்கு கறுத்த ரணமாகி அதில் நின்றும் நுரைபோல் சீழ்வடிதலாயிருக்கும், இதனால்தலையிலும் கில்களிலும் நோய், சுரம், இரைப்பு, வீக்கமென்னும் இத்தியாதி குணங்கள் உண்டாகும்.

### 6-வது சந்தானிகச்சிலந்திவிஷம்.

இது பட்டவிடத்தில் சகிக்கக்கூடாதகுத்தலும் விரணமும் உண்டாகும்.

### 7-வது மேகச்சிலந்திவிஷம்.

இது நீலநிறமுள்ளது. இவ்விஷத்தினால் அந்நிறக் கொப்புளங்களெழும்பும்.

ஆக வாதச்சிலந்தி விஷங்கள் 7-ம் முற்றிற்று.

---



### பித்தச்சிலந்திப்பூச்சிகள் போதுக்குணம்.

இவைகள் கருமை பொன்மைகலந்த நிறத்துடன் முகத்தில் அனலையும் ஆசனத்தில் தாமரை நூலைப்போல் நூலையுமுள்ளவைகளாயிருக்கும். இவ்விஷங்களால் முக்கியமாகப் பித்தரோககுணங்கள் உண்டாகும்.

### 1-வது கபிலாசிலந்திவிஷம்.

இது கண்களினால் பார்க்கில் தேகமுற்றும் சிவந்த தடிப்பும் வாய்நீர் ஊறலும், மயிர்க்கால்களில் எரிச்சலும், தலைப்பாரமும் உண்டாகும்.

### 2-வது அக்கினிமுகச்சிலந்திவிஷம்.

இது அதிக நோயையும் நெருப்பாற்சுட்ட கொப்புளங்கள் போல் கொப்புளங்களையும் பிறப்பிக்கும். இதனால் தாகம், எரிச்சல், நடுக்கல், மூர்ச்சை, ரத்தம்வடிதல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

### 3-வது பீதச் சிலந்தி விஷம்.

இது பட்டவிடத்தில் கட்டைநெருப்பாற் சுட்டதுபோலிருத்தல், மூர்ச்சை, வாந்தி, சிரோவேதனை, சுரம், அரோசகம், சூலை, மலமும் மூத்திரமும் மஞ்சளித்தல் என்னும் இக்குணங்கள் உண்டாகும்.

### 4-வது பதுமச்சிலந்தி விஷம்.

இது பட்டஇடத்தில் தாமரைப்பூவைப்போல் வட்டவடிவான கொப்புளம உண்டாவதும் பின்பு எழும்புவதும் அதில் மாறாது ஜலம்வடிதலும் நோயுண்டாதலுமாயிருக்கும்.

### 5-வது மூத்திரச்சலந்திவிஷம்.

இதுபட்டவிடத்தில் கருப்பு சிவப்பு நிறமான கொப்புளமெழும்பித் துர்க்கந்த விரணம் பிறக்கும். இதனால் இருமல், இரைப்பு, சுரம், வாந்தி, தாகம், மூர்ச்சை, பிரமையென்னும் இக்குணங்கள் உண்டாகும்.

### 6-வது சுவேதச்சிலந்திவிஷம்.

இது பட்டவிடத்தில் விசர்ப்பிரோகக் கொப்புளம்போல் கொப்புளமும் எழும்புவதன்றியும் அதில் மாறாது ஜலம்வடிதல், தாகம், மூர்ச்சை, சுரம், நோவுஎன்னு மிக்குணங்களுண்டாகும்.

### 7-வது கறுப்புச்சிலந்திவிஷம்.

இது பட்டஇடத்தில் கறுத்த வீக்கமுண்டாகி ரணம் பிறக்கும். அதில் துர்க்கந்தத்துடன் சிறபேதமான ரத்தமும் சீழும் மாறாது வடிந்துகொண்டேயிருக்கும்.

ஆக பித்தச்சிலந்தி விஷங்கள் 7-ம் முற்றிற்று.

### சிலேஷ்மச்சிலந்திப்பூச்சிகளின் பொதுக்குணம்.

இவைகள் வெண்மைநிறத்தையும் குடலில் நீலநிறத்தையும் ஆசனத்தில் சிவந்தநூலையு முள்ளவைகளாயிருக்கும். இவ்விஷங்களால் சிலேத்துமரோக குணங்களெல்லா முண்டாகும்.

#### 1-வது பாண்டுச்சிலந்திவிஷம்.

இது பட்டஇடத்தில் வீக்கத்துடன் கனத்த ரணம் பிறக்கும். இதனால் சுரமும் ரோமச்சிலிர்ப்பும் சிரோபாரமு முண்டாகும்.

#### 2-வது ரத்தபாண்டுச்சிலந்திவிஷம்.

இது பட்டவிடத்தில் வெளுத்துத் தடித்து விரணமாகி ரத்தம் வடியும்.

#### 3-வது வண்டுச்சிலந்திவிஷம்.

இது பட்டவிடத்தில் வண்டைப்போல் கறுத்த கொப்புளம் உண்டாகி அதைச்சுற்றிலும் எரிச்சலைத்தருகின்ற சிறுசிறுகொப்புளம்பிறக்கும், அன்றியும் தேகமெல்லாம் கறுத்த மச்சங்களும் எழும்பும்.

#### 4-வது பிங்கச்சிலந்திவிஷம்.

இது பட்ட இடத்தில் கொப்புளமெழும்பி அதில்நின்றும் ரீத்தமொழுகும் இதனால் சுரம், நோய், வீக்கம், அதிக எரிச்சல், தாகம் என்னும் இக்குணங்களுண்டாகும். பிங்கம் என்பது மஞ்சள்நிறம்.

#### 5-வது திரிமண்டலச்சிலந்திவிஷம்.

இது பட்டஇடத்தில் கறுத்தவிரணம் உண்டாகி அதில் நின்றும் ரத்தம்வடியும், இதனால் அரோசகம், கண்ணெரிச்சல், உடம்பிலும் முகத்திலும் மச்சங்களெழும்புதல் என்னும் இக்குணங்களுண்டாகும்.

#### 6-வது துர்க்கந்தச்சிலந்திவிஷம்.

இது பட்டஇடத்தில் பேய்ச்சுரைப் பிஞ்சைப்போல் கட்டியெழும்பி அதைச்சுற்றிலும் நெருங்கிய சிறுசிறு கொப்புளம் எழும்பும். இதனால் விசர்ப்பிகுணமும் வியர்வையும் துர்க்கந்தமும் எரிச்சலும் பிறக்கும்.



#### 7-வது சித்திரமண்டலிச்சிலந்திவிஷம்.

இது பட்டஇடத்தில் விசர்ப்பிபோல் விரணமுண்டாகி அதைச்சுற்றிக் கொப்புளங்களெழும்பும்.

ஆக சிலேஷ்மச்சிலந்தி விஷங்கள் 7-ம் முற்றிற்று.

---

### சங்கீர்ணச் சிலந்திப்பூச்சிகளின் பொதுக்குணம்.

இவைகள் ஆசனத்தில் பலநிறநூலையும் நெருப்பாற்சுட்டதுபோல் எரிச்சலும் திரிதோஷகுணங்களையும் உள்ளவைகளாயிருக்கும். இவ்விஷங்கள்சாத்தியமும் கஷ்டசாத்தியமும் அசாத்தியமுமாகும்.

#### 1-வது காகச்சிலந்திவிஷம்.

இது பட்டஇடத்தில் வெளுத்தும் சிவந்தும் பூனைப்புடுக்கங்காயினது விதையைப்போல் கொப்புளமெழும்பும். இதனால் அதிகவேதனை, விக்கல், இரைப்பு, மிகுந்த தாகம், மூர்ச்சை, நித்திரைப்பங்கம், சதா மார்புநோயென்னும் இக்குணங்கள் உண்டாகும்.

#### 2-வது அக்கினிபாதச்சிலந்திவிஷம்.

இது பட்டஇடத்தில் கால்கள்தோறும் விஷமுள்ளது. அக்கால்கள் தேகத்தில் படில் பட்டஇடமெல்லாம் கொப்புளங்களுண்டாகும்.

#### 3-வது லாஜவர்ணச்சிலந்திவிஷம்.

இது பட்டஇடத்தில் தீர்க்கந்தவிரணம் பிறந்து அதில் சப்பலால் குத்துவதுபோல் குத்தலும் ரத்தமும் பெருகும். இதனால் சீதசுரம், தாகம், மூர்ச்சை, பேதியென்னும் இக்குணங்கள் உண்டாகும்.

#### 4-வது வைதேகிச்சிலந்திவிஷம்.

இது பட்டஇடத்தில் நெருப்பினால் சுட்டதுபோலிருக்கும். இதனால் அதிக வேதனையும் சுரமும் மோகமும் மார்பு நோயும் உண்டாகும்.

#### 5-வது ஜாலமாலினிச்சிலந்திவிஷம்.

இது பட்டஇடத்தில் விரணம்பிறந்து, அதன்மேல் மச்சமும் வீக்கமு மெழும்பும். இதனால் நோய் தாகம், பிரமை, இரை

ப்பு, தேகம்மரத்தல், மோகம், பேதியென்னும் இக்குணங்களுண்டாகும்.

### 6-வது மாலாகுணச்சிலந்திவிஷம்.

இது பட்டஇடத்தில் தேகமுழுதும் மச்சங்களைப்போல் கறுத்ததடிப்புகள் எழும்பும். இதனால் உள் எரிச்சல், மேல் குளிர்ச்சி, வயிறுப்பல், மூத்திரக்கிரிச்சரம், மூர்ச்சை, பேதி, சுரம், தலைநோய், கண்ணோய், இரைப்பு, தாகம், வீக்கமென்னும் இக்குணங்கள் உண்டாகும்.

### 7-வது சுவர்ச்சச்சிலந்திவிஷம்.

இது வர்ணபேதமாயிருக்கும். இவ்விஷத்தினால் பலநிறக் கொப்புளம் பிறக்கும்.

ஆக சங்கிரணச்சிலந்தி விஷங்கள் 7-ம் முற்றிற்று.

---

### பிரத்தியேகச் சிலந்தி லட்சணம்.

இது புணருங்காலத்தில் அச் சுக்கிலத்துளிஎத்தனை தெறிக்கின்றனவோ அத்தனைக்கொப்புளங்கள் விரைவில் உண்டாகும்.

### சிலந்திகடிக்கும் ஸ்தானநிதானம்.

கபிலசிலந்தி மூக்கில், அக்கினிமுகச்சிலந்தி சந்திஸ்தானநரம்புகளில், பீதச்சிலந்தி தாடைகளில், பதுமச்சிலந்தி இடதுகண்ணில், ஆர்க்கச்சிலந்தி வலதுகண்ணில், மூலவிஷச்சிலந்தி சுவேதச்சிலந்தி மூத்திரச்சிலந்தி கறுப்புச்சிலந்தி ஆகிய நான்கும் வலது புஜத்தில், பாண்டுச்சிலந்தி காதில், ரத்தப்பாண்டுச்சிலந்தி இடது விலாவில், வண்டுச்சிலந்தி வலதுவிலாவில், பிங்கச்சிலந்தி வயிற்றில், திரிமண்டலச்சிலந்தி முதுகில், பீதச்சிலந்தி கையில், குமுதச்சிலந்தி நாபியில், சித்திரமண்டலச்சிலந்தி இடதுதோளில், சிரசில், ரத்தச்சிலந்தி காதில், சித்திரச்சிலந்தி நெற்றியில், சந்தானிகச்சிலந்தி உதட்டில், மேஜகச்சிலந்தி சிரசில், உள்ளங்கையில், அக்கினிபாதச்சிலந்தி கண்டத்தில், காகச்சிலந்தி மார்பில், லாஜாவர்ணச்சிலந்தி தனத்தில், வைதேகிச்சிலந்தி தோளில், சாலமாலினிச்சிலந்தி கடைக்கண்ணில், மாலாகுணச்சிலந்தி மார்பின் பள்ளத்தில், சுவர்ச்சச்சிலந்தி காதுக்குப் பின்புறத்தில் கடிக்கும்.



### கடிகால நிதானம்.

சிலந்திப்பூச்சி சுக்கிலபக்ஷ திதிகளில் சாயங்காலவேளையிற் கடிக்கும் இவ்விஷங்களினால் கடித்த வாயில் வெளுப்பு, கறுப்பு, சிவப்பு, மஞ்சளென்னும் நிறமாகவுமிருப்பதன்றியும், அவ்விடத்தில் மிருதுவாக வுயர்ந்து தடித்து அத் தடிப்பைச் சுற்றிலும் சிறுசிறுகொப்புளமுண்டாகும். அக்கொப்புளச் சலம் பட்டவிடமெல்லாம் கொப்புளிக்கும். இதனால் விசர்ப்பை ரோகத்திலும் சோபை ரோகத்திலு முண்டாகின்ற வருத்தமும் சுரமும் வியர்வையும் உண்டாகும்.

---

### சிலந்தியின் சப்தவேக விஷநிதானம்.

மேற்கூறிய விஷமானது தேகத்தினிடத்தில் வியாபித்த
1-வது நாளில் அவ்விடத்தில் நிறம்தோற்றாமல் கொஞ்சம் தினவு உண்டாகுதல்.

2-வது நாளில் இயற்கைவர்ணத்துடன் தடித்து தினவோடுங்கூடிய சிறிய கட்டிகளெழும்புதல்.

3-வது நாளில் அகல் கவிழ்த்ததுபோல் தடித்துச் சிவந்து அவ்விடத்திலுள்ள ரோமங்கள் சிலிர்ப்பதுமன்றி அந்த மயிர்க்கால்களில் ரத்தங்கம்பிச் சுரமுண்டாகுதல்.

4-வது நாளில் அங்கு வீக்கம், எரிச்சல், இரைப்பு, பிரமை இவை உண்டாகுதல்.

5-வது நாளில் விஷதுர்க்குணங்களெல்லா மதிகரிக்குதல்.

6-வது நாளில் அவ்விஷம் மர்மஸ்தானங்களில் வியாபிக்குதல்.

7-வது நாளில் உயிர்க்கு அபாயம் வருகுதலென்றறிக.

ஆதலால் அவ்விஷங்களில் உத்தம மத்திம அதமாதமங்களின் பலாபலன்களை யறிந்து தகுந்தபடி மந்திர ஔஷதிகளினால் சிகிச்சைசெய்யில் 21-நாளில் சுகுணமுண்டாகும். ஒருநாள் இரண்டுநாள் கடிவாயில் எரிவுண்டாகி அடங்கிப் பின்பு கொப்புளமும் எழும்புமென்பர்.

### சர்வசிலந்திகளின் சாமானிய விஷலட்சணம்.

சிலந்திப்பூச்சிகளின் விஷமேறினால் அவ்விடத்தில் எழும்புகின்ற விரணங்களில் சில சுவேதநிறமாயும் சிலசிவந்த நிறமாயும் சில மஞ்சள் நிறமாயும் சில நீலநிறமாயும் சில மிருதுவாயும் சில கடினமாயுமிருக்கும். எட்டுக்கால் பூச்சியும் இச்சிலந்திப்பூச்சிகளின் பேதமேயாம்.

### சிலந்தியின் அஷ்டவிதபேதம்.

சிலந்திப்பூச்சிகளின் சுவாசம், பல், மலம், மூத்திரம், சுக்கிலம், வாய், வாய்நீர், ஸ்பரிசமென்னும் எட்டுஸ்தானங்களில் நின்றும் விஷங்கள் பிறக்கும். அவைகள் மனிதர்மீது படில் சகல துர்க்குணங்களுமுண்டாகும்.

### 1-வது சிலந்தியின் சுவாசம்.

இது சுரத்தையும் மிகுந்த தாகத்தையுமுண்டாக்கும்.

### 2-வது சிலந்தியின் பல்.

இது அழுந்தியஇடத்தில் பிறக்கின்ற விரணம் நிறபேதமும் கடினமும் ஸ்திரமும் உள்ளதாயிருக்கும். இதனால் சரீரத்தில் வீக்கம், எரிச்சல், வேதனை, வியர்வை, தாகமென்னு மிக்குணங்களுண்டாகும்.

### 3-வது சிலந்தியின் மலம்.

இது பட்டஇடத்தில் இலுப்பைப்பழம்போல் வெளுத்த விரணம் பிறந்து அதில் துர்க்கந்தமும் எரிவும் பசபசவென்கிற தினவும் உண்டாகும்.

### 4-வது சிலந்தியின் மூத்திரம்.

இது பட்டஇடத்தில் நடுவில் கறுத்தும் உயர்ந்தும் சுற்றிலும் வாடியும் புட்பம்போல் மலர்ந்துமிருக்கின்ற விரணம் பிறக்கும். இதில் துர்க்கந்தமும் எரிச்சலும் மாறாது உண்டாகும்.

### 5-வது சிலந்தியின் சுக்கிலம்.

இது பட்டஇடத்தில் கடினமான கொப்புளமும் நோயும் உண்டாகும்.



### 6-வது சிலந்தியின் வாய்.

இது பட்டவிடத்தில் முருக்கம் பூவைப்போல் நிறமுள்ள விரணம் பிறந்து அதில் குத்தலும் ஊரலுமுண்டாகும்.

### 7-வது சிலந்தியின் வாய்நீர்.

இது பட்டவிடத்தில் புங்கம்பூவைப்போல் நிறமுள்ள விரணம்பிறக்கும். அவ்விரணத்தின்பக்கங்களில் பூச்சி யூருவதுபோல் பரபரத்தலும் ஊசியால் குத்துவதுபோல் குத்தலும் எரிச்சலுமுண்டாகும்.

### 8-வது சிலந்தியின் ஸ்பரிசம்.

இது தேகத்தில் பட்டாலும் இப்பரிசத்தைப்பெற்ற வஸ்திரம் பட்டாலும் முற்கூறிய குணங்களெல்லாம் விரைவிலுண்டாக்கும்.

சிலந்திப்பூச்சியின் விஷநிதானம் முற்றிற்று.

## சகலசிலந்திவிஷத்திற்கும் ஔஷதம்.

மேற்கூறிய சகல சிலந்திவிஷங்களுக்கும் சங்கம்வேர்ப்பட்டை, மிளகு இவ்விரண்டையும் வகைக்குப் பலம் கால் வீதமாக நிறுத்து மெழுகுபோலரைத்துப் பசுவின் நெய்யில் குழைத்து 21-நாள் இரண்டுவேளையும் சாப்பிட்டு இச்சாபத்திய மிருக்கில் தீரும். அல்லது நரிப்பல்லைத் தூளாக்கி அதில் கற்றாழைரசத்தை விட்டு நன்றாயரைத்து கடிவாயிலும் தேகமுற்றிலும் 21-நாளைக்கு 3-வேளையும் லேபனம்பண்ணத்தீரும். அல்லது அவிரியின் சமூலமும் பலம் 1-ஆக நிறுத்து அதில் நல்லஜலம் அரைப்படி விட்டு காலாழாக்கு கியாழமாகக்காய்ச்சி 7-நாள் இரண்டுவேளையும் சாப்பிடத்தீரும். இவ்வாறே மும்முறை கொடுக்கவேண்டும். அல்லது சிறுசின்னியிலை ரசம் கால் ஆழாக்கு அளவாக இரண்டுவேளையும் 7-நாள் 3-முறைசாப்பிட்டு உப்பிலாப்பத்தியம் இருக்கில் விலகும்.

## மீன்விஷம்.

சில மீன்கள் கடிக்கில் நோயும் எரிச்சலுமுண்டாகும். அன்றியும் நீர்வண்டு, குழல்வண்டு, பாசிவண்டு, பெரியவண்டு முதலிய சில விஷமுள்ளவைகள் கடிக்கில் அவ்விடத்தில் வீக்கம், நமைச்சல்

நோய், நுரைத்தபேதி, சரீரத்தில் தடிப்பென்னும் இக்குணங்களை உண்டாகும். இவ்விஷம் பச்சை நன்னாரிவேரை மேல்தோலும் உள்நரம்பும்போக்கி கொட்டைப்பாக்குப்பிரமாணம் அரைத்து கற்றாழைச்சோற்றில் கலந்து 40 நாள் அந்தி சந்தியி லருந்தத் தீரும். இதற்கு இச்சாபத்தியம்.

## நாட்டுமரவட்டை.

இது கடிக்கில் வியர்வை, நோய், சரீரம் தடித்தல், வீக்கம், கறுப்பக்கத்திப்பூநிறம்போல் பொடிச்சிரங்குகளெழும்புதல், பிரமையென்னும் இக்குணங்களுண்டாகும். இவ்விஷம் திரிகடுகு அல்லது சாட்டுவாளைப் பஞ்சாங்கமென்பது வேர், மேல்பட்டை, இலை, பூ, காய் ஆகிய இவ்வைந்தில் யாதேனும் ஒன்றை வெந்நீரிலரைத்துப் பிழிந்து வடிகட்டி நசியமும் லேபனமும் செய்து உள்ளுக்குக்கொடுக்கில் முறியும். இது மற்றைய அட்டைகட்கும் உதவும் இதற்குச் சுதபதியென்றும் பெயர்.

## விருச்சிகோற்பத்தி.

சர்ப்பங்கள் செத்தழிந்தஇடத்திலும், சாணம், கோணிப்பட்டை முதலியவை மக்கின இடத்திலும், மயானத்தின் சாம்பரிலும் பிறக்கும் இவைகள் முறையே வெளுத்தும், கறுத்தும், சிவந்துமிருக்கும். இவற்றின் விஷம் ஏறினால் நாவு தடித்தல், தேகமரத்தல், அதிகநோய், நாசியால் ரத்தம்விழுதல், சர்வாங்கத்திலும் வியர்வை, மூர்ச்சை, வாயுலரலென்னும் இக்குணங்களுண்டாகும். இது மந்திரம், ஔஷதவலி, தெய்வவலி இம்மூன்றும் ஒத்துக்கொள்ளில் இறங்கும். விருச்சிகமென்பது தேள்.

## சாதாரண தேளின்பேதம்.

தேளானது உச்சிலிங்கத்தேள், வாதத்தேள், பித்தத்தேள் சிலேஷ்மத்தேளென நான்குவிதப்படும். அன்றியும் நண்டுவாய்க்காலி எனவேறு ஒன்றுண்டு.



### 1-வது உச்சிலிங்கத்தேள்.

இது பகற்காலத்தில்கொட்டும். இவ்விஷத்தினால் அவ்விடத்தில் வீக்கம், நரம்புகளில் மிகுவேதனை, ரோமச்சிலிர்ப்பு, அதிக சீதளமென்னும் இக்குணங்கள் உண்டாகும். இது மந்திரத்தால் வசப்படும்.

### 2-வது வாதத்தேள்.

இது மார்புநோய், மேல்சுவாசம், எலும்பு நரம்பீலேல் இவைகளில் நோய், தேகங் கறுத்தல், கூச்சல், பிரளல் முதலிய குணங்களையுண்டாக்கும்.

### 3-வது பித்தத்தேள்.

இது அறிவுநீங்குதல், சுடுகையான மேல்மூச்சு, வாயானது காரமாயிருக்குதல், முகத்தில் எண்ணெய் தடவினதுபோல் பளபளப்பு, மாமிசங்கரைதல், சோஷையென்னுமிக்குணங்களையுண்டாக்கும். அன்றியும் அவ்விடத்தில் வியர்வை, சவுட்டியில் நெறிகட்டுதல், எரிச்சல், கடுத்தல், மறுநாள்வரைக்கும் நோதலென்னும் இக்குணங்கள் உண்டென்பாருமுளர்.

### 4-வது சிலேஷ்மத்தேள்.

இது வாந்தி, அரோசிகம், மார்பு அதிரல், வாயில் ஜலம்வடிதல், பீனிசம், சரீரமுற்றிலும் வாழைத்தண்டையொத்த சீதளம், வாயினிப்பென்னும் இக்குணங்களையுண்டாக்கும். இவ்விஷங்கள் உலர்ந்த கோழிமலம் நெருப்பிலிட்டு கடிவாயில்புகைபிடிக்க இறங்கும் அல்லது கருநாபியைத் தண்ணீரிலுரைத்து கொட்டினவாயில்போடத் தீரும் அல்லது பூனைக்காஞ்சொறிச் சாறும் முருக்கிலைச்சாறும் கொட்டுவாயில் வேதுபிடிக்கக் குளிரும். அல்லது வெண்குன்றிவேரை வெந்நீரிலரைத்துப் பிழிந்து வடிகட்டிப் பஞ்சிலூட்டிக்கொண்டு இடதுபக்கங் கொட்டினால் வலதுநாசியிலும் வலதுபக்கங்கொட்டினாலிடதுநாசியிலும் நசியம்போடத்தீரும்.

## நண்டுவாய்க்காலி.

இதுகொட்டினால் வியர்வையும் நெறிகட்டுதலும் வீக்கமும் கடுப்பும் குடைச்சலும் எரிச்சலும் குமுறலும் வாயில் நுரையும் உண்டாகும். இந்த விஷம் எட்டிவேர்ப்பட்டையைப் பெருநெல்லிக்காய்ப்பிரமாணம் அரைத்து அறையாழாக்குவெந்நீரில் கரைத்துஉள்ளுக்குக்கொடுத்துக் கொட்டினவாயில் கத்தரிக்காயைச் சுட்டுக் கட்டினால் தீரும்.

# மூஷிகபேதம்.

மூஷிகமென்பது 18-வகைப்படும். அவையாவன: லாலஜம், சபளம், புண்டரம், ஹரிதம், சிகுரம், அசிதம், கஷாயதந்தம், குருகம், கோகிலம், கபிலம், கிருஷ்ணம், அருணம், சபலம், சுவேதம், கபோதம், உந்துரு, பலினி, ரசாலம் என்பனவாம். அன்றியும் சுசுந்தரியென்பது ஒன்றுண்டு. இதுவே மூஞ்சூறு. மூஷிகமென்பது எலி.

---

## மூஷிகபேதமென்னும்
# எலிவிஷவகுப்பு.

### 1-வது லாலஜ எலி.

மிகுந்த அசைச்சலை உடையதாயிருக்கும். இது கடிக்கில் வாந்தி, மூர்ச்சை, வாய்நீரூறலென்னும் இக்குணங்களுண்டாகும்.

### 2-வது சபள எலி.

பல நிறத்தைப்பெற்றிருக்கும். இது கடிக்கில் திரிதோஷகுணத்துடன் வாந்தி, மிகுந்த மூர்ச்சை, அதிகதாகமென்னும் இக்குணங்களுண்டாகும். சபளமென்பது பல்நிறமாம்.

### 3-வது புண்டர எலி.

பேய்க்கரும்பின் நிறத்தைப்பெற்றிருக்கும். இது கடிக்கில் சரீரம் வெளிறலும் அக்கரும்பு வர்ணமுள்ள விரணமுமுண்டாகும்.

### 4-வது ஹரித எலி.

மஞ்சள் நிறத்தைப் பெற்றிருக்கும். இது கடிக்கில் அக்கினிமந்தமும் கொட்டாவியும் மயிர்க்கூச்செறிதலுமுண்டாகும்.

### 5-வது சிகுர எலி.

தேகமுற்றிலுமுளைத்த ரோமங்களைப்பெற்றிருக்கும். இது கடிக்கில் தலைநோய், வீக்கம், வாந்தி, பிரமை, தேகமுற்றிலும்மச்சமென்னு மிக்குணங்களுண்டாகும். சிகுரமென்பது ரோமம்.

### 6-வது அசித எலி.

உதட்டில் கரியநிறத்தைப்பெற்றிருக்கும். இதுகடிக்கில் சரீரங் கறுத்தலும் மூர்ச்சையும் வாந்தியும் மார்நோயுமுண்டாகும்.

### 7-வது காஷாயதந்த எலி.

சிவந்த பற்களைப் பெற்றிருக்கும். இது கடிக்கில் சுர உறக்கமும் மார்பு வறளலும் மலபந்தமும் உண்டாகும். இதனைத் தந்தகெலியென்பர்.



### 8-வது குருகஎலி.

மரக்கால்போன்ற உடலைப்பெற்றிருக்கும். இதுகடிக்கில்சிவந்த மச்சங்களுடன் நோயுண்டாகும். குருகமென்பது மரக்கால்.

### 9-வது கோகிலஎலி.

குயில்போல் புள்ளிகளைப்பெற்றிருக்கும். இதுகடிக்கில் கிராந்தியும் உக்கிரமானசுரமும் தாகமுமுண்டாகும். கோகிலமென்பது குயில்.

### 10-வது கபிலஎலி.

கபிலநிறமுள்ளது இது கடிக்கில் கண்டுகெண்டாக வெழும்பி விரணமாகும். இதனால் சுரம், பிரமை, வாந்தியென்னு மிக்குணங்கள் உண்டாகும்.

### 11-வது கிருஷ்ணஎலி.

கரியநிறத்தைப் பெற்றிருக்கும். இதுகடிக்கில் தினந்தோறும் ரத்தவாந்தியும் மழைக்காலத்தில் அதிக ரத்தம் விழ்தலும் உண்டாகும்.

### 12-வதுமுதல் 17-வரையில் அருணாதி எலிபேதம்.

அருணம், சபலம், கபோதம், சுவேதம், உந்துருபலினிஆக ஆறுவித எலிகளுங் கடிக்கில் திரிதோஷம் அதிகரித்து சந்நிபாதகுணங்கள் அதிகரித்தலுடன் கடித்தவிடத்தில் ரத்தம்வடிதல், கிரந்திகளெழும்புதல், காதின்கீழ் கட்டிகள்பிறக்குதல் என்னு மிக்குணங்களுண்டாகும்.

### 18-வது ரசாலஎலி.

நாமக்கரும்புநிறமாயிருக்கும். இதுகடிக்கில் நெஞ்சுமாத்தலும் சொல்லக்கூடாத வேதனையுமுண்டாகும். சகல எலிவிஷங்களும் தேகத்திலடங்கியிருந்து மழைமேகம் எழும்புகிறகாலத்திலதிகரிக்கும். பெருச்சாளிக்கும்இவ்விஷமுண்டு, ரசாலமென்பது நாமக்கரும்பு.

எலிவகுப்புகள் 18-ம் முற்றிற்று.

---

# சுசுந்தரி.

இது கடிக்கில் சரீரமினைத்தலும் பேதியும் வாய்பேசக்கூடாததாயுமுண்டாகும். இதற்கு நீலி குடிநீர் ஆகும். சுசுந்தரி என்றால் மூஞ்சூறு.

### எலிச்சுக்கில விஷநிதானம்.

எலிகள் புணருங்காலத்தில் அச்சுக்கிலம் யார்மீதாவது சிதறுமாகில் அந்த இடத்தில் கிரந்தி, வீக்கம், மச்சங்களெழும்புதல், பிரமை, அரோசகம், குளிர்காய்ச்சல், கீல்நோய், நடுக்கல், ரோமச்சிலிர்ப்பு, மூர்ச்சை, சிலேஷ்மாதிக்கம், வாந்தி, தாகம்முதலிய குணங்களுண்டாம்.

### அசாத்திய எலிவிஷலட்சணம்.

எந்த எலியினாலாவது மயக்கம், தேகவீக்கம், மாறுருவம், வியர்வை, காதுமந்தம், சுரம், தலைநோய், வாய்நீரூறல், ரத்தவாந்தியென்று மிக்குணங்களுண்டாகில் அசாத்தியமே.

### மேற்கூறிய எலிவிஷங்களுக்கு சிகிச்சை.

இருமல், இரைப்பு, கோழை, வாந்திமுதலிய துர்க்குணங்களை பிறப்பிக்கிற எலிவிஷத்திற்கு அழிஞ்சிவேர்ப்பட்டையை புன்னைக்காய்வீதம் வெந்நீரிலரைத்து 8-நாள் இரண்டுவேளையுங்கொடுக்கில் தீரும். குறட்டையெலி சுண்டெலி யிவைகளின்விஷம் இலந்தைக்காயளவு பனைவெல்லத்தில் 8-துளி எருக்கம்பால்விட்டு மத்தித்து 7-நாள் சாப்பிடத்தீரும். வயிற்றில் ரத்தப்பாய்ச்சலையும் பல்லுகளில் குடைச்சலையும் தருகின்ற எலிவிஷத்திற்கு ஆவுரிவேரை நெல்லிக்காயளவு அரையாழாக்குபாகம் பாலிலரைத்து கரைத்து 8-நாள் உள்ளுக்குக்கொடுத்து அந்த இலையை அரைத்து கடிவாயில் தடவிவிடத்தீரும். இன்னும் நீலக்காக்கணம்வேரைச் சிறியகொட்டைப்பாக்குப்பிரமாணமாக அரைத்து காலையில் மாத்திரம் 7-நாள் அல்லது 5-நாள் சாப்பிடத்தீரும். இவைகட்கு உப்பிலாப்பத்தியம்.

---

## சகல எலிவிஷத்திற்கும் வேறுவகை.

### அவைகள் கடித்ததற்கு ஔஷதம்.

திருவடிவிளக்கன், வாரபுத்திரன், உதிரமண்டலி, அருணன், குலந்தன், மந்திரி, முத்திரையன், உத்திரியன், விரிசெங்கன் விசையன், அலியன், உத்தமன் இவை 12-க்கும் அதின் குணமும் ஔஷதமும் இதனடியிற்காண்க.



### திருவடிவிளக்கன் எலி.

இது கடிக்கில் கண்சிவந்து தேகம் சொரியாகும். கோரைக்கிழங்கென்னும் முத்தக்காசும் இந்துப்பும் தேனில்கொடுக்கவும்.

### வாரபுத்திரன் எலி.

இதுகடித்தால் சரீரத்திற்குள் வெதும்பும், எரிக்கும், தலைச்சுண்டு, வாய் நாற்றமாகும். இதற்கு வாகைப்பட்டையும் அதின் விரையும் தேனிலரைத்துக் கொடுக்கவும்.

### உதிரமண்டலி எலி.

இது கடித்தால் சிறுநீர் ரத்தம்போலிறங்கும் கடிவாயில் வட்டம்போலிருக்கும். இதற்கு மஞ்சள் பர்ப்பாடகம், நெய்யிலரைத்துக் கொடுக்கவும்.

### அருணன் எலி.

இது கடிக்கில் உடம்பு கறுக்கும், இருமல், தேகமிளைக்கும். அதற்கு முத்தக்காசும் பர்ப்பாடகமும் தேனிலரைத்துக் கொடுக்கவும்,

### குலந்தன் எலி.

இது கடிக்கில் உடம்பு குளிர்ந்து நடுக்கங்காணும். அதற்கு செஞ்சந்தனம் தேனிலரைத்துக் கொடுக்கவும்.

### மந்திரி எலி.

இது கடிக்கில் சொரியாகி தினவாகும். பாவட்டம் இலை மாடப்புறு எச்சம் இவைகளை அரைத்து முகத்திலும் காதிலும்பூசி காக்கணவேர், கருவேல்பட்டை, வில்வவேர் சமன் தேனிலரைத்துக்கொடுக்கத் தீரும்.

### முத்திரையன் எலி.

இதுகடித்தால் உடம்பு வெண்குட்டமாகும். அதற்குவாகை விரையைச் சூரணித்து தேனில்கொடுக்கவும்.

### உத்திரியன் எலி.

இதுகடித்தால் உடம்பில் கொப்புளங்களாகும். அதற்குநகரவிரையை காடியிலரைத்துப்பூசி உள்ளுக்குங்கொடுக்கத்தீரும்.

### விரிசங்கன் எலி.

இது கடித்தால் காது கேளாது, வீங்கும், உடம்பெரியும். அதற்கு கடுகுரோகணியும் கற்கண்டும் கொடுக்கத்தீரும்.

### விசையன் எலி.

இது கடித்தால் வாய்நீருண்டாகும், வீங்கும், உடம்புமுற்றும் சிலிசிலிர்க்கும். அதற்கு நாழி உளுந்தும் அரிசியும் விளாங்காய்ச்சதையும்மரைத்து நெய்யில்குழைத்து உடம்பிலுந் தலையிலும் பூசநீங்கும்.

### அலியன் எலி.

இது கடித்தால் உடம்பு தடித்ததுபோல்காணும், வீங்கும், கண்கறுக்கும். அதற்கு சிறுகீரைவேரைதேனில்குழைத்துக்கொடுக்கவும் தீரும்.

### உத்தமன் எலி.

இது கடிக்கில் தேகமெங்கும் கொப்புளமாகும். அதற்குப் பாவட்டயிலைச்சாறும்புறு எச்சமும் தேனில் மத்தித்துக்கொடுத்து உடம்பிலும் பூச நீங்கும்.

மேற்கண்ட நாமமுடைய எலி கடித்தால் மேற்கண்ட விதமாக நோய்கள் காணுவதால் மேற்கண்டபடி அவுஷதங்களை 10-15-நாள் கொடுக்க நிவர்த்தியாகும் அப்படி வியாதிகளைக் கவனித்துப்பாராமல் மேகசம்பந்தவியாதிகளென்று மதித்து பலவாறான அவிழ்தங்களைக் கொடுப்பதில் வியாதிகள் நீங்காமற்போவதுடன் அவிழ்தங்கள் புகன்ற முன்னோர்கள்பேரில் பிழைகூறவும் நேரிடும். ஆதலினாலல்லவா.

## எலிகளின் கடிவிஷக்குறிகளும்,

### அவைகட்கு நிவர்த்திகளும்.

(எலிகடி) பல்லில் வலியும், உளையும், இரத்தமுங்கண்டால் அவிரிவேரை ஒரு கொட்டைப்பாக்குப்பிரமாணம் அரைத்து ஆவின்பாலில் ஏழுநாள் கொடுக்கத்தீரும்.

### தேகத்தில் கோப்புளங்கண்டால்.

பெருமரப்பட்டை, இலை, வேர் இம்மூன்றையும் சமனாயிடித்துச் சூரணித்து ஆவின்வெண்ணெயில் மத்தித்து கால்மண்டலங்கொள்ளத் தீரும். (ஒருமண்டலம் 40-நாள்.)

### சுவாசகாசங்கண்டால்.

சங்கு, வெள்ளைக்காக்கட்டான் இவ்விருவகை வேர்களையும் அரைத்து ஆவின்பாலில் கொடுத்துவரத் தீரும்.



### உடல் பூரித்து இருமல் இளைப்புங்கண்டால்.

கோரைக்கிழங்கைச் சூரணித்து திரிகடிப்பிரமாணம் தேனிற் சாப்பிட்டுவந்தால் தீரும். இறங்கழிஞ்சிவேர்ப்பட்டையை ஒரு புன்னைக்காய்ப்பிரமாணம் அரைத்து வெந்நீரில் ஏழுநாள் காலையில் கொடுக்கத் தீரும்.

### இருமல்கண்டால்.

நாயுருவிசமூலம் அரைத்து ஒரு கொட்டைப்பாக்குப் பிரமாணம்சாப்பிட்டுவரத்தீரும். சமூலம் என்றால் இலைகாம்புவேர்.

### இரைப்புகண்டால்.

மூக்கரைச்சாரணைவேரை ஆவின்பாலில் வேகவைத்து உலர்த்திச் சூர்ணித்து திரிகடிப்பிரமாணம் சாப்பிட்டுவரத் தீரும்.

### உடல்வெதும்பித் திகைத்தால்.

தூதுளைக்காயும் சீனியும் அரைத்து சாப்பிட்டுவரத்தீரும்.

### உடல் வீங்கினால்.

நீலக்காக்கட்டான்வேரை ஒரு கொட்டைப்பாக்குப் பிரமாணம் அரைத்து ஆவின்மோரில் கொடுக்கத்தீரும். அவுரிச்சாற்றை தேகத்திற் பூசவும்.

### கைகால் வராவிட்டால்.

அவிரிவேர், சங்கம்வேர் இவ்விரண்டையும்சூரணித்துத் திரிகடிப்பிரமாணம் சாப்பிட்டுவரத் தீரும்.

### உடலிற் சழலைபோலும், பலாவித்துபோலும் தடித்தால்.

வெல்லத்தில் ஏழு நாளிவெள்ளெருக்கம்பால்விட்டு ஏழுநாள் கொடுக்கத் தீரும். எருமைச்சாணிப்பாலை மாசாணிப்படிவீதம் மூன்றுநாள் கொடுத்து அந்தச்சாணியைவறுத்து ஒத்தடச்செய்யவும். வெள்ளை ஆதளைக்கிழங்கை யரைத்து கொட்டைப்பாக்குப்பிரமாணம் வெந்நீரில் ஏழுநாள் கொடுக்கத்தீரும்.

### முகத்தில் கருவங்குபோலும் தேகத்தில் குஷ்டம்போலும் தழுதணையைப்போலும் விழுந்தால்.

ஆடுதீண்டாப்பாளைவேர் சங்கம்வேர் இவ்விரண்டையும்சூரணித்து கால்மண்டலங்கொள்ளத் தீரும்.

கைகால் உளை, கண்சருக்கு, உடம்பிற் கழலைபோற்கட்டி
தினவு, வெடித்துப்புண்ணாதல் இவைகண்டால்.

| | |
|---|---|
| சித்திரமூலம் | குழப்பாலை |
| சிவன்வேம்பு | வெள்ளறுகு |

இந்நான்கையும் சூரணித்து திரிகடிப்பிரமாணம் சாப்பிட்டுவரத்தீரும்.

உடல்குளிர்ந்து நடுங்கி கடிவாய் வட்டமாயிருந்தால்.

செஞ்சந்தனம் திப்பிலி இவ்விரண்டையும் பொடித்து திரிகடிப்பிரமாணம் தேனிற்கொள்ளத் தீரும்.

கால் கை முடங்கலுக்கு.

அமுக்குராக்கிழங்கைச் சூர்ணித்து திரிகடிப்பிரமாணமாக தேனில் ஒருமண்டலங்கொள்ளத்தீரும். மேற்படிகிழங்கை யரைத்துப் பூசிவரத்தீரும். அவிரிசமூலம் இடித்து சாறுவாங்கி மாகாணிப்படிவீதம் உள்ளுக்குக்கொடுத்து அந்தச்சாற்றை உடம்பெங்கும்பூசி முழுக்கச் சகலஎலிகளின்விஷமும்நீங்கும். வீழிவேரை அரைத்து ஒரு கொட்டைப்பாக்குப்பிரமாணம் வெந்நீரில் மூன்றுநாள் கொடுக்கத் தீரும். பேய்ப்பீர்க்கிலைச்சாற்றை மாகாணிப்படிவீதம் மூன்றுநாள் கொடுக்க சகலஎலிகளின் விஷமுந்தீரும். இவைகளுக்குப் பத்தியம் உப்பு புளி தள்ளவும்.

## நாய் கடிக்கு.

காராக்கரந்தை, நன்னாரி, சென்னாயுருவி இந்த மூன்றிலையும் எள்ளும் புகையூறலும்சேர்த்தரைத்து கடிவாயிற்பூசவும் மேலும் கோவையிலையை அரைத்துப் பூசவும். சுண்டையிலையையும் உப்புமரைத்துப் பூசினாலுந் தீரும்.

நாய், நரி, சிறுபுலி, குரங்கு, பூனை, குதிரை, முதலை,
வேங்கை முதலிய கடிவிஷத்திற்கு.

அவிரிவேரை ஒரு கொட்டைப்பாக்குப்பிரமாண மரைத்து ஆவின்பாலிற்கலக்கி மூன்றுநாள்கொடுத்து அந்தவேரை யரை



த்து கடிவாயிற்பூசத் தீரும். வீழியிலைச்சாற்றை மூன்றுநாள் கொடுக்கத் தீரும், கொல்லங்கோவைக்கிழங்கை ஒருகொட்டைப்பாக்குப்பிரமாணம் அரைத்து வெந்நீரில் மூன்றுநாள்கொடுத்து அதையரைத்து கடிவாயிற்பூசவும்.

மனிதர், பேய்நாய், பேய்நரி, பெருச்சாளி,
எலிக்கடிகளின் விஷத்திற்கு.

இறங்கழிஞ்சிப்பட்டையை ஒருகொட்டைப்பாக்குப்பிரமாணம் வெந்நீரிற்கலக்கி மூன்றுநாள் காலையில் கொடுக்கத் தீரும். மேற்படி மருந்தினால் வாந்தி பிராந்திகண்டால் சுக்கு, மிளகு, வசம்புக்கரி இந்த மூன்று வகையொன்றுக்கு விராகனிடை-1, முருங்கையீர்க்கு ஒருபிடி இவைகளைச் சிதைத்து அரைப்படி தண்ணீரில்போட்டு அரைக்கார்படியாய் வற்றவைத்துக்கொடுக்க வாந்தி நிற்கும்.

## பேய்நாய்.

இது கடித்தால் அவ்விடத்தில் விரணம் பிறக்கும். இதனால் தாதுநஷ்டம், வாய்நீரூறல், கண்மயக்கம், காதுமந்தம், தேஜசுநீங்குதல், தாள்பிடிப்பு, சிரோபாரம், தூங்கும்போது அவ்விரணத்தில் நின்றும் கறுத்தரத்தம்வடிதல், மார்நோய், சுரம், தேகம்மரத்தல் தாகம் மூர்ச்சையென்று மிக்குணங்களுண்டாகும். இதற்குக் கற்றாழைமடலும் ஐவணமும் சமமாக இடித்து கடிவாயில் மூன்றுதினம் கட்டுவதுந்தவிர பேயத்திவேர், ஆயில்பட்டைவேப்பிலை மூன்றும் வகை 1-க்கு பலம் 10-ஆக கூட்டி யிடித்து ஒருபடி கழுநீர்போட்டு கொதிப்பித்துக் குழம்பாயிறக்கி ஏழுநாள் மேல்பூசி மருந்தால் விரேசனமும் செய்விக்கத்தீரும்.

சகல மிருகஜந்துக்களின் விஷநிதானம்.

குதிரை, புலி, கரடி, காட்டுப்பன்றி, கோனாய், நரி, பூனை, மாயப்பூனை, குரங்கு, கீரி, முதலை முதலியஜந்துக்கள்கடிக்கில் அந்தக் கோரைத்தந்தங்களி லிருக்கின்ற விஷத்தினால் தினவு, உருவபேதம், நோய், நித்திரையில்வியர்வையொழுகுதல், சுரம், பிரமை, தாகம், வீக்கம், வாந்தி, மயக்கம், கடிவாயில் மச்சமும் அதன்மேல் கொப்புளமும் எழும்பிப் படையும் அநேகரோகமும் பிறக்குதல் என்று மிக்குணங்களுண்டாகும். இவைகட்கு உடனே ரசகந்தக

பாஷாணவநக்கம்சேர்ந்த விஷமருந்துகளைக் கடிவாயில்வைத்துக்கட்டி அந்தஇடத்தில் ரோமங்கள் முளைக்கவொட்டாத விரணஞ்செய்வித்து அதைக் காலாந்திரத்தில் ஆற்றுவதுந்தவிர. அந்த ஔஷதங்களை உள்ளுக்குக் கொடுப்பிக்கில் மேற்படி விஷம் சாத்தியமாம். இவ்வளவுபெரிய சிகிச்சைகளைச்செய்வானேனென்றால் அவ்விஷங்கள் அற்பமேனும் தேகத்தில் தங்கி யூறுமாயின் பின்பு சகல துர்க்குணங்களும் பிறக்கும். ஆதலால் செய்யவேண்டும். இது தப்பிக் காலாந்திரத்தில் சிகிச்சைசெய்யில் விஷமுமுதிர்ந்து அந்தந்த ஜந்துக்களின் நடை, குரல், பார்வை, சேஷ்டை முதலிய குணங்களும் பிறக்கும். அப்போது அசாத்தியமாம்.

தந்த நகவிஷ நிதானம்.

பசு முதலிய மாடுகளுக்கும் மனிதர்களுக்கும் பல் நகம் இவைகளில் விஷமுண்டு. அவைகள் பட்டு விரணம்பிறந்தால் அதில் வீக்கத்துடன் ரத்தம்வடியும். இதனால் சுரமுண்டாகும் இது அசாத்தியமாம்.

சகலவிஷ உபத்திரவநிதானம்.

சகல விஷங்களுக்கும் சுரம், இருமல், இரைப்பு, வாந்தி, விக்கல், மயக்கம், தாகம், சரீரத்தில் கடினத்துவம், வயிறுப்பிசம், அடிவயிறும் தலையும் நோதல், வீக்கம், துர்க்கந்த ரத்தம் வடிகின்ற விரணம், வாதாதிக்கமென்னும் 14 - துர்க்குணங்கள் பிறக்கும். இதுவே விஷ உபத்திரவமாம். இக்குணங்கள் உண்டாவதற்கு முன்னமே தகுந்த சிகிச்சைகளைச் செய்யில் சாத்தியமாம். நீடிக்கில் கஷ்டசாத்தியமாம்.

## தூஷிவிஷநிதானம்.

முற்கூறிய எவ்வகை விஷமாவது தானே க்ஷீணகதியாலும் விஷஹரமான சிகிச்சையால் அநேகநாளும் வெய்யில், காட்டுத்தீ, காற்று முதலியவைகளினால் சோஷித்தாலும் சுபாவமாகவே சோஷித்தாலும் அவ்வுடற்குள் அமுக்கப்பட்டிருந்தாலும் அவ்விஷங்களுக்குத் தூஷிவிஷமெனப்பெயர். இவைகள் அற்பமாயிருந்தாலும் மனிதர்தேகத்தில் பாய்ந்தவுடன் சிகிச்சை செய்யவேண்டும். செய்யாவிடில் ஒருவருஷபரியந்தம் உடம்பிலுள்ளடங்கியிருந்து பின்பு கபத்தைப்பற்றியேறும். இதனால் பலநிறமானமல



வாயினால் ரத்தம்வீழ்தல், தாகம், அரோசிகம், வாந்தி, மயக்கம், ஈனத்தொனி, சோருதலென்னும் இக்குணங்களுண்டாகும். அதற்குப் பின்பு அது ரகசியஸ்தானத்தைப்பற்றியேறும். இதனால் சிலேஷ்மவாதரோகங்கள் பிறக்கும். அதற்குப்பின் அது பக்குவாசயஸ்தானத்தைப்பற்றிக் கலக்கும். அப்போது வாதரோககுணங்களெல்லாம் பிறப்பதுமன்றித் தலைமயிர்கள் உதிரும். அதற்குப்பின் அது சப்ததாதுக்களையும் பற்றிப் பாவும், அப்போது அனந்த விகாரங்களுண்டாகும். ஆதலால் அற்பவிஷத்திற்கும் மகாவிஷ சிகிச்சைகளைச் செய்யவேண்டும். தூஷியென்பது அற்பமாம்.

---

## சில சாஸ்திரக் கேள்வி.

காட்டுஓணன், தேள், நண்டுவாய்க்காலி, பூரான், சிலந்தி, புலி முகப்பூச்சி, செய்யான், பொறிவண்டு இவைகள் விரியனென்னும் பாம்பினது முதுகு வெடிக்க அதன்வழியாகப் பிறக்குமென்று சில சாஸ்திரங்களில் கூறுகின்றன.

சீதமண்டலி.

இது கடித்தால் குடல் குளிர்தலும் அரட்டலும் மிகுந்த வியர்வைபெருகி ஓடுதலுமுண்டாகும். இதற்கு ரசகந்தகமாதி உண்டை ஆகும்.

ரத்தமண்டலி.

இது கடித்தால் மயிர்க்கால்கள்தோறும் ரத்தமொழுகும் இதற்குயானைவணங்கியிலைமாத்திரம் பெரியஎலுமிச்சங்காய்ப் பிரமாணம் அரைத்து ஆழாக்குநல்லஜலத்தில் கரைத்துக்கொடுக்கில் நலமாம்.

பூரான்.

இது கடிக்கில் அது ஊறுவதுபோல் தினமும் அவ்வுருவத்தைப்போல் தடிப்புமுண்டாகும். இதற்கு குப்பைமேனிச்சாற்றை உள்ளுக்குக்கொடுத்து பத்தியமிருக்கவும்.

செய்யான்.

இது கடித்தால் அவ்விடத்தில் வீக்கமும் தேளைப்போல் மறுகாள்வரைக்கும் கடுப்புமுண்டாகும். இதற்கும் தேள்விஷச் சிகிச்சை யுதவும்.

### செஞ்சேரா.

இது கடிக்கில் மேலில் சிவந்த புள்ளிகளான தடிப்புகளுண்டாகும். இவ்விஷம் உத்தாமணியிலைரசத்தில் சுண்ணாங்குழைத்துப் பூசத் தீரும்.

### கருஞ்சேரா.

இது கடித்தால் தேகத்தில் கறுப்புக்கறுப்பான தடிப்புகள் உண்டாகும். இதற்கும் மேற்கூறிய சிகிச்சைகள் ஆகும்.

### அறுபுள்ளிவண்டு.

இது கடித்தால் சர்வாங்கத்திலும் சிலநாட் சென்றபின்பு வட்டம்வட்டமான தடிப்புகளுண்டாகும்.

### சேவட்டை.

இது கடித்தால் அவ்விடத்தில் சிவந்து தடித்து மரத்திருக்கும்.

### அரணை.

இது கடித்தால் சரீரமுழுதும் நடுக்கல் வாயால் நுரைவிழுதல் நாவுதடித்தல் என்னு மிக்குணங்களுண்டாகும். இதற்கு ஓணான்விஷத்திற்குச் சொல்லிய சிகிச்சைகளாகவும். அரணைகடிக்கவே கடிக்காது, கடித்தால் மரணம்தான் மருந்து கிடையாதென்பர் சிலர்.

### சரகுண்ணி.

இது கடித்தால் வீக்கமெழும்பும். காட்டுண்ணிக்கு இக்குணத்துடன் கடுப்பும் உண்டாயிருக்கும். இதற்குக் குப்பைமேனி ரசம் ஆகும்.

### எலிபேதம்.

கத்தரிமணியன், செம்முக்கன், வாளி, குறட்டை, கருங்காலன், தலையன், விடவெலி, செற்றலைமுட்டி, செவ்வெலி, வீங்கெலி, ஞாங்கெலி, உலைப்பெலி, புடையெலி, இரைப்பெலி, செங்கண்ணன், புள்ளக்காடன், குறுக்காலன், நச்செலி ஆக 18 - வகையாம்.

சில்லரைவிஷபேதம் முற்றிற்று.



இதற்கு முந்திய மூலிகைமர்மமென்னும் சாஸ்திரத்தில் ரசபாஷாணாதிவர்க்கம் ஒன்றேனுமின்றி புத்தகம் முதலிலிருந்து கடைசிமட்டில் மூலிகைப்பிரயோகமே அடங்கியது·மூலிகையெடுக்கும் மூலமந்திர சாபநிவர்த்தியுடன் 640-முறைகளடங்கிய நூல். விலை அணா 8-க்குக் கிடைக்கும்.

---

### சகல விஷக்கடிகட்கும்,

## ஔ ஷ த வ கு ப் பு.

---

### சர்வவிஷத்திற்கும்

### பரஞ்சோதிக்குழம்பு

| | |
|---|---|
| ஊமத்தம்பருப்பு | இரதம் |
| மகிழம்பருப்பு | கெந்தகம் |
| அறிஞ்சில்பருப்பு | வெண்காரம் |
| தில்லைப்பருப்பு | குக்கில் |
| வெண்குன்றிப்பருப்பு | காவிக்கிழங்கு |
| வாளப்பருப்பு | திருவிஷம் |
| படுஞசிலை | பொன்மெழுகு |
| அரிதாரம் | பெருங்காயம் |
| கௌரி | சுக்கு |
| வெள்ளை | மிளகு |
| இலிங்கம் | திப்பிலி |
| நவாச்சாரம் | வெள்ளைப்பூண்டு |
| சினக்காரம் | வெந்தயம் |
| நீலத்துருசு | |

இவைகள் வகையொன்றுக்கு வராகனிடை 2-ஆகச் சுத்தி செய்து எலுமிச்சம்பழச்சாற்றால் ஐந்துநாள்வரையில் கைவிடாமல் அரைத்து மேற்கிக் கொப்புச்சிமிழில் வைத்துக்கொண்டு பணவிடை வெற்றிலையிற்றடவிக்கொடுக்க அஷ்டநாகம், விரியன், மண்டலி, செய்யான், செவ்வட்டைக்கடி, தேள், நட்டுவாக்காலி, எலி, மூஞ்சூறு, பூனை, அரணை, முதலை, யானை, பேய்நரி, பேய்நாய்,

இவைகளின் கடிவிஷமும் மற்ற ஊர்வன விஷஜந்துக்களின் கடிவிஷமும் நீர்வாழும் ஜீவஜந்துக்களின் கடிவிஷங்களும் தீரும் இதற்குப் பத்தியம் ஆவின்பால் அன்னம் சாப்பிடவும்.

## மகாசிந்தாமணிக்குழம்பு.

| | |
|---|---|
| இரதம் | தாரம் |
| கெந்தி | நிருவிஷம் |
| வெள்ளைப்பாஷாணம் | சன்னிநாயகம் |
| நாவிக்கிழங்கு | சுக்கு |
| இலிங்கம் | மிளகு |
| துத்தம் | கடுக்காய் |
| துருசு | வாளப்பருப்பு |

இவைகள் வகைக்கு 1-க்கு விராகனிடை 1.

| | |
|---|---|
| குப்பைமேனி | ஊமத்தை |
| தைவேளை | அவிரி |
| பேய்ப்பீர்க்கு | வேலிப்பருத்தி |

இவைகளின் இலைச்சாறு வகை 1-க்கு அரைக்காற்படி பேய்க்கும்மட்டிபழச்சாறு படி அரைக்கால், காஞ்சிரம்பழச்சாறு படி 1, இவைகளைவிட்டு மேற்படி சரக்குகளைத் தனித்தனியே அரைத்து ஒரு சட்டியிற்போட்டு கொஞ்சம் வேப்பெண்ணெய் விட்டு மெழுகுபதமாய்க்கிண்டி சிமிழிலடைத்துக்கொண்டு அஷ்டநாகம் முதலாயுள்ள சர்வ விஷத்திற்கும் ஒரு குன்றியிடை அல்லது அரைக்குன்றியிடை கொடுக்கத்தீரும். பத்தியம் பால் அன்னம்.

## சஞ்சீவிக்குழம்பு.

| | |
|---|---|
| துருசு | அரிதாரம் |
| இரதம் | நாவிக்கிழங்கு |
| காயம் | வெள்ளைப்பாஷாணம் |
| ஜாதிலிங்கம் | கெந்தகம் |
| வெண்காரம் | வேப்பம்பருப்பு |
| வாளப்பருப்பு | |

இவைகளை வெள்ளெருக்கம்பாலில் ஒருஜாமமும் வேப்பெண்ணெயில் ஒருஜாமமும் அரைத்து சிமிழிலடைத்துக்கொண்டு பயறளவுவெற்றிலையிற்கொடுக்க சர்வவிஷமும் விஷவேகத்தால் பற்கிட்டியிருந்தால் பணவிடை வெந்நீரில் கலக்கிப் புகட்ட நீங்கும். பத்தியம் பாலும் அன்னமும் முருங்கையிலையை உப்பில்லாமல் அவித்து மிளகுபொடி தூவிக் கொடுக்கவும்.



## சஞ்சீவிகரணி தைலம்.

| | |
|---|---|
| காஞ்சிரம்பழம் | கொடிவேலிவேர் |
| பேய்க்கும்மட்டிப்பழம் | காஞ்சிரைவேர் |
| இவைவகை 1-க்கு பழம் 103 | அமுக்குராக்கிழங்கு |
| வெண்குன்றிப்பருப்பு | கெருடங்கிழங்கு |
| நீர்க்கடம்புபருப்பு | நாவிக்கிழங்கு |
| நீர்வெட்டிமுத்து | முற்றினவேப்பம்பட்டை |
| இவை வகை 1-க்கு படி 2 | மாவிலிங்கப்பட்டை |
| நேர்வாளக்கொட்டை | பெருமரத்துப்பட்டை |
| வேப்பங்கொட்டை | கருஞ்சூரைப்பட்டை |
| இவை வகை 1-க்கு படி 3 | வேலிப்பருத்திவேர் |
| | வகை 1-க்கு பலம் 20. |

இவைகளையெல்லாமிடித்து பில்லைபில்லையாய்த்தட்டி காயவைத்து பாண்டத்திலிட்டு பூப்புடத்தைலம்வாங்கி அந்தத் தைலத்துக்குச் சமன் வேப்பெண்ணெய்கலந்து அதில இரதம் விராகனிடை 2, பச்சைப்பாம்பு 1, மூஞ்சூறு 1, இம்மூன்றையும் கூடப்போட்டு கலசவாயைமூடி ஒருமண்டலம் எருக்குப்பையில் புதைத்தெடுத்து வெற்றிலையிலாவது வெந்நீரிலாவது இரண்டு துளிகொடுக்க அஷ்டநாகம் விரியன் வழலைமுதலான சர்வ விஷங்களும் இறங்கும் உயிர் அடங்கியிருந்தால் உச்சியைக் கீறி அதில் தைலத்தைத் தேய்த்து நாசி காதில்விட்டு நாவிலுந்தேய்க்க உயிர்மீளும் பத்தியம் பாலன்னம்.

## இராமாயணத் தைலம்.

| | |
|---|---|
| இறங்களிஞ்சிவித்து | கழற்சிவித்து |
| புங்குவித்து | கார்கோலவித்து |
| தான்றிவித்து | கடுக்காய் |
| புன்னைவித்து | |

இவைகள் வகையொன்றுக்கு படி 1, இவைகளை வெள்ளாட்டுநீரிலும் சிறுபிள்ளைகள் நீரிலும் வகையொன்றுக்கு 20-நாள் ஊறவைத்து உலர்த்தி குழித்தைலம் வடித்து பணவிடை வெற்றிலையிற் றடவிக்கொடுத்து கடிவாயிலும் பூச அஷ்டநாகங்கள் எலி, விரியன், புடையன், தேள், நண்டுவாய்க்காலி, முறுக்கரவு, அரணைமுதலிய சில்லரைவிஷங்கள் தீரும். விஷக்கடியால் நேரிடும் குஷ்டமுதலிய ரோகங்கள் தீரும். பத்தியம் வெள்ளாட்டுப் பாலன்னம்.

### சஞ்சீவிமை.

திருகுகள்ளியின்மேல்பொருக்கு இரண்டுபங்கும் இலுப்பைப்புண்ணாக்கு ஒருபங்கும் ஒன்றாய்க்கலந்து ஒரு பாண்டத்தில் அடைத்து வெள்ளாட்டு எருக்கொட்டிக் குழித்தைலம் வடித்துக்கொள்ளவும் புதியகாஞ்சிரைவித்தையும் அதுபோல் தைலம் வடித்துக்கொள்ளவும் இந்த யிரண்டுவகை தைலத்தையும் ஓர் நிறையாய் ஒன்றாய்க்கலந்து ஒரு பழையசட்டியிலிட்டு காஞ்சிரைவேர் தடியால் கைவிடாமல் மையாகும்வரையில் கடைந்து செப்புச்சிமிழிலடைத்துக்கொண்டு ஒரு குன்றிமணியிடை வெற்றிலைச்சாற்றிலாவது வெந்நீரிலாவது கலந்துகொடுக்க அஷ்டநாகம் முதலாயுள்ள சகல விஷமும் தீரும். உயிர் அடக்கமாயிருந்தால் நீர்த்தாரைமூலமாய் மேற்படி மையைப் பிரயோகிக்கத் தூங்கினவன்போல் விழிப்பான்.

### பரஞ்சோதிமை.

தாய் ஈசல்கள் இருபதுகொண்டுவந்து பீங்கானிற்போட்டு கால்விராகனிடை வெங்காரத்தைப்பொரித்துப்பொடித்துத்தூவி வெய்யலில்வைக்கத் தைலமாகும் அந்தத் தைலம் களஞ்சி 3.

| | |
|---|---|
| சுக்கு | சூதம் |
| பெருங்காயம் | இந்துப்பு |
| கெந்தி | வேப்பம்பருப்பு |

இவைகள் வகையொன்றுக்கு கழஞ்சி 1, இவைகளை ஒன்றாய்ச்சேர்த்தரைத்து மைபதத்தில் சிமிழி லடைத்துக்கொண்டு பணவிடை வெற்றிலையிற் சேர்த்துக்கொடுக்க அஷ்டநாகமுதலாயுள்ள சர்வ விஷமுந் தீரும். விஷம் சிரசிலேறி மயக்கமாய்விட்டால் என்பிரமாணம் மேற்படி மையைக் கண்ணில் கலிக்கமும் காசியில் நசியமுமிட மயக்கந்தெளிந்து விஷமிறங்கிப்போம். வெறிநாய் எலிக்கடிவிஷமுந்தீரும். மேற்படி வெற்றிலையில் பெண்களுக்குக் கொடுக்க மலடு நீங்கும். குஷ்டம் பதினெட்டு, குன்மவலி, வயிற்றுவலி நீங்கும்.

### சூரன்மை.

| | |
|---|---|
| மூஞ்சூறுவயிற்றில் | கெந்தகம் |
| சூதம் | வெள்ளைப்பாஷாணம் |

இவைகள் வகையொன்றுக்கு விராகனிடை 2, பொடித்து வைத்துந் தைத்து ஒரு கலசத்திற்போட்டு அது முழுகும்படி-



வேப்பெண்ணெய்விட்டு கலசவாயைமூடி சீலைமண்செய்து எருமைத்தொழுவில் ஒருமண்டலம் புதைத்தெடுத்துக் கல்வத்திலிட்டு மயனமாயரைத்து சிமிழிலடைத்துக்கொண்டு நல்லரவு விஷத்திற்கு ஒரு சுண்டைக்காய்ப்பிரமாணமும், விரியன் விஷத்திற்கு இரண்டு சுண்டைக்காய்ப்பிரமாணமும் மற்ற சில்லரை விஷத்திற்கு ஒரு மிளகுப்பிரமாணமும் வெற்றிலையில் தடவிக்கொடுக்கவும்.

---

### பரஞ்சோதி மாத்திரை.

| | |
|---|---|
| திப்பிலி | சூதம் |
| மிளகு | கெந்தகம் |
| இந்துப்பு | இலுப்பைப்பருப்பு |
| பெருங்காயம் | செண்பகவேர் |
| பழுபாகற்கிழங்கு | இருவாட்சிவேர் |
| கொல்லங்கோவைக்கிழங்கு | முருங்கைவேர் |
| நாவிக்கிழங்கு | காஞ்சிரைவேர் |
| ஆடுதீண்டாப் பாளைவேர் | வாளப்பருப்பு |

இவைகள் வகையொன்றுக்குவிராகனிடை 1-இவைகளையெல்லாம் பொடித்து மூஞ்சூறு வயிற்றுள்வைத்து தைத்து ஒரு கலசத்திற்போட்டு அதின்வாயைமூடி பூமியில் புதைத்து மண்டலஞ்சென்றெடுத்து பேய்ப்பீர்க்கிலைச் சாற்றால் அரைத்துப் பணவிடை வீதம் மாத்திரைசெய்து ஒருமாத்திரையை வெற்றிலையில் வைத்துக்கொடுக்க சர்வவிஷமுந் தீரும். விஷம் தலைகொண்டிருந்தால் ஒருமாத்திரையை வெற்றிலைச்சாற்றில் மத்தித்து கண்ணில் கலிக்கமும் காசியில் நசியமுஞ்செய்து நீர்த்தாரையில் வாளத்தின் மூலமாய் பிரயோகிக்க விஷமிறங்கும்.

---

### சூடாமணி மாத்திரை.

| | |
|---|---|
| தொட்டிப்பாஷாணம் | வாலுளுவையரிசி |
| வெள்ளைப்பாஷாணம் | வாளப்பருப்பு |
| கௌரிபாஷாணம் | இந்துப்பு |
| அரிதாரம் | கார்கோலரிசி |
| சூதம் | மூசுறுமுட்டை |
| சேங்கொட்டைப் பருப்பு | வெண்காரம் |

| | |
|---|---|
| காக்கைகொல்லிவித்து | நவாச்சாரம் |
| துருசு | கல்லுப்பு |
| பெருங்காயம் | வெடியுப்பு |
| விளாவரிசி | பேய்க்ககாளான் |
| கருநாவிக்கிழங்கு | எட்டிவித்து |
| மூஞ்சூறின்சதை | |

வகையொன்றுக்கு விராகனிடை 1. இவைகளை வெள்ளெருக்கம்பாலால் 3-நாள்வரையில் கைவிடாமலரைத்து குன்றிபோல் மாத்திரைசெய்து ஒருமாத்திரையை வெற்றிலைச்சாற்றில் கொடுக்க சகல விஷமுந்தீரும். உயிர் அடங்கியிருந்தால் உச்சியிலும் தோளிலும் தொடையிலும் கீறி மேற்படி மாத்திரையை சிறுநீரிலுரைத்து சூடுபிறக்கத் தேய்த்துவிட உயிர் திரும்பும்.

### கடிவாயிற்கட்டுமாத்திரை.

| | |
|---|---|
| இரதம் | நாவிக்கிழங்கு |
| வாளப்பருப்பு | நெய்க்கொண்டான் பழம் |
| கௌரிபாஷாணம் | |

இவைகளை ஓர்நிறையாக வெடுத்து எலுமிச்சம்பழச்சாற்றால் மயனமாயாட்டி மாத்திரைசெய்துகொண்டு எந்த பாம்பு தீண்டினாலும் கடிவாயில்வைத்துக்கட்ட விஷத்தைக் கீழ்நோக்கியிழுத்துக்கொள்ளும் மேற்செல்லவிடாது.

### வேறு.

| | |
|---|---|
| வெண்காரம் | அரிதாரம் |
| இரதம் | பச்சைப்பாம்புகண்டம் |

இவைகளை வெற்றிலைச்சாற்றாலாட்டி மாத்திரை செய்துகொண்டு கடிவாயில்வைத்துக்கட்ட விஷம் கீழ்நோக்கும்.

### அடக்கம் எழுப்ப அஞ்சனம்.

| | |
|---|---|
| சூதம் | துத்தம் |
| வாளப்பருப்பு | வெண்காரம் |
| அரிதாரம் | நீலரெங்கு |
| நீலத்துருசு | |

இவைகள் வகையொன்றுக்கு விராகனிடை 1, இவைகளை பேய்ப்பீர்க்கிலைச்சாற்றாலரைத்து மாத்திரைகளாகச் செய்துகொண்டு பணவிடைவெற்றிலைச்சாற்றிலாவது பேய்ப்பீர்க்கிலைச்சாற்றிலாவது உரைத்து விழியில்தீட்ட அஷ்டநாகமுதலாயுள்ள விஷஜந்துக்களின் கடியாலடங்கின உயிர் மீளும்.



### கருட அஞ்சனம்.

| | |
|---|---|
| இந்துப்பு | பெருங்காயம் |
| இரதம் | அரிதாரம் |

இவைகளை ஓர்நிறையாயெடுத்து பேய்ப்பீர்க்கிலைச்சாற்றாலாட்டி மாத்திரைசெய்து பணவிடை வெற்றிலைச்சாற்றால் மத்தித்துக் கண்ணிலிட அஷ்டநாக முதலாயுள்ள சர்வவிஷமுந்தீரும்.

### அடக்கம் எழும் ஆக்கிராணம்.

தாம்பூலப்பூச்சி இரதம் துருசு வகையொன்றுக்கு விராகனிடை 1, இவைகளை ஒன்றாய்ப்பொடித்து சுந்தரிவயிற்றுக்குள் வைத்துத் தைத்து புகையடிக்கிறவிடத்தில் கட்டிவைத்து காய்ந்தபின் பொடித்து அதை நாசியிலூத சகல அரவு விஷமுமிறங்கும்.

### வேறு.

காற்பலம் இஞ்சியை மேற்றோலைப்போக்கி அது மூழ்கும்படி வெள்ளெருக்குப்பால்விட்டு நிழலிலுலர்த்தி.

துருசு மஞ்சள் வகைக்குப் பலம் அரைக்கால் கூட்டிப்பொடித்து பேய்ச்சுரைக்குடுக்கையில் அடைத்துக்கொண்டு நாசியிலூத சகல விஷமும் அடக்கமுந் தீரும்.

### சகல விஷத்திற்கும்

## அகோரருத்திராஞ்சனம்.

கேளிரவம் பேய்ப்பீர்க்கன் சாற்றில்தோய்த்து
கெடியான வாளமொடு துத்தந்தாரம்
நீளவே வெண்காரந் தன்னைவாங்கி
நேராக விலைவையைந்தும் சமனாய்க்கூட்டி
மாளவே பேய்ப்பீர்க்கன் சாற்றாலாட்டி
வறுத்துருட்டிக் காயவைத் தெடுத்துக்கொண்டு
பாம்விடங்கள் தீண்டிமண்டை கொண்டால்கண்ணில்
பதித்துவிடு பொரிபட்ட பஞ்சாங்தானே.

### இதற்கு விபரம்.

பேய்ப்பீர்க்கன்சாற்றைக் கொதிக்கவைத்து அதில் இரசத்தைச் சாய்க்கவும் இப்படி மூன்றுவிசை மேற்படி சாற்றில் சுத்தியான,

| | |
|---|---|
| இரசம் | அரிதாரம் |
| வாளம் | வெண்காரம் |
| துத்தம் | ஆக 5. |

இவை ஐந்துசரக்கும் சமனிடையெடுத்து கல்வத்திலிட்டுப் பேய்ப்பீர்க்கன்சாற்றா லரைத்து மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு விஷம் தீண்டியவர்களுக்கு உமிழ்நீர் அல்லது மூலைப்பால் அல்லது கையாந்தகரைச்சாற்றால் இழைத்துக் கண்ணில் தீட்டினால் விஷமீளும்.

## சகல விஷத்திற்கும்
## கண் கலிக்கம்.

காவென்ற இந்துப்பு விரதங்காயம்
தகட்டுஅரி தாரமிவை சமனாய்க்கூட்டி
வினொன்று சொல்லாமல் பேய்ப்பீர்க்கன்சாற்றால்
இறுகவரைத் துண்டைசெய் தெடுத்துக்கொண்டு
காவென்ற கண்ணிலிட்டு உமிழ்நீராலே
நாகமது நாலுபல் நாட்டினாலும்
வாவென்ற அண்டமதில் பரிதிகண்ட
வாடையெனும் பனிபோலே வாங்கும்பாரே.

### இதற்கு விபரம்.

| | |
|---|---|
| இந்துப்பு | தகட்டு அரிதாரம் |
| இரதம் | காயம் |

இவை நான்குசரக்கும் சமனிடையெடுத்து பேய்ப்பீர்க்கன் சமூலச் சாற்றினால் இரண்டுநாளரைத்து கல்வத்திலேயே காற்றுலரியபிறகு மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு உமிழ்நீரா லிழைத்துக் கண்ணில் தீட்டினால் நாகத்தின் நான்கு பற்கள் பட்டபோதிலும் அவ்விஷமானது சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கிவிடும்.

## சகல விஷத்திற்கும்
## சித்தாந்தப்பிரசமாத்திரை.

பாரடா சித்தாந்த பிரசவுண்டை
பாடுகிறேன் மகிழ்வித்து தேவதாளி
நேரடா பேய்ப்பீர்க்கு வித்தும்சூதம்
நேர்வாள மிவையைந்தும் சமனாய்க்கூட்டி
ஏரடா சம்பீரச் சாறுவிட்டு
எட்டுநாள் ஊறவைத்து எட்டொன்றுநாள்
சீரடா பயறுபோ லரைத்துருட்டித்
திறமாக நிழலுலர்த்தி வைத்துக்கொள்ளே.
வைத்துக்கொள் விஷந்தீண்டி சிவன்போனால்
வாகான கையான்சா றெருக்கன்சாற்றால்
வெற்றியா யொருகுளிகை யுரைத்துக்காதில்
விட்டடைத்து மறுசெவியில் காந்தல்காணும்



மெத்தவே காணுக்கால் அமுரிதன்னில்
விரைந்திழைத்து ஒருகுளிகை விழியிற்போட
முத்தியாய் புதச்சிலை நனைத்தமுடில்
மூன்றேகால் நாழிகையில் முழிப்பான்காணே.

### இதற்கு விபரம்.

| | |
|---|---|
| மகிழ்வித்து | இரசம் |
| தேவதாளிவித்து | வாளம் |
| பேய்ப்பீர்க்கன்வித்து | ஆக 5. |

இவை ஐந்துசரக்குகளையும் சமனிடையெடுத்து எலுமிச்சம்பழச்சாறுமிதக்கவிட்டு எட்டுநாள் ஊறவைக்கவேண்டும் சாறு சுவறிப்போனால் மறுபடியும் விடவும் ஒன்பதாநாளெடுத்து மைபோல் அரைத்து சிறுபயறுபோல் மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும் விஷம் தீண்டினபேர்களுக்கு கையாந்தகரைச்சாற்றில் அல்லது எருக்கன்சாற்றிலாவது இழைத்து காதில் விட்டால் மற்றொருகாதில் அனல் வீசும். அப்படி அனல் எழும்பாவிட்டால் சிறுநீர்விட்டு ஒரு குளிகையை யிழைத்து கண்ணில் கலிக்கம் தீட்டினால் மூன்றேமுக்கால் நாழிகையில் விழித்தெழுந்திருப்பான்.

## சுடுகாடுமீட்டான் குளிகை.

காணப்பா கர்லங்கடி யெங்கேபோச்சு
காசினியில் விஷந்தீண்டி சாவாரில்லை
வீணென்று எண்ணாதே வேகம்மெத்த
விருதுகட்டிக் காப்பேனென்று விருதுபோடு
ஊணப்பா விக்குளிகை சூட்சமாகும்
உறுதியிலே சுடுகாடு மீட்கலாகும்
நாணப்பா மாவிரசங் காயங்கோஷ்டம்
நல்வாளப் பருப்பழிஞ்சி பருப்பும்பேயே.
பேய்ப்பீர்க்கன் வித்துகாஞ் சிரையின்வித்து
பேர்சமனாய்த் தேசிச்சார் மிதக்கவிட்டு
ஓயாம லொருஜாமம் அரைத்துருட்டி
உண்டைசெய்து நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு
தீயான காலவிஷந் தலைமேற்கொண்டால்
சிறுநீரி லுரைத்திடுவாய் கண்ணிலேதான்
ஓயாத விஷமதுதா னுன்பேர்சொன்னால்
ஒழிந்தொடுங்கிப் போச்சுகடா வுண்மைதானே.

### இதற்கு விபரம்.

| | |
|---|---|
| நாபி | வாளம் |
| இரசம் | அழிஞ்சிவித்து |
| காயம் | பேய்ப்பீர்க்கன்வித்து |
| கோஷ்டம் | எட்டிவித்து |

இவை 8-தினுசும் சமனிடையெடுத்து எலுமிச்சம்பழச்சாற்றில்மிதக்கவிட்டு ஒருஜாமம் கைவிடாமலரைத்து பயறுபிரமாணம் மாத்திரைசெய்து நிழலிலுலர்த்திவைத்துக்கொண்டு விஷம் தீண்டியபேர்களுக்கு ஒருமாத்திரையெடுத்து சிறுநீரி லுரைத்து கண்ணில் தீட்டினால் விஷம் நீங்கி விழித்தெழுந்திருப்பான்.

## சகல விஷத்திற்கும்

# மகாபரஞ்சோதி மை.

போச்சுதிந்தப் பரஞ்சோதி மையைக்கேளு
புகழான மகிழ்வித்து அழிஞ்சிவித்து
வாய்ச்சிந்த வெண்குன்றி பருப்புவாளம்
வகையுள்ளி சுக்கினுடன் கௌரிதாரம்
நீச்சிந்த நவச்சாரம் திரிகடுகுநாவி
திருவிஷவெண் காரமனோ சிலையும்லிங்கம்
ஆச்சிந்த பொன்மெழுகு தில்லைவித்து
அழகான சீனமுடன் அருசுவாங்கே.

வாங்கியே வகைவகைக்குச் சமன்சுவீதம்
வளமான கெந்திரச மொன்றுக்கும்
ஓங்கியே எலுமிச்சம் பழச்சாறுதன்னை
யுறுதியாய் விட்டரைப்பா யைந்துநாள்தான்
பாங்கான ரவியில்வைத் தெடுத்துக்கொண்டு
பண்பாக வாய்குவிந்த பீங்கான் தன்னில்
தாங்கியே வைத்தடைத்து நித்தநித்தந்
தயவாகப் பணவிடையெடு ததிலேயிதே.

சந்தடவே குஷ்டவகை பதினெட்டும்போம்
எரிவிரியன் வகையாறு நாகமெட்டும்
காய்ந்திடுமண் டலிசாரை கடுவிடங்கள்பூரான்
சுருதுமடா செவ்வட்டை முதலைமூஷிக்
ஆய்ந்தரணை விப்புருதி யாறுமோடும்
அப்பனே ஜன்னிபதின் மூன்றுமோடும்
சேர்ந்தபிணி தீயிலிட்ட மெழுகாய்ப்போகும்
திறமான பரஞ்சோதி திடமாங்காணே.

திடமான வையிதுதான் தேசமெல்லாம்
ஜெயஸ்தம்பம் நாட்டி வைக்கும் விருதுபோடு
விடமீட்க வல்லருனக் கெதிரியில்லை
விருந்த வுலகுதனில் மைதான்மெத்த
படிக்குள்ளே யிம்முறைபோ லெதுவுமில்லை
பார்ப்பதற் கிதுசுருக்கு பரீட்சைமெத்த



நொடிக்குமுன்னே நோய்விஷங்க ளோடிப்போகும்
நாற்றாண்டுக் காலமட்டும் கீர்த்தியாமே.

## இதற்கு விபரம்.

| | |
|---|---|
| மகிழம்வித்து | நவாச்சாரம் |
| அழிஞ்சிவித்து | சுக்கு |
| வெண்குன்றிப்பருப்பு | திப்பிலி |
| வாளப்பருப்பு | மிளகு |
| காயம் | நாவி |
| மைசாட்சி | திருவிஷம் |
| கௌரிபாஷாணம் | வெண்காரம் |
| அரிதாரம் | மனோசிலை |
| பொன்மெழுகு | லிங்கம் |
| கெந்தி | இரசம் |

இந்த 20-வகையும் சமனிடையெடுத்து எலுமிச்சம்பழச் சாறுவிட்டு இரண்டுநாள் ஊறவைத்து அதன்பிறகு ஐந்துநாள் வரையினும் கைவிடாம லரைத்து ஒருஜாமம் சூரியகாந்தியில் வைத்தெடுத்துக்கொண்டு வாய்சிறுத்த பீங்கான்கோப்பையில் வைத்து பதனம்பண்ணி பிரதிதினமும் பணவிடையெடுத்து வெற்றிலையில் மடித்துக்கொடுக்க குஷ்டம் 18-வகையும் ஆறு வகை விரியன்விஷமும் எட்டுவகை சர்ப்பவிஷமும் மண்டலி, பூரான், செவ்வட்டை, முதலை, அரணை, எலி முதலான விஷங்களும் விப்புருதி ஜன்னி பதின்மூன்று இவைகளியாவும் தீரும். வியாதியும் விஷநிதானமும் பார்த்து 5-நாள் அல்லது 7, 10-நாள் வீதம் கொடுக்கவும் பத்தியம் கால்புளிப்பு கூட்டவும்.

---

## நாள்பட்ட விஷத்திற்கு

# உண்டை.

கீர்த்தியாம் வெள்ளெருக்கன் சிறியாநங்கை
கொடிவெள்ளைக் காக்கணம்வே ரிவைகள்மூன்றும்
பார்த்திடவே வகைக்குப்பாக் களவரைத்து
பரிவாகத் தேசிக்கா யளவுவெல்லம்
சேர்த்திசைய மெய்த்திடவே மைந்தாகொள்ளு
நற்குருவை யரிசிச்சோ றுண்ணச்சொல்லு
மூர்த்திகட்கும் நாட்சென்ற விஷங்கள்போச்சு
மூன்றுநாள் ராப்பகல் பத்தியமதாமே.

### இதற்கு விபரம்.

வெள்ளெருக்கன்வேர், சிறியாநங்கைவேர், வெள்ளை காக்கணம்வேர் இம்மூன்றும் வகைக்குப்பாக்களவெடுத்து அரைத்து எலுமிச்சங்காயளவு நல்லவெல்லத்துடன் மத்தித்து ஆறுபங்காக்கி காலை மாலை யிருவேளையும் மூன்றுநாள் கொடுக்கவும் குறுநொய்யரிசிச்சாதம் புளியற்ற மிளகுநீர் கூட்டவும் மூன்றுநாள் இராப்பகலும் இப்படியே பத்தியமிருக்கவும். ஏட்டபட்டு உடம்பில் ஊறியவிஷம் தீரும்.

### விரியன் கடித்த புண்ணுக்கு

## மருந்து.

பத்தியமாம் பாவட்டையிலை வேகவைத்து
பண்பான வெந்நீரால் கழுவிப்போட்டு
வெற்றியா மவ்விலையை வைத்துக்கட்ட
விரியனது கடிவீங்கி வெடித்தபுண்கள்
சுத்தமா யாறிவிடும் சொன்னேன்சொன்னேன்
சூராதி சூரனென்ற ஔஷதங்கேள்
நித்தியமும் ராச்சொல்லான் பலமேவாங்கி
செடிப்பேய்ச் சுரையருகில் நின்றுபாரே.

### இதற்கு விபரம்.

விரியன் கடித்து வீங்கி வெடித்த புண்ணுக்குப் பாவட்டை இலைபோட்டு தண்ணீர்காய்ச்சி அந்த நீரைக்கொண்டு கழுவிவிட்டு ஈரமில்லாமற்படிக்கு துணியினால் ஒத்தடம்செய்து மேற்படி இலையை வதக்கிவைத்துக் கட்டவும் இப்படி 5, 6, வேளை கட்டி விரியன்கடித்த புண் ஆறிவிடும். குறுநொய் யரிசிச்சோறும் மிளகு நீரும் கூட்டவும்.

### சகல விஷத்திற்கும்

## சூராதிசூரன்.

பாரேநீ கொடிகளொன்றும் அருமலேதான்
பருதிநாள் காய்குடைந்து ராச்சொல்லானை
சேரவே வைத்தடைத்து சதையால்மூடி
செடிச்செய்து வுலருமட்டும் போட்டுப்பாரு
வாரமதி லேயெடுத்து வைத்துக்கொண்டு
வசம்புள்ளி விரையளவு அரைத்துநீரில்
ஊறவே நாக்கிலிட்டு வுள்ளுக்கீவாய்
ஓடுமே விஷமொழிந்து வுடலைவிட்டே.



### இதற்கு பத்தியம்.

இராச்சொல்லான் என்னும் காய்ப்பு ஒருபலமெடுத்து பேய்ப்பீர்க்கன்செடியினிடம் ஆதிவாரம்சென்று அதின்காயை மேல் சதுரத்தில் வட்டமாகக் கீறியெடுத்து உள்சதையை யெடுத்துவிட்டு மேற்படி உப்பைக்கொட்டி மேல்பிலைமூடி கயிற்றால்கட்டிவைக்கவும் நான்குநாட்பொறுத்து அதேகாயில் மறுபடியும் ஒருபலம் உப்புபோட்டு முன்சொன்னபடியே கட்டிவைக்கவும் அந்தச் செடியானது வேர்நசித்து உலருமட்டும் காயை அறுக்காமலிருந்து மேற்படி செடிசெத்து உலர்ந்துபோனபிறகு ஆதிவாரம்பார்த்து அந்தக்காயை அறுத்து வசம்பு உள்ளி கொஞ்சம் கூட்டி நீர்விட்டரைத்து பீர்க்கன்விரையளவு நாக்கில்போட்டு ஊறியபின் மோர்ச்சையளவு உள்ளுக்குக்கொடுக்கவும் சகல விஷங்களுந் தீரும். இப்படி விஷம் தீருமளவும் சிலநாள் கொடுக்கவும் முன்போலவே பத்தியமிருக்கவும்.

இது அரவு கடித்தவுடன் கொடுக்கப்பட்ட ஔஷதமன்று. நாட்பட்ட விஷங்கட்கு செய்யவேண்டிய சிகிச்சையாம்.

---

### சகல விஷத்திற்கும்

## நஞ்சிற்பாய்ந்தான்மாத்திரை.

வரிசையிது சொல்லுகிறேன் நாவிக்கும்
வளமான தாருகதுத்தம் வாளந்தாரம்
தரியாத சிலைகுன்றி பருப்புவெள்ளைச்
சாரணைவேர் மகிழ்வித்து பச்சைப்பாம்பின்
சிரங்கூட்டிச் சரிசமனாய் சம்பீரச்சார்
தெளிவாக விட்டரைநீ கல்வத்திட்டு
உரித்தான வெண்காரங் கூட்டிப்போட்டு
வுகந்துதிரி நாளரைத்து வுண்டைபண்ணே.

பண்ணியே நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு
பாரவிடந் தீண்டிமிகத் தலைமேற்கொண்டால்
திண்ணமா யுச்சியிலும் நுதலிலேயும்
திடமான பிடரியிலுங் கன்னத்திலேயும்
நன்றாகக் கீறிவைத்துக் கட்டும்போது
நாகவிட முதற்கொண்டு நசிஞ்சிப்போகும்
புண்ணரியமா மலைகாத்தான் குளிகைகேளு
புதியமுத்தன் தாருசிலை காயந்தானே.

### இதற்கு விபரம்.

| | |
|---|---|
| நாவி | அருகு |
| இரசம் | துத்தம் |
| வாளம் | சாரணைவேர் |
| அரிதாரம் | மகிழம்விதை |
| மனோசிலை | வெண்காரம் |
| வெள்ளைக்குண்டுமணி | பச்சைப்பாம்புதலை |

இவையாவும் சமனிடையாய் நிறுத்தெடுத்து மூன்று நாள் வரையிலும் அரைத்தபிறகு நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு விஷம் தீண்டி தலைக்கேறி சுவாசமில்லாதவர்களுக்கு உச்சியிலும் நெற்றியிலும் பிடரியிலும் கன்னத்திலும் கத்தியாற்கீறி இம்மருந்தைவைத்துக் கட்டினால் உடனே விஷம் நசித்து உயிர் மீண்டு எழுந்திருப்பான்.

---

### மரிலங்காத்தான் குளிகை.

தாமென்ற வாளமரி தாரங்கெந்தி
சாதிலிங்கம் நாவிவெள்ளை கெவுரிருகம்
மேனென்ற தொட்டியொடு எலிபாஷாணம்
மெரிமிளகு குதிரைப்பல் பாஷாணந்தான்
வாமென்ற திப்பிலியோ டிவைகளெல்லாம்
வளமாகச் சமன்கூட்டி மேனிச்சாறு
நீதினைவாய் விட்டரைத்து வுண்டைபண்ணி
நிழலுலர்த்தி மிளகுபொடி தன்னில்சேர்த்தே.

### இதற்கு விபரம்.

| | |
|---|---|
| துத்தம் | கெந்தி |
| அருகு | ரசம் |
| காயம் | லிங்கம் |
| மனோசிலை | குதிரைப்பல்பாஷாணம் |
| நாவி | தொட்டிப்பாஷாணம் |
| கெவுரிபாஷாணம் | எலிப்பாஷாணம் |
| வாளம் | திப்பிலி |
| அரிதாரம் | மிளகு |

இவை சமனிடையெடுத்துப் பொடிசெய்து குப்பைமேனிச் சாறுவிட்டரைத்து உண்டைசெய்து நிழலிலுலர்த்திவைத்துக் கொண்டு விஷம் தீண்டி வந்தவர்களுக்கு நஞ்சிற்பாய்ந்தான் மாத்திரைபோல் இதையும் உபயோகித்தால் விஷமொழிந்து உயிர் மீண்டு எழுந்திருப்பான்.



### சகலவிஷத்துக்கும் நசியம்.

| | |
|---|---|
| முருக்கிலை | மிளகு |
| தும்பை | வெற்றிலை |
| எருக்கிலைப்பழுப்பு | நவாச்சாரம் |

இவைகளைத் தட்டி நாசி காதில் நசியமிட சகல விஷமும் நீங்கும்.

### வேறு.

| | |
|---|---|
| தும்பையிலை | வசம்பு |
| அவுரியிலை | உள்ளி |
| பெருங்காயம் | மிளகு |

சிறுபிள்ளைகளின் அமுரிவிட்டுத் தட்டி, காது நாசியில்விட்டால் கீழ்நோக்கும்.

### வேறு

| | |
|---|---|
| தைவேளையிலை | சுக்கு |
| வேலிப்பருத்தியிலை | மிளகு |
| வெற்றிலை | வசம்பு |
| கரியுப்பு | வெள்ளுள்ளி |

இவைகளை ஓர்நிறையாயெடுத்து சிறுநீர்விட்டுத் தட்டி நாசியில் நசியமிட அடங்கினவுயிர் திரும்பும்.

### விரியன்பாம்புகளின் கடிக்குறியும், அவைகளுக்குச் சிகிச்சையும்.

மேற்படி விரியன் வகைகள் ஆறும். அவற்றில் குருவிரியன் கடித்தால் செந்நிறமாயும் பொன்னிறமாயும் நீர்வடியும், கடிவாயிற் றசைத்துள்ளி வீங்கும் கடுக்கும் உடல் வெதுப்புண்டாகும்.

நாட்பட்ட வரகரிசியும் பிராய்மரப்பட்டையு மிடித்து மாவு செய்து வெள்ளாட்டுப்பாலில் சமைத்து மூன்றுநாள்தின்று மறு பத்தியம் மூன்றுநாளிருக்கத்தீரும். உப்பு புளி தள்ளவும்.

### செவ்விரியன்கடி.

செவ்விரியன் கருவிரியன் பசுமைநிறவிரியன் இவை கடித்தால் கடிவாயில் உதிரம் வடியும் வீக்கம் கடுப்பு இரத்தவாந்தியுண்டாகும்.

செவ்விரியன் கடித்தவுடன் ஓடுவைவேரை அரைத்துக்கொடுக்கத்தீரும். வன்னி இலையை நெல்லிக்காய்ப்பிரமாணம் அரைத்து ஆவின் வெண்ணெயில் மத்தித்து உள்ளுக்குக்கொடுத்து கடிவாயிலும் பூசத்தீரும்.

வெள்வேலம்பட்டையை ஆவின்மோரி லரைத்துக் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

### கருவிரியன் கடி.

கருவிரியன் கடித்தாலும் பசுமைநிறவிரியன் கடித்தாலும் அரைக்காற்படி மிதிபாகலிலைச்சாற்றில் காற்பலம் மிளகைப்பொடித்துப்போட்டுக் கொடுக்க மேற்படி விரியன்களின் விஷமும் மற்ற விரியன்களின் விஷமுந் தீரும்.

### பெருவிரியன் கடி.

பெருவிரியன் கடித்தால் பேய்க்குமட்டிவேர், அவுரிவேர், தலைச்சுருளிவேர், மிளகு சமனாயிடித்துப் பேய்ச்சுரைக்குடுக்கையில் அடைத்துக்கொண்டு திரிகடிப்பிரமாணம் சிறுபிள்ளைகளின் நீரில் கலக்கிக்கொடுத்து கடிவாயிலும் பூசத்தீரும். இம்பூரல், கீழ்காய்நெல்லி, கோழிக்கால், மிளகு, மஞ்சள் இவைகளை ஓர்நிறையாய்ச் சிதைத்து நல்லெண்ணெயிற் காய்ச்சி கடிவாய்ப்புண்ணிற் போட்டு ஆத்தியிலையை வெதுப்பிப் பொடித்துத் தூவிவரப்புண்கள் ஆறிவிடும்.

### கத்திரிவிரியன் கடி.

கத்திரிவிரியன் கடித்தால் உதிரம் வடியும் அதில் வீக்கம், கடுப்பு, எரிச்சல், மயக்கங்காணும் உடல் வெதும்பும்.

### புல்விரியன் கடி.

புல்விரியன் கடித்தால் கடிவாயில் விலச்சுண்டுவதுபோல் சுண்டிவலித்து வீங்கும் உடற்கணுக்கள் வீங்கும் தூக்கம்போல் மயக்கங்காணும்.

### சுழற்றுக்கோல்விரியன் கடி.

சுழற்றுக்கோல்விரியன் கடித்தால் தலை சுழலும், உடலுளையும், காந்தும், நடுங்கும், செவிமந்திக்கும், கண்பஞ்சடையும் மேற்சொல்லிய எவ்வகை விரியன் கடித்தாலும் உடனே ஒரு குன்றிமணிப்பிரமாணம் அருகைப் பத்து வெற்றிலையில்வைத்து மடித்துத் தின்னக்கொடுக்க மேற்படி விஷங்களிறங்கும். கடிவாய் வீங்காது கடுப்பு எரிவு உடனே தீரும்.

அவுரிவேரை யரைத்து ஆவின்பாலில் கொடுக்க சகல விரியன்களின் விஷமுந் தீரும்.

சன்னிநாயகம் சமூலம் இடித்தச் சாறுவாங்கி அரைக்காற்படி உள்ளுக்குக்கொடுத்து மேற்படி இலையை அரைத்து உடல் முழுமையும் பூசிவிட சகல விரியன்களின் விஷமுந்தீரும். கிரந்திநாயகத்தையும் இப்படியே செய்யத் தீரும்.



குட்டித்தக்காளியிலை பெருந்தக்காளியிலை இவ்விரண்டையும் இடித்து அரைக்கால்படிச் சாறுவாங்கி உள்ளுக்குக் கொடுத்து மேனிலும் தவாலையிட மேற்படி விஷங்கள் தீரும்.

### கடிவாயிற்பூசும் மருந்து.

தலைமயிரைக் கருக்கி ஆவின் வெண்ணெயில் மத்தித்துக் கடிவாய் வீக்கத்திற் பூச வற்றும்.

பாவட்டையிலையை அவித்து அந்தத் தண்ணீரால் புண்ணைக்கழுவி வெற்றிலையை வைத்துக் கட்டிவரத் தீரும்.

அம்மான் பச்சரிசியிலையை யரைத்துப்பூசிவர வீக்கம், கடுப்பு, எரிவும் தீரும்.

தக்காளிவேர், நாயுருவிவேர் இவைகளைச் சிறுநீர்விட்டரைத்துக் கடிவாயிற் பூசிவர வீக்கம் வற்றும் உடம்பிற்பூசி முழுக்க மயக்கந் தீரும்.

கோழிச்சதையையாவது அதின்கொழுப்பையாவது மூன்றுநாள் வைத்துக்கட்டி அப்பாற் காடியிற்கழுவி இதனடியிற் கண்டிருக்கிற எண்ணெயைப் போடவும்.

### சகல விரியன் விஷகடிக்கும், வீக்கத்திற்கும், புண்ணுக்கும் போடத்தைலம்.

| | |
|---|---|
| இரண்டு கோழிக்கால் | மஞ்சள் |
| இம்பூரல் | மிளகு |
| கீழ்க்காய்நெல்லி | இந்துப்பு |

இவைகளைச் சிதைத்து நல்லெண்ணெயிற்காய்ச்சி புண்ணிற்போடத் தீரும்.

| | |
|---|---|
| மூஞ்குறு | சுக்கு |
| வசம்பு | உள்ளி |

இவைகளைச்சிதைத்து நல்லெண்ணெயில்காய்ச்சி புண்ணிற்போட சகலவிரியன்களின் கடிவிஷமும் புண்ணும் ஆறும்.

### கருவழலைமுதலிய மற்ற சில்லரைப்பாம்புகளின்கடிவிஷக்குறியும், அவைகட்குச் சிகிச்சையும்.

உடல் தீப்போற்காந்தும் வியர்க்கும் உள்ளங்கால் கைசிவக்கும் கண்மங்கிப்போகும் நெஞ்சடைக்கும் கோழைகட்டும் பல்வலிக்கும்.

மற்றவைகை வழலை கடித்தால் உடலில் பசுமை நரம்புதோன்றும் வியர்க்கும் வாயில் நீர் வடியும் கடிவாயில் உதிரம் வடியும் வாய் வழுவழுக்கும்.

### கருவழலைக் கடி.

| | |
|---|---|
| வேலிப்பருத்திவேர் | அதின், இலை |
| அதின் இலை | நீலிவேர் |
| வெள்ளைச்சாரணைவேர் | பெருங்காயம் |

இவைகளை ஒர்நிறையாயரைத்துத் தேசிக்காய்ப்பிரமாணம் உள்ளுக்குக்கொடுத்து கடிவாயிலும் பூசத் தீரும்.

### மற்ற வழலைகள் கடித்தால்.

நத்தைச்சூரியிலை, வசம்பு, உள்ளி இவைகளை அரைத்து கடிவாயிற் பூசி உடம்பிற்தேய்த்து முழுக்கவும்.

| | |
|---|---|
| சிற்றாமணக்கின்வேர் | பழம்புளி |
| குன்றிமணிவேர் | கிலப்பனைக்கிழங்கு |

இவைகளை ஓர்நிறையாய் அரைத்து சிறுநீரிற்கலக்கிக்கொடுக்கத் தீரும்.

உப்பிலிவேர், நிலப்பனைக்கிழங்கு இவ்விரண்டையும் ஓர்தேசிக்காய்ப்பிரமாண மரைத்து சிறுநீரிலாவது ஆவின் வெண்ணெயிலாவது கொடுக்கத் தீரும்.

### மயக்கரவு கடி.

மயக்கரவு கடித்தால் இருவிழியும் சுழலும் அடிக்கடி மயக்கங் காணும் முகம் கறுக்கும் பரபரப்பாய் விஷமேறி மார்பை அடைக்கும் கைகால் நரம்புகள் விறைக்கும்.

கரிப்பாலையிலையை அரைத்து ஒரு கொட்டைப்பாக்குப்பிரமாணம் மூன்றுநாள்கொடுத்து மிளகுபுகையை நாசியிலும் முகத்திலும்காட்டத் தீரும்.

### முறக்கரவு கடி.

முறக்கரவு கடித்தால் உடலைத் திருகி முறுக்கும் அங்கம் பதரும், இதற்கு பெருங்காயம், சிறுசின்னியிலை, வசம்பு இவைகளை ஓர்நிறையாயரைத்துத் தேசிக்காய்ப்பிரமாணம் கொடுத்து அதை உடம்பிற்பூசி முழுக்கி நாசியில் நசியமிடத் தீரும்.

அரைக்காற்படி மிதிபாகற்சாற்றில் காற்பலமிளகைப்பொடித்துப்போட்டுக் கொடுத்தாலும் ஒரு தேசிக்காய்ப்பிரமாணம் நிலப்பனைக்கிழங்கை அரைத்து வெந்நீரிற்கொடுத்தாலும் தீரும்.

### கூளைப்பாம்புகடி.

கூளைப்பாம்பு கடித்தால் சிலகாலத்துக்குப்பின் குஷ்டம் போற் றேகத்திலுண்டாகி கால்கை விரல்கள்குறையும் இது கருமையும் வெண்மையும் கலந்த புள்ளியுள்ளதாயிருக்கும்.

இதற்கு உசிலம்பட்டையை ஆவின்பால்விட்டிடித்துப் பிழிந்து அரைக்காற்படிவீதம் ஏழுநாள்கொடுத்து உப்பு புளி தள்ளி பத்தியமாயிருக்க மேற்படி விஷம் தீரும்.



### செஞ்சோர்வுகடி.

செஞ்சோர்வு கடித்தால் உடலெங்கும் புள்ளிபோற்றடித்து சிவந்தநிறமாயிருக்கும்.

இதற்கு எருக்கம்பால் ஏழுசொட்டு பனைவெல்லத்தில் கொடுக்கவும் இந்தப்படி மூன்றுதடவை ஒன்றைவிட்டொருநாள் கொடுக்கத் தீரும்.

### கருஞ்சோரா கடி.

கருஞ்சோர்வு கடித்தால் தேகமுழுதும் கறுத்துத் தடித்துத்திமிராயிருக்கும்.

இதற்கு நன்னாரிவேர் சிறியாநங்கைவேர் இவ்விரண்டையும் சமனாய் ஒரு தேசிக்காய்ப்பிரமாணம் அரைத்து ஆவின்பாலில் கொடுக்கத் தீரும்.

### புடையான் விஷம்.

புடையான் பாம்பானது அதின்வாலின் முனையால் மனிதர் முதலிய ஜீவஜந்துக்களைக் குத்தும் அந்த விஷம் தேகத்திற் சிலநாள் தங்கியிருந்து அப்பாற் றேகமெங்கும் படைகளுண்டாய்ப் பொந்துச் சீழ்வடியும்.

அதற்கு ஒருபிடி புத்தான்சோற்றைக் காற்படி நல்லெண்ணெயிற்போட்டுக்காய்ச்சி கொஞ்சம் உள்ளுக்குக்கொடுத்து கடிவாயிலும் பூசத் தீரும்.

பிராயம்பட்டையும் நாட்பட்ட வரகரிசியுமிடித்து மாவுசெய்து களிகிண்டி மூன்றுநாள் சாப்பிட்டு மறுபத்தியம் மூன்றுநாளிருக்கத் தீரும்.

### நெடுங்கழுத்துப்புடையன் விஷம்.

நெடுங்கழுத்துப் புடைன் விஷத்துக்கு கொல்லன்கோவைக்கிழங்கைப் பாலில் அரைத்துக்கொடுக்கத்தீரும்.

புகையூரல் அவுரியிலை இந்துப்பையரைப்பு இவைகளைக்கொடிக்கள்ளிப்பால்விட்டு அரைத்துப் பூச புடையன் குத்தும் வீக்கமும் தீரும்.

### தட்டைப்புடையன் விஷம்.

தட்டைப்புடையன் விஷத்திற்குப் பத்து வெள்ளெருக்கம்பூவை வெற்றிலையில் சுருட்டி தின்னக்கொடுத்து வசம்பை நெருப்பிலிட்டு அந்தப் புகையை நாசியிலேற்றத் தீரும்.

### வரிப்புடையன் விஷம்.

வரிப்புடையன் விஷத்திற்கு புத்தான்சோறும் வசம்பும் எருக்கம்பால்விட்டுத் தட்டி நாசியில் நசியமிடத் தீரும்.

### ஊதுபுடையன் விஷம்.

ஊதுபுடையன் விஷத்தால் கடிவாய் வீங்கி விஷமேறும் கை கால் உளையும் உடல் வீங்கும் கண்ணில் நீர்வடியும் மயக்கமுண்டாகும். வீழிப்பூவை ஒரு தேசிக்காய்ப்பிரமாணம் அரைத்துக்கொடுக்கச் சகல புடையன்விஷங்களுந் தீரும்.

| | |
|---|---|
| காட்டுக்கருணைக்கிழங்கு | புகையூரல் |
| கொட்டாங்கரந்தை | இலுப்பைப்புண்ணாக்கு |

இவைகளைச் சிறுநீர்விட்டரைத்து புடையன் குத்தும் வீக்கத்திற்பூசத் தீரும்.

### இரத்தமண்டலி கடி.

இரத்தமண்டலி கடித்தால் கடிவாயிலும் மயிர்க்காலிலும் இரத்தம் தாரைதாரையாய் வடியும்.

அதற்கு சிறுசெப்படையையாவது கொல்லங்கோவை யிலையையாவது இடித்துச் சாறுவாங்கி அரைக்காற்படி மூன்றுநாள் காலையில்கொடுத்து உடம்பிலும் அந்தச் சாற்றைப்பூசத் தீரும்.

வெள்வேலம்பட்டையைக் காடியாவது ஆவின்மோராவது விட்டு இடித்து அரைக்காற்படி கொடுக்கத் தீரும்.

ஆனைநெருஞ்சில்லையைச் சிறுநீர்விட்டிடித்துப்பிழிந்து அரைக்காற்படிச்சாறு உள்ளுக்குக்கொடுத்து உடலிலும் பூசத்தீரும்.

### சீதமண்டலிகடி.

சீதமண்டலி கடித்தால் உடல் குளிரும் நடுக்கும் வியர்வை மிகவுமுண்டாகும்.

முத்தெருக்கஞ்செவி அல்லது வேப்பம்பட்டையைக் காடிவிட்டுச் சிதைத்து அரைக்காற்படி உள்ளுக்குக்கொடுத்து அதை காடியில் வேகவைத்து ஆவிபிடிக்கத் தீரும்.

### திமிர்மண்டலிகடி.

பொன்முசுட்டைவேர் ஒருகொட்டைப்பாக்குப்பிரமாணம் அரைத்துக்கொடுத்து கடிவாயில் பூசத்தீரும்.

## சகல விஷத்திற்கும் சஞ்சீவியுருண்டை.

பாரடா உயிர்தருஞ் சஞ்சீவியுண்டை
பகருகிறேன் அருசி அத்தம் மிளகுசேர்த்து
நேரடா வாளமிந்த விடைக்குப்போட்டு
நினைவாக வெலுமிச்சம் பழத்தின்சாற்றை



வாரடா மூன்றுநா ளூரவைத்து
வடித்தெடுத்து நாலாநா ளச்சாற்றாலே
நேரடா வரைத்துண்டை செய்துகண்ணில்
தேய்த்துவிட வெவ்விஷமுந் தீர்ந்துபோமே.

### இதற்கு விபரம்.

அருகு அத்தம் மிளகு சமனிடை இந்த மூன்றுக்கும் சரியிடை வாளம்சேர்த்து எலுமிச்சம்பழச்சாற்றைமிதக்கவிட்டு மூன்றுநாளூரவைத்து நாலாநாளெடுத்து அதை சாறுவிட்டரைத்து பயறளவெடுத்து கண்ணிற்றீட்டினால் சகல விஷமுந் தீரும்.

---

### சகலவிஷத்திற்கும் நசியம்.

குப்பைமேனியிலை, வெற்றிலை, நவாச்சாரம் இவைகளைச் சிறுநீர்விட்டுத் தட்டி துணியிற்கட்டி நாசியில் நசியமிட சகல விஷங்களுந் தீரும்.

### சோழிமண்டலி கடி.

தன்றுரிவேரை ஒரு தேசிக்காய்ப்பிரமாண மரைத்து ஆவின்பாலில் கொடுத்தாலும் வெள்வேலம்பட்டையைக் காடிவிட்டிடித்து அரைக்காற்படி சாறுகொடுத்தாலும் நீங்கும்.

| | |
|---|---|
| அழிஞ்சுரா | இண்டு |
| குரை | தக்காளி |
| புங்கு | இலுப்பை |

இவைகளைச் சிறுநீர்விட்டு அரைத்துப்பூச கடிவாய் வீக்கம் தீரும்.

---

### இரத்தவிரியன், இரத்தமண்டலி, இரத்தப்புடையன் முதலிய விஷங்கட்கு.

வெள்வேலம்பட்டையை ஆவின்மோர்விட்டிடித்துப் பிழிந்து அரைக்காற்படிச்சாறு உள்ளுக்குக் கொடுத்தாலும் அல்லது கஞ்சாங்கோரைச்சாற்றை அரைக்காற்படிவீதம் கொடுத்தாலும் கொடிவேலிவேரை யரைத்துக் கொட்டைப்பாக்குப் பிரமாணம் ஆவின்பாலில் கொடுத்தாலும் மேற்படி விஷங்கள் தீரும்.

| | |
|---|---|
| ஆடுதின்னாப்பாளை | வெள்ளெருக்குவேர் |
| கவுதும்பைவேர் | மருக்காரைவேர் |

இவைகளை ஓர்நிறையா யரைத்து உடம்பிற்பூசி முறுக்க மேற்படி விஷங்கள் தீரும்.

சுருட்டைப்பாம்பு கடிவிஷத்திற்கும், குழிப்பாம்பு கடி விஷத்திற்கும்.

| | |
|---|---|
| கொல்லங்கோவை | பேய்க்குமட்டி |
| தலைச்சுருளி | அவுரி |
| அழுக்குரு | ஆடுதீண்டாப்பாளை |
| முப்பரண்டி | வெள்ளெருக்கு |
| கொடிவேலி | |

இவைகளின் மூலம் ஓர் நிறையாய்ச் சூரணஞ்செய்து பேய்ச்சுரைக்குடுக்கையில் வைத்துக்கொண்டு திருகடிப்பிரமாணம் வெந்நீரிற் கொடுக்கத் தீரும். மேற்படி விஷக்கடியால் உண்டாகும் புண்கள் ஆறிப்போகும்.

செவிப்பாம்பு என்ற செய்யான்கடி.

வெண்மை செம்மைநிறமாய் நரம்புப்போல் நீண்டதாயிருக்கும் இது கடித்தால் தேகமெங்கும் சிறுதடிப்பும் நமைச்சலும் உண்டாகும் இதுசெவியில்நுழைந்தால் பிராணபயமுண்டாகும்.

| | |
|---|---|
| கோவையிலை | வேலிப்பருத்தி |
| வெற்றிலை | முடக்கொத்தான் |
| கொழுஞ்சி | |

இவைகளி னிலைகளையிடித்துச் சாறுவாங்கி கொதிக்கவைத்துக் கடிவாயிற் பூசக் கடுப்பு தீரும்.

பேய்ப்பீர்க்கம்வேர் மிளகு இவைகளைச் சமன் பொடித்து ஆவின்வெண்ணெயில் மத்தித்து உள்ளுக்குக்கொடுக்கத் தீரும்.

தாதுளைவேர் நல்வேளைவேர் இவ்விரண்டையு மரைத்து கடிவாயிற் பூசத் தீரும்.

பூரான்கடித்தால்.

அரைக்கால்படி வன்னியிலைச்சாற்றில் கால்பலம் நாகதாளி வேரை அரைத்துக் கலக்கி ஆறுநாள் அந்திசந்தியில் கொடுக்கவும் உப்பு புளி தள்ளி பத்தியமிருக்க பூரான் செய்யான் விஷம் தீரும்.மேலும் அவுரிச்சாற்றில் மிளகுத்தூள்சேர்த்து முன்போற் கொள்ள மேற்படி விஷங்கள் தீரும்.

செவ்வரணை நக்கினால்.

சுக்கு, வசம்புக்கரியும் ஓர் நிறையாய்ப்பொடித்து திரிகடிப் பிரமாணம் உள்ளுக்குக்கொடுத்து வெண்சாரணைவேரையரைத்து



உடம்பிற்பூசி முறுக்கத்தீரும். மேலும் சச்சந்திராய்வேரும் உள்ளிப்பூடும் அரைத்துக்கொடுக்கத் தீரும்.

பெரிய அரணை நக்கினால்.

மூக்கரைச்சாரணைவேரை அரைத்து ஒரு கொட்டைப்பாக்குப்பிரமாணம் ஆவின்பாலிற்கொடுக்கத் தீரும்.

சிலந்திப்பூச்சி கடித்தால்.

| | |
|---|---|
| ஆடுதீண்டாப்பாளை | இலவங்கப்பட்டை |
| மருள்கிழங்கு | ஏலம் |

இவைகளில் ஒன்றை கொட்டைப்பாக்களவு அரைத்து உள்ளுக்குக்கொடுத்து கடிவாயிலும் பூசத் தீரும்.

பதினெட்டுவகை வண்டுகடிவிஷத்திற்கும்.

வண்டு கொல்லிப்பட்டையை அரைத்து கொட்டைப்பாக்களவு எட்டுநாள்கொடுத்து உடம்பிலும் பூசத் தீரும்.

ஆடுதீண்டாப்பாளை வேரையாவது, பிராய்வேரை யாவது சூரணஞ்செய்து சாப்பிட்டுவரத் தீரும்.

வெள்ளறுகு சிறியாநங்கை வெள்ளைக்காக்கட்டான் இவைகள் மூன்றையும் சமூலம் சூரணஞ்செய்து சாப்பிட்டுவர சர்வ வண்டுகடி விஷங்களுந் தீரும்.

செவ்வட்டை கடிவிஷம்.

எட்டிக்கொட்டையை ஆவினெய்யில் வேகவைத்து ஒரு காசிடைவீதம் சாப்பிட்டுவரத் தீரும்.

புனல்முருங்கைவேர் நத்தைச்சூரிவேர் இவ்விரண்டுஞ்சூரணித்து அதில் வேப்பம்பட்டைத்தைலம் காசிடைவைத்து உண்ண மேற்படி அட்டைவிஷமும் காட்டட்டைவிஷமுந் தீரும்.

புழுதிஉண்ணி, காட்டுண்ணி, சரகுண்ணி, இவைகள் கடித்தால்.

குப்பைமேனியிலையும் உப்பும் கசக்கித்தடவத் தீரும்.

காணாக்கடிக்கு கருஞ்சிவதைவேரை ஒரு கொட்டைப்பாக்குப்பிரமாணம் உள்ளுக்குக் கொடுத்து பெருஞ்சின்னியிலையை அரைத்து உடம்பிற்பூசி முழுக்கத் தீரும்.

செஞ்சாரை, கருஞ்சாரை, வெண்சாரை, மஞ்சட்சாரை,
என்ற நான்குவகையி லொன்று கடித்தால்.

அவிரிவேரும் மிளகுமரைத்து உள்ளுக்குக்கொடுத்து அந்த விரைச்சாறு உடம்பிற்பூசி முழுகத் தீரும்.

தேள், நட்டுவாக்காலி கொட்டினால்.

| | |
|---|---|
| காஞ்சிரைவேர் | காய்க்கோட்டான்வேர் |
| அவிரிவேர். | பொன்முசுட்டைவேர் |

இந்நான்கையும் ஒர்நிறையாயிடித்துச் சூரணஞ்செய்து திரிகடிப்பிரமாணம் இளவெந்நீரில் கொடுக்கத் தேள் நட்டுவாக்காலி விஷம் தீரும்.

| | |
|---|---|
| பொன்முசுட்டை | ஆடுதின்னாப்பாளை |
| முப்பரண்டி | வேலிப்பருத்தி |
| நாகதாளி | நிலவேம்பு |

இவைகளின்வேரை ஒர்நிறையாயிடித்துச் சூரணஞ்செய்து திரிகடிப்பிரமாணம் இளவெந்நீரில் கொடுக்கத் தேள் நட்டுவாக்காலி விஷம் தீரும்.

| | |
|---|---|
| பொன்முசுட்டை | ஆடுதின்னாப்பாளை |
| முப்பரண்டி | வேலிப்பருத்தி |
| நாகதாளி | நிலவேம்பு |

இவைகளின்வேரை ஒர்நிறையாயிடித்துச் சூரணஞ்செய்து திரிகடிப்பிரமாணம் வெந்நீரில்கொடுக்க தேள் விஷம் தீரும்.

| | |
|---|---|
| கொல்லங்கோவைக்கிழங்கு | மாவிலிங்கைவடவேர் |
| ஆடுதின்னாப்பாளைவேர் | |

இந்த மூன்றில் எதையாவது ஒன்றை ஆதித்தவாரத்தில் வெட்டிவந்து கொஞ்சம் வெந்நீரிலரைத்து தின்னக்கொடுத்து கடிவாயிலும் பூசத் தீரும்.

எட்டிவிரையை முலைப்பாலிலரைத்துக் கொஞ்சம் உள்ளுக்குக்கொடுத்து கடிவாயிலும்பூசத் தீரும்.

முற்றின செவ்வலரிவேர் பட்டையை வெள்ளெருக்கம்பாலில் மூன்றுநாள் ஊறப்போட்டு நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு கொஞ்சம்வெற்றிலையில்வைத்து தின்னக்கொடுத்து அதை எருக்கம்பாலிலரைத்துக் கடிவாயிற்பூசத் தீரும்.

மனிதனுடைய நகத்தைச்சீவி ஆணியிற்சுருட்டி தீயிற்கொளுத்தி ஆற்றி அந்தப் புகையை நாசியிற்பிடிக்க மேற்படி விஷம் வடிந்திறங்கும்.

---



உ

சிவராமஜயம்.

சகலமான சர்ப்பவிஷத்திற்கும்

# பரணி மருந்து.

இந்த பரணிமருந்தானது எம் முன்னோர்கள் முதல் சுமார் மூன்றுதலைமுறைகளாகக் கையாடிவரப்பட்டது. மிகவும் அநுபோகமானது இந்த ஔஷதத்தை யாவரும் செய்துவைத்துக்கொண்டிருந்தால் விஷமென்பதற்கு எள்ளளவும் பயப்படவேண்டியதில்லை இம்மட்டில்சொல்லிய முறைகளெல்லாம் பலசாஸ்திரத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவை. இந்த பரணிமருந்து ஒன்றுமாத்திரம் மிகவும் அநுபோகமானது.

| | | |
|---|---|---|
| வெள்ளைப்பாஷாணம் | விராகனிடை | 1 |
| மனோசிலை | ,, | 1 |
| இரசம் | ,, | 1 |
| அரிதி | ,, | 1 |
| நெல்லிக்காய்கெந்தகம் | ,, | 1 |
| பெருங்காயம் | ,, | 1 |
| வேப்பம்பருப்பு | ,, | 1 |

ஆக திரவியங்கள் 7-க்கும் மொத்தம் விராகனிடை 7-ம் சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு விராகனிடை 14 ஆக மொத்தம் 21-விராகனிடையும் கல்வத்திலேபோட்டு வெள்ளெருக்கம்பால் ஆழாக்கு பிடித்துவைத்து கொஞ்சங்கொஞ்சமாய்விட்டு அரைக்கவும் டை ஆழாக்குப்பாலும்விட்டு இரண்டுஜாமம் அரைத்தபிறகு வேப்பெண்ணெய் அரையாழாக்கு விட்டு ஒருஜாமமரைக்கவும் மெழுகுபதமாயரைத்து வழித்து எருமைக்கொம்பு டப்பியில் வைத்துக்கொள்ளவும் விஷந்தீண்டி வந்தவர்களுக்கு உளுந்துப்பிரமாணம் எடுத்து வெற்றிலையில்வைத்து உள்ளுக்குக் கொடுக்கவும் இதற்குப் பத்தியம் மோர்சாதம் கொடுக்கவும் அல்லது சுட்டபுளி வறுத்த உப்புகூட்டிய மிளகுநீர்சாதம் கொடுக்கவும் அன்றிரவு நித்திரை செய்யக்கூடாது.

விஷம் தலைக்கேறி பற்கிட்டியிருந்தால் உச்சியில்கீறி அந்த கீறலுக்குள் இந்த மருந்தில் உளுந்தளவுவைத்து அழுத்தி திரும்பவும் கொஞ்சம் மருந்துவைத்து அழுத்தித்தேய்த்து வட்டமாக

ஒட்டியில்லை நறுக்கி உச்சியில் அழுத்தமாகவைத்துக் கட்டவேண்டியது. வெந்நீரில் உளுந்தளவுமருந்திழைத்து பல்லைநீக்கி உள்ளுக்குச் செலுத்தவேண்டியது மூன்றேமுக்கால் நாழிகையில் மூர்ச்சையானவன்பேசலெழுந்திருப்பான் பத்தியம் முன்போலவே செய்யவேண்டும்.

ஆடு மாடு முதலிய மிருகங்களுக்கு குன்றுமணியளவு வெற்றிலைச்சாற்றிலாவது வெந்நீரிலாவது இழைத்து மூங்கிற்குழையினால் உள்ளுக்குச் செலுத்தவேண்டியது. குருவையரிசிகஞ்சிகாய்ச்சிக்கொடுக்கவும்.

### பத்திய விபரம்.

முன்கூறியபடி மனிதருக்கு மருந்துகொடுத்தபிறகு 24-மணிநேரம்வரையில் ஆகாரம் தாகம் நித்திரை இவைகள் கூடாது அதன்பிறகு குருவையரிசிச்சாதம் மிளகுநீர் இவைகொடுக்கலாம் ஆடுமாடு முதலிய மிருகத்திற்குக்கூட 34-மணிநேரம் வரையில் ஆகாரம் வைக்கல் தண்ணீர் இவைகள் காட்டக்கூடாது. அதன்பிறகு கறுப்புநெல் அல்லது மணக்கத்தை அல்லது குருவையரிசியெடுத்து கஞ்சிகாய்ச்சி மாடுகளுக்கு 2-படி கஞ்சிக்கு அதிகப்படாமல் கொடுக்கவும் அதற்குப்பிறகு தாங்கள் வழக்கம்போல் கொடுக்கிற தீனி கொடுக்கலாம்.

### மருந்துசெய்யும் காலம்.

இம்மருந்து செய்யவேண்டியவர்கள் ஆதிவாரத்தில் சகல மருந்தும் தயார்செய்துகொண்டு நடுவாசலில் சுத்திசெய்து கல்வமும் மருந்துகளும்வைத்து சூரியபகவானுக்குத் தேங்காயுடைத்து தூபதீபங்கொடுத்து நமஸ்கரித்து ஆகாயத்தைப் பார்த்து கருடபகவானை நினைத்து நமஸ்காரஞ்செய்து அரைக்கவேண்டியது அரைக்கும்போது புளிப்புமோரும் கூழும் கரைத்து திருப்தியாகச் சாப்பிட்டுவிட்டு அரைக்கவேண்டியது மேற்கூறிய கணக்குப்படி மூன்றுசாமம் அரைத்தபிறகு விளக்கெண்ணெய்தேய்த்து தலைமுழுகவேண்டியது.

### நல்லபாம்பு விஷத்திற்கு.

நேரும்வாளப் பருப்பெடுத்து சேர்ந்தசுண்ணம் வைத்தரைத்து
கூரும்வெற்றிலை பாக்கிலிட்டு கரையமென்று முழுங்கிவர
மாரும்வாந்தி பேதியுமாய் மண்டையிலேறும் விஷந்தீரும்
பாரும்பத்தியம் பாசிபயிறு பச்சரிசியும் பால்கூட்டே.



### தேள் கடி விஷத்திற்கு.

விருச்சிகமாத்திரை 50, எட்டிப்பழச்சுளையுடன் வெள்ளைப்பாஷாணம் பலம் 1, சிறுதுண்டுகளாகவிட்டு ஆட்டுக்கோமயம் வெள்ளெருக்கன்பால் இரண்டுபலம்விட்டு மூடி 40-நாள் புதைத்தெடுத்து பாஷாணமாத்திரம் எடுத்து எருக்கம்பாலாலரைத்து மாத்திரைசெய்து ஜலத்திலிழைத்து கடிவாயில் தடவி அனல்காட்ட விஷம் நீங்கும்.

### சகல எலிகடிக்கும் வேறுமுறை.

ஆடுதின்னாப்பாளைவேர் விளாம்பட்டை மஞ்சள் வகைக்குப் பலம் கால், எள்ளெண்ணெயில் சித்திரமூலவேர் உத்தாமணிவேர் மிளகரணைவேர் வகைக்கு பலம் 1, பசும்பாலிலரைத்துக் கலக்கி காய்ச்சி வடித்து மூன்று காசிடையாக ஐந்துநாள் கொடுக்க பத்தியம் உப்பு புளி நீக்கவும்.

### நல்லபாம்பு விஷத்திற்கு வேறு.

வெள்ளறுகு இலையை உள்ளுக்குக்கொடுத்தாலும் எருக்கிலை. புகையிலையும் கசக்கி கண் காது நாசியில் நசியம் விடுவதாலும் தும்பை துளசி மிளகு உப்பு வெற்றிலைகசக்கி விடுவதாலும் விஷம் நீங்கும். தும்பைரசத்தில் மிளகு தூளிட்டுக் கொடுக்கவும்

விஷநூல் முற்றுப்பெற்றது.

ஸ்ரீ

சிவராமஜயம்.

### மூலிகைமர்மமென்னும்

# சாஸ்திரத்திற்கு அநுபந்தம்.

மூலிகைமர்மமென்னும் நூலில் முழுமையும் பச்சிலைப்பிரயோகமேயானபடியால் இதில் சேரவேண்டிய சில கடைச்சரக்கு ரசகெந்த பாஷாணாதிமுறைகளை பார்வதிபரிணயத்தில் பார்த்துக் கொள்ளலாமென்று மேற்படி நூலில் ஆங்காங்கு கண்டிருக்கிறது ஆகையால் மூலிகைமர்மத்தில் இன்னபக்கத்திற்சொல்லிய முறைக்கு இன்னபாகம் சேர்த்துக்கொள்ளவேணுமென்று இங்கிருந்து சொல்லப்பட்டுவருகிறது.

### மூலிகைமர்மம் 4-வதுபக்கத்திற் கூறிய
### பிராணசஞ்சீவி மாத்திரை.

| | |
|---|---|
| சுக்கு | காயம் |
| திப்பிலி | பூண்டு |
| மிளகு | நெல்லிக்காய்கெந்தகம் |

இவைகளைச் சமனிடையெடுத்து ஒன்றிரண்டாயிடித்து கல்வத்திற்போட்டு எலுமிச்சம்பழச்சாறுவிட்டு இரண்டு நாளூறிய பிறகு திரும்பவும் பழச்சாறுவிட்டரைத்து உளுந்துபோலவும் கடலைபோலவும் உருட்டி நிழலிலுலர்த்திவைத்துக்கொண்டு மூலிகைமர்மம் 4-வது பக்கத்திற்சொல்லியிருக்கும் வயிற்றுக்கடுப்புக்கு மேற்படி மர்மத்தில் சொல்லிய அநுபானத்துடன் கொடுத்தாலும் அல்லது இந்த பிராணசஞ்சீவிமாத்திரையைத் தனியாக வெந்நீரிலாவது கொதித்தண்ணீரிலாவது சர்க்கரையிலாவது கொடுத்தால் வயிற்றுக்கடுப்பு நிவர்த்தியாகும் பத்தியமில்லை.

### மூலிகைமர்மம் 5-வது பக்கத்திற்கூறிய
### முறைக்கு அநுபந்தம்.
### கர்ப்பமுண்டாக எண்ணெய்.

| | |
|---|---|
| மிளகு | கஸ்தூரிமஞ்சள் |
| ஓமம் | ஜாதிக்காய் |
| திப்பிலி | வெள்ளைவெங்காயம் |
| இந்துப்பு | கருவண்டு |
| வசம்பு | கருங்கம்பளி |

இவைகள் வகைக்கு 3-விராகனிடையாகவெடுத்து இடித்து கல்வத்திலிட்டு கொஞ்சம் விளக்கெண்ணெய்விட்டு மைபோல் ஆகுமளவும் அரைத்து 25-பலம் விளக்கெண்ணெயில் கரைத்து



அடுப்பேற்றிமெழுகுபதமாய்க்காய்ச்சிவடித்துவைத்துக்கொண்டு கெர்ப்பமில்லாத பெண்களுக்கு ருதுஸ்நானம் வந்தபிறகு தலைமுழுகின மறுதினமுதல் பிரதிதினமும் காலையில் ஒரு உச்சிக்கரண்டிவீதம் 15-நாள் கொடுக்கவும் இரண்டாவது தலைமுழுக்கு வந்தபிறகு முன்போலவே 14-நாள் கொடுக்கவும் எண்ணெய் சாப்பிடும்போது பத்தியம் சுட்டபுளி வறுத்தஉப்பு சேர்க்கவேண்டியது கைப்பு புளிப்பு இல்லாதிருந்தால் மிகவும் உத்தமம் மறுமாதம் கர்ப்பந்தரிக்கும்.

### தாதுபுஷ்டிக்கு மதனசிந்தாமணி லேகியம்.

| | |
|---|---|
| சுக்கு | வெந்தயம் |
| திப்பிலி | இலவம்பிசினி |
| மிளகு | இலவம்விரை |
| ஏலம் | ஆலம்விரை |
| கிராம்பு | அரசம்விரை |
| உளுந்து | அத்திவிரை |
| எள்ளு | ஆவாரம்விரை |
| கோஷ்டம் | ஆளிவிரை |
| நெருஞ்சில்விரை | செங்கழுநீர்ப்பூ |
| நீர்முள்ளிவிரை | இலவங்கப்பட்டை |
| பழுபாகல்விரை | ஜாதிக்காய் |
| கொத்தமல்லிவிரை | ஜாபத்திரி |
| இந்துப்பு | சீரகம் |
| வசம்பு | கருஞ்சீரகம் |
| கடுக்காய்ப்பூ | கண்ணீர்விட்டான்கிழங்கு |
| மதனகாமப்பூ | நிலப்பனைக்கிழங்கு |
| கிராம்பு | அமுக்குறாங்கிழங்கு |
| சோம்பு | வாலுழுக்கிழங்கு |
| இலுப்பைப்பூ | சத்திசாரணை |
| தென்னம்பூ | சிறுகாஞ்சொரி |
| பனம்பூ | கொடிமுந்திரி |
| நெல்லிக்காய்வற்றல் | சீந்தில் |
| தாணிக்காய்த்தோல் | சிறுதேக்கு |
| கடுக்காய்த்தோல் | குரோசாணிஓமம் |

இவைகளை வகைக்கு ஒருபலமெடுத்து உலர்த்தி யிடித்து வஸ்திரகாயஞ்செய்து வாயகன்ற பெருஞ்சட்டியில் 2-படிபால், 2-படி ஜலம்விட்டு அடுப்பிலேற்றி வாய்ப்புறத்திற்கு மெல்லிய துணியினால் வேடுகட்டி மேற்படி சூரணங்களைக் கொட்டி பரவவைத்து மேல்சட்டி கவிழ்த்துமூடி புட்டவியல் செய்யவும் இர

ண்டுபடி ஜலமும் வற்றுமளவும் தீயெரித்து சட்டியையிறக்கி சூரணத்தையெடுத்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு முக்காற்படி பசும்பாலை அடுப்பிலிட்டு 15-பலம் சீனிசர்க்கரையிட்டுக் கலந்து பாகுபதமாய்ச்செய்து இறக்கிக்கொண்டு மேற்படி சூரணங்களியாவும் ஆனபிறகு கார்படி தேனில் காற்பலம் அபினியையிழைத்து அந்தத்தேனைவிட்டுக் கிளறவும் அல்லது கையினல் நன்றாய்ப்பிசைந்து பீங்கானில்வைத்துக்கொண்டு ஒருவேளைக்கு கொட்டைப்பாக்குப்பிரமாணம் சாப்பிடவும் இப்படி காலைமாலையிருவேளையும் 40-நாள் தின்னவேண்டியது.

### இதற்குப் பத்தியம்.

பகற்காலத்தில் புளிப்புசேர்த்த குழம்புரசம் பதார்த்தமுதலியனவும் ஆகும் இரவில்மட்டும் பஞ்சாதம் சாப்பிடவேண்டியது லாகிரிவஸ்துக்கள் கூடாது ஸ்திரீசஞ்சாரமில்லாதிருந்தால் உத்தமம், தேகம் பலக்கும், தாதுபுஷ்டியுண்டாகும்.

### மதனகாமேசுவர லேகியம்.

சுக்கு
திப்பிலி
மிளகு
அதிமதுரம்
நீர்முள்ளிவித்து
நெருஞ்சிவித்து
மல்லி
கோஷ்டம்
ஜாதிக்காய்
உளுந்து
எள்ளு
கொடிமுந்திரிப்பழம்
பேரீச்சங்காய்
அதிவிடையம்
கஸ்தூரிமஞ்சள்
கதலிக்கிழங்கு
ஏலம்
முள்ளிலவம்பிசினி
சுத்திசெய்த கெஞ்சா
அமுக்குறாங்கிழங்கு
தண்ணீர்விட்டான்கிழங்கு
மருட்கிழங்கு
ஆனைத்திப்பிலி
சிறுநாகப்பூ
வெந்தயம்
கொடிவேலிவேர்
நெல்லிக்காய்
மாசிக்காய்
தான்றிக்காய்
அபினி
சண்பகப்பூ
பெருஞ்சீரகம்

இவைகளை வகைக்கு பலம் கால், எடுத்து உலர்த்தி யிடித்து வஸ்திரகாயஞ்செய்து இதற்குசரியிடை பூனைக்காலி வித்தின் பருப்புச் சூரணம்சேர்த்து வைத்துக்கொண்டு இரண்டுபடி பசும்பாலை அடுப்பிலேற்றி 20-பலம் சீனிபோட்டுக் கலந்து பாகுபதத்திலிறக்கி மேற்படி சூரணத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகத் தூவிகிளறிக்கொண்டிருக்கவும். யாவும்ஆனபிறகு ஆறவைத்துவே



ண்டியமட்டும் தேன்விட்டுப் பிசைந்து வைத்துக்கொள்ள வேண்டியது, மேற்படி சூரணம் தூவிக் கிளறும்போது அபிரேக்குச்செந்தூரம் காற்பலம் கூடக்கலந்து தூவவேண்டியது. இந்த லேகியத்தை ஒருவேளைக்கு தேற்றான்கொட்டைப் பிரமாணம் இருவேளையும் சாப்பிடவும் வீரியவிர்த்தியுண்டாகும். இந்திரியங்கட்டும், அதிசாரம், கிராணி, பித்தசிலேத்துமம், வாயு இவையாவுந் தீரும்.

### பத்தியம்.

புளி நல்லெண்ணெய் கடுகு இவை நீக்கி நெய், பால், முருங்கைப் பிஞ்சு இவைகூட்டவும். அபிரேக்குச்செந்தூரத்தைப் பின்வரும் செந்தூரபற்பத்துடன் சொல்லியிருக்கிறது.

### மதனகாமரசக் குளிகை.

பூமிசர்க்கரைக்கிழங்கு
நிலப்பனைக்கிழங்கு
சமுத்திராசோகிவிரை
சாரப்பருப்பு
ஜாதிக்காய்
ஜாபத்திரி
அபினி
கெஞ்சா
பூனைக்காலிவித்து
முருங்கைவித்து
முத்தக்காசு
கிராம்பு
வெண்காரம்
லிங்கம்
வாலரசம்

இவைகள் வகைக்குப் பலம் அரை, இவைகளியாவும் பொடித்துக்கொண்டு ஒரு முற்றின தேங்காய் கொண்டுவந்து குடுமியைப்போக்கி தேங்காயின் கண்களில் ஒன்றை துவாரம் செய்து ஜலத்தைக் கொட்டிவிட்டு முன் பொடித்திருக்கும் மருந்துகளை உள்ளேசெலுத்தி அந்த துவாரத்திற்குத் தகுந்த கார்க்கு அடைத்து மேலே ஒரு அங்குல கனம் சாணிதடவி யுலர்ந்தபிறகு முழப்புடமிடவும், சிரட்டை கருகினவுடனெடுத்து மேல்சிரட்டையை நீக்கிவிட்டு மற்றதைக் கல்வத்திலிட்டு மெழுகுபோல் அரைத்துக்கொண்டு தேற்றான் விரைப்பிரமாணம் உருட்டி சர்க்கரையில் பொதிந்து சாப்பிடவும். இப்படி காலைமாலை யிருவேளையுந் தின்னவும் இராக்காலத்தில் புளிசேர்ந்த பதார்த்தங்கள். புளிப்பு, பழவர்க்கங்கள், புளிப்புமோர் முதலியவை ஆகாது. பாலன்னம் புசிக்கவேண்டியது பகலில் சுட்டபுளி, வறுத்தஉப்பு, கூட்டிக்கொள்ளவும் தாதுபுஷ்டி யுண்டாகும் புணர்ந்தால் கட்டு கலையாது. இதற்கு மாற்று எலுமிச்சம்பழம்.

### ஜெகபலக் குளிகை.

சிறுபூனைக்காலி
நத்தைச்சூரி
முசுமுசுக்கை
அகத்தி

| | |
|---|---|
| நீர்முள்ளி | தேற்றான் |
| முருங்கை | அழிஞ்சில் |
| அமுக்குரா | வில்வம் |
| செம்முள்ளி | நெல்லி |
| நெருஞ்சி | அத்தி |
| ஊமத்தை | ஆத்தி |
| ஓரிலைத்தாமரை | அரசு |
| கெஞ்சா | ஆல் |
| ஆவாரை | அவுரி |
| முள்ளி | பரசு |
| சங்கு | முசுட்டை |
| சுண்டை | சிவன்வேம்பு |
| திரிபலை | செந்நாயுருவி |
| கருவேல் | பாற்சுரண்டி |
| வன்னி | கொன்றை |
| மருது | எள்ளு |
| மாங்கொட்டை | கொத்துமல்லி |
| நிலப்பனைக்கிழங்கு | முருங்கை |
| அமுக்குராங்கிழங்கு | விளா |
| நன்னாரிவேர் | வேல் |
| சமுத்திராப்பழம் | வேம்பு |
| வாகை | இலவு |
| ஜாதிக்காய் | சீனிகற்கண்டு |
| ஜாபத்திரி | வெள்ளைகுங்கிலியம் |
| குரோசாணிஓமம் | மதனப்பூ |
| சர்க்கரை | அபிரேக்செந்தூரம் |

இவைகள் யாவும் வகையொன்றுக்குப் பலம் அரைக் கால் உலர்த்திப்பிடித்து வஸ்திரகாயஞ்செய்து இந்தச் சூரணத்துடன் அப்பிரேக்செந்தூரம் சேர்த்துக்கொண்டு கொடி முந்திரிப் பழச்சாற்றில் மூன்றுநாளரைத்து கடலைப்பிரமாணம் உருட்டி வேளையொன்றுக்கு ஒருகுளிகை வீதம் ஆவின்பாலில் ஒரு மண்டலம் கைப்புபுளிப்புநீக்கி உட்கொள்ள யானைபலமுண்டாகும். தாதுவிருத்தி விசேஷமுண்டாகும். சுக்கிலங் கட்டும்.

## மதனசஞ்சீவி.

ஒருபடி ஆவின்பாலில் நாலுபங்கு கோதுமை மாவும் இருபதுபலம் சீனியையும் போட்டுக்கிண்டி காய்ச்சிப் பாகுபதத்தில் நீர்முள்ளிவிரை, நிலப்பனைக்கிழங்கு, லவங்கப்பட்டை, பனைவேர் வகைக்கு பலம் 4, கருவேலன்பிசின் கெஞ்சா வகைக்குபலம் 2,



சந்தனம், ஜாதிக்காய், கிராம்பு, பெருஞ்சீரகம் வகைக்கு விராகனிடை 2, திப்பிலி பலம் அரை, இவைகளை யிடித்துச் சூரணித்துத்தூவி நெய்படி அரை, விட்டுக் கிண்டி மெழுகுபதத்தி லிறக்கி ஆறிப் பேரீச்சம்பழம் பலம் 4, தேன் பலம் 10, சேர்த்துப் பிசைந்து வேளையொன்றுக்கு கொட்டைப்பாக்குப் பிரமாணம் சாப்பிட்டுவர விந்து சுரக்கும் போகம் மிகும்.

## சொர்ணபற்பக் குளிகை.

| | |
|---|---|
| அபினி | சாம்பிராணிப்பூ |
| மதனகாமப்பூ | முருங்கைவித்து |
| கிராம்பு | ஆலம்வித்து |
| ஜாதிக்காய் | அரசம்வித்து |
| மராட்டிமொக்கு | அத்திவித்து |
| அதிமதுரம் | தங்கபற்பம் |

இவைகளை ஓர்நிறையாயெடுத்து முருங்கைப்பூவின்சாற்றால் அரைக்கவும் மிகவும் நன்னிய மைபோலாட்டி சிறுசுண்டையளவு மாத்திரைசெய்து வைத்துக்கொண்டு பசும்பாலில் முருங்கைப்பூபோட்டுக்காய்ச்சிய காற்படிபாலில் ஒருஉருண்டை யிழைத்துச் சாப்பிடவும். இப்படி யிரவில் ஒரேவேளையாக ஒருமண்டலம் சாப்பிடவேண்டியது. உப்பு, புளிநீக்கி பத்தியம் பாலன்னம் தின்னவேண்டியது. பெண்மயக்கம், லாகிரி, புகையிலை இவைநீக்கியிருந்தால் தேகம் தங்கமயமாயிருக்கும். பலக்கும். தாதுகட்டும் மேற்படி ஒரு மண்டலமானபிறகு மனம்போல் நடக்கலாம்.

மேற்கூறிய தங்கபற்பம் பின்வரும் சிந்தூர பற்பம்முதலிய வகுப்புகளுடன் சொல்லப்படும்.

## பூரண மதனவல்லாதி.

| | |
|---|---|
| நாயுருவிவித்து | அரசம்வித்து |
| நத்தைச்சூரிவித்து | ஆலம்வித்து |
| பாற்சுண்டிவித்து | அத்திவித்து |
| கெஞ்சாவித்து | முருங்கைவித்து |
| துளசிவித்து | நீர்முள்ளிவித்து |
| திருநீற்றுப்பச்சைவித்து | பூனைக்காலிவித்து |
| கருவேலன்வித்து | ஆவாரைவித்து |
| சிறுகீரைவித்து | பொன்னாவாரைவித்து |
| பரசவித்து | தேற்றான்வித்து |

இவைகள் வகைக்கு களஞ்சு-2.

| | |
|---|---|
| சுக்கு | ஓமம் |
| திப்பிலி | வாலுளுவையரிசி |

| | |
|---|---|
| மிளகு | கோஷ்டம் |
| ஜாதிக்காய் | சாரப்பருப்பு |
| ஜாபத்திரி | வால்மிளகு |
| கிராம்பு | மதனகாமப்பூ |
| சோம்பு | சிறுநாகப்பூ |
| கருவாப்பட்டை | சர்க்கரை |
| ஏலம் | அமினி |

இவை 18-தினுசுகளும் வகைக்கு களஞ்சி-3.

| | | |
|---|---|---|
| எள்ளு | பலம் | 2 |
| பூமிசர்க்கரைக்கிழங்கு | ,, | 2 |
| சுத்திசெய்த சேங்கொட்டை | ,, | 2 |
| அமுக்கனுக்கிழங்கு | ,, | 1 |
| கொடிமுந்திரிப்பழம் | ,, | 1 |
| பேரீச்சம்பழம் | ,, | 1 |
| சுத்திசெய்து வறுத்தகெஞ்சா | ,, | 4 |

இவைகள் யாவும் கல்லுரலிற்போட்டு நாலுஜாம மிடித்து மெல்லிய தூளாக யாவும் கலந்தபிறகு சீனி 5-பலம், கற்கண்டு 25-பலம்சேர்த்து மெழுகுபோலிடித்து வைத்துக்கொண்டு வேளை யொன்றுக்கு அரை விராகனிடை வீதம் பசும்பாலில் சாப்பிட விந்து கட்டும் சற்றுமயங்கினல் எலுமிச்சம்பழச்சாறும் ஈருள்ளிச்சாறும் கொஞ்சமருந்தினல் மாறும்.

மதனப்பால்.

சந்தனம் தேற்றான்விரை முருங்கைவேர்ப் பட்டை இவைகள் சமனிடையெடுத்து தேங்காய்ப்பாலி லரைத்து வேளைக்கு புன்னைக்காயளவு உட்கொண்டுவர விந்து கட்டும் வலிவுண்டாகும் புளிநீக்கி பாலன்னமுண்ணவும்.

இதுவுமது.

முருங்கைப்பூ நெருஞ்சிப்பூ இளந் தென்னம்பாளை யுள்ளிருக்கும் அரிசி இவை சமன்கொண்டு பால்விட்டரைத்து பாலிற்காய்ச்சி யுண்டுவர தாது விருத்தியுண்டாம்.

மூலிகைமர்மம் 9-வது பக்கத்தில் சொல்லியிருக்கும்
சஞ்சீவிமூலிகையென்னும்
அழுகண்ணிச்செடியின் விபரம்.

இந்துஸ்தானிபாஷையில் (ஸாதந்தியிலே) என்னும் அழுகண்ணியிலையானது கடலையிலைபோல் சிறிதாயும் வழுவழுப் புள்ளதாயும் நற்புறம் பூமியைநோக்கியும் பிற்புறம் ஆகாயத்தைநோக்கியு



மிருக்கும் அதில்நின்று ஜலமொழுகுவதைப்போல் தோற்றும். இது நல்ல ருசியையுடையதாகவும் கொஞ்சம் உப்புகரித்துமிருக்கும் இந்தச் செடியிருக்கும்பூமி கசிவாய்க் கறுத்திருக்கும் எறும்புகளெப்போதும் மொய்த்துக்கொண்டிருக்கும் உவர்நிலத்தில் முளைக்கும். இதில் இரண்டுஜாதியுண்டு அதிலொன்று ஒருமுழ உயரமும் மற்றொன்று ஒருசாணுயரமுமிருக்கும்.

மூலிகைமர்மம் 14-வது பக்கத்தில் சொல்லிய
சர்வசுரக் கியாஷத்திற்கு அநுபந்தம்.
சர்வசுரக் குளிகை.

| | | | | |
|---|---|---|---|---|
| கெந்தகம்விராகனிடை | 1 | சுக்கு | விராகனிடை | 4 |
| இரசம் ,, | 1 | திப்பிலி | ,, | 4 |
| நாபி ,, | 1 | மிளகு | ,, | 4 |
| ஊமத்தன்விரை | 3 | (பழச்சாறு) | | |

இவைகள் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு 3-ஜாமமட்டு மரைத்து மிளகளவு மாத்திரை செய்துவைத்துக்கொண்டு பித்தசுரத்திற்கு இஞ்சிச்சாற்றிலும் வாதசுரத்திற்கு முருங்கைப்பட்டை சாற்றிலும் கொடுக்கவும். குளிர்சுரத்திற்கு இஞ்சி,பூண்டு,முருங்கைப்பட்டை யிம்மூன்றுமிடித்துசாறுவாங்கி சூரசம்செய்து முறித்த தேன் முலைப்பாலில் கொஞ்சம்விட்டு இரண்டுமாத்திரை யிழைத்துக் கொடுக்கவும்.

இதற்குக் கியாஷம்.

பேய்ப்புடல், கோரைக்கிழங்கு, பர்ப்பாடகம், சீந்தில், சுக்கு இவை சமனுக்கிகொண்டு இடித்து எட்டொன்றாக கியாழம் வைத்துகொடுக்கவும் அல்லது மூலிகைமர்மம் 14-வது பக்கத்தில் சொல்லியிருக்கும் கியாழம் கொடுக்கவும். காலைமாலை மாத்திரை கொடுத்தபிறகு இந்த கியாழம் கொடுக்கவேண்டியது.

பத்தியம்.

அசாத்திய சுரமானல் கோதுமை நொய்யை வறுத்து ஜலம் விட்டு கஞ்சிகாய்ச்சி வறுத்த உப்புபோட்டுக் கொடுக்கவும் புளிப்பு கூடாது. சற்று லகுவான சுரமானல் சுட்டபுளி வறுத்த உப்பு கத்திரி முருங்கை அவரை இவைகளின் பிஞ்சுகூட்டவும் சுரம்விட்டபிறகு மூன்றுநாள் பார்த்து காய்ச்சியஎண்ணெயினல் தலைக்கு வார்க்கவும்.

இந்த மாத்திரையை தலைவலி உடம்பு அனல் கைகால் அசதி இப்படியுள்ளவர்கள் இரண்டு மாத்திரையெடுத்து ஒரு வெற்றிலையில்வைத்து மடித்துத்தின்னவும் இப்படி யிருவேளையும் தின்னவும் பத்தியமில்லை. மிளகுநீர்சாதம், கச்சைக்கருவாடு, காரைப்பொடி, சுறு இவைகள் குழம்புசெய்து சாப்பிடலாம்.

## ஜன்னி சீதளம் முதலானவைகளுக்கு
## ஆனந்தவைரவமாத்திரை.

| | |
|---|---|
| நாவிக்கிழங்கு | மனோசிலை |
| இரசம் | லிங்கம் |
| கெந்தகம் | வெண்காரம் |

### இதற்கநுபானம்.

இந்த ஆறுதினுசுகளும் சமனிடையெடுத்து கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றால் 4 - ஜாமமரைத்து சிறுபயிறளவு மாத்திரைகள் செய்து நிழலி லுலர்த்தி சீசாவில் போட்டு வைத்துக் கொள்ளவும்.

### மூலிகைமர்மம் 17-வது பக்கத்தில் சொல்லிய கண்ணோவிசிகிச்சைக்கு அநுபந்தம்.

## நேத்திரரோகம் சுகு-க்கும் தைலம்.

ஜன்னிக்கு முலைப்பாலில் முருக்கைப்பட்டை சுரசம் இவைகளில் இரண்டு மூன்றுவேளை கொடுக்கவும் குளிர் சுரத்திற்கு இஞ்சி,பூண்டு இவைகளில் இரண்டுமூன்றுவேளை கொடுக்கவும். குளிர் சுரத்திற்கு இஞ்சி,பூண்டு இவைகள் நசுக்கி சாறுவாங்கி சுரசம்செய்து அதில் இரண்டுமாத்திரை யிழைத்து முறித்த தேன், முலைப்பால் இவைகள்கொஞ்சம்விட்டுக்கொடுக்கவும். இப்படி 2-3-வேளைகொடுக்க நிவர்த்தியாகும். இச்சாபத்தியம். கோதுமைக் கஞ்சிகாப்பி பிஸ்கோத்து இவைகளும் கொடுக்கலாம்.

| | | |
|---|---|---|
| தாழம்விழுதுச்சாறு | படி | வ |
| நெல்லிக்காய்ச்சாறு | ,, | வ |
| சுரிசலாங்கண்ணிச்சாறு | ,, | வ |
| பொன்னாங்காணிச்சாறு | ,, | வ |
| பசும்பால் | ,, | வ |
| இளநீர் | ,, | வ |
| சீந்தில்சாறு | ,, | வ |
| நல்லெண்ணெய் | ,, | உ |

இவைகள் யாவும் ஒன்றாய்க்கலந்து அடுப்பிலேற்றி

| | |
|---|---|
| இலுப்பைப்பூ | நாகேசுவரம் |
| சந்தனம் | வெட்டிவேர் |
| அதிமதுரம் | கோரைக்கிழங்கு |
| ஏலம் | ஜாதிக்காய் |
| லவங்கப்பத்திரி | விலாமிச்சம்வேர் |
| தாமரைக்கிழங்கு | ஆலம்விழுது |



| | |
|---|---|
| வெட்டிவேர் | செங்கழுநீர்க்கிழங்கு |
| வில்வப்பழச்சதை | சிறுசெல்லிவேர் |

இவைகள் வகைக்குப் பலம் கால், எடுத்து பசும்பால்விட்டு அரைத்துப்போட்டு கலக்கி காய்ச்சவேண்டியது மெழுகுபதமாய்க்காய்ச்சி வடித்து வாரத்திற்கிருவிசை தலைமுழுகிக்கொண்டு வந்தால் நேத்திரரோகமியாவுந்தீரும். அன்றுபகல் நித்திரையும் வெயிலில் திரிச்சலுங்கூடாது. வேறேபத்தியங் கிடையாது.

### குளிர்ச்சிக்கு வேறுவிதத்தைலம்.

| | | |
|---|---|---|
| வில்வப்பழச்சதை | பலம் | 2 |
| வெந்தயம் | ,, | 2 |
| கார்போகரிசி | ,, | 2 |

இவைகளை பசும்பால்விட்டு மைபோலரைத்து 40 - பலம் நல்லெண்ணெயிற்போட்டுக் கரைத்து பதமாய்க்காய்ச்சி முழுகி வந்தால் உடம்பும் கண்களும் குளிர்ச்சியுண்டாகும், சகலமான சூடும் தணியும்.

மேற்படி நேத்திரரோகத்தைப் பற்றிய தைலமுறையானது இவ்விடத்தில்இரண்டுபாகஞ்சொல்லப்பட்டிருக்கிறது ஆகையால் இந்த நேத்திரரோகத்திற்குரிய பாகங்கள் ஆதியோடந்தமாக 96-வியாதியின் குணமும் அடையாளமும் அவைகளுக்குப் பலவித சிகிச்சைகள் முழுமையும் விபரமாய்ப் பார்க்கவேண்டியவர்கள் திருநேத்திரசிந்தாமணி என்னும் சாஸ்திரத்தில் பார்வையிடலாம். உயர்ந்த கடிதத்தில் சுத்தமாகப் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றது.

### மூலிகைமர்மம் 17-வது பக்கத்தில் கூறியதற்குரிய சகலமாந்தத்திற்கும்

## பாலசஞ்சீவிக் குளிகை.

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த வாளம் | விராகனிடை | 8 |
| சுக்கு | ,, | 7 |
| மிளகு | ,, | 6 |
| நெல்லிக்காய்கெந்தி | ,, | 2 |
| வெண்காரம் | ,, | 2 |
| இரசம் | ,, | 2 |
| கடுகுரோகிணி | ,, | 2 |

இவைகளை மேற்கூறிய நிறைப்படி நிறுத்து கல்வத்திட்டு இலைக்கள்ளிச்சாற்றால் மெழுகுபோலரைத்து மிளகளவு மாத்தி

ரைகள்செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும். இந்தமாத்திரையை சகலமாந்தத்திற்குமுபயோகிக்கலாம். நொச்சில், ஆடாதோடை, துளசி, கரிசலாங்கண்ணி, கம்மாறுவெற்றிலை இவைகளை வகைக்கு கொஞ்சமெடுத்து சட்டியிலிட்டு வதக்கி சாறுபிழிந்து அந்தச் சாற்றில் 1-அல்லது 2- மாத்திரைகளிழைத்து வார்க்கவும் காலையில் வதக்கிப் பிழிந்துகொண்ட மூலிகைத் திப்பியை வைத்திருந்து மாலையில் சட்டியிலிட்டு சாம்பலாகுமளவும் தீயெரித்து பஸ்பமானபிறகு அத்துடன் கருஞ்சீரகம்போட்டு நன்றாய்ப் பொரிந்து அடங்கியபிறகு அத்துடன் கொஞ்சம் மிளகுபோட்டு கொஞ்சம் சுக்கு நறுக்கிப்போட்டு ஜலம்விட்டு நாலுக்கொன்றாய் கியாழமிட்டு 2-சங்களவு வார்க்கவும் இப்படி 2-3-நாள் வார்க்க சகலமான மாந்தமும் தீரும்.

மாந்த வியாதியினால் மிகவும் இளைத்து சக்தியற்ற குழந்தைகளுக்கு காலையில் இரண்டு மாத்திரையெடுத்துப் பொடித்து ஒருசங்கு நல்லஜலத்தில் கலந்து வார்த்துவிடவும் 1-அல்லது 2-விசை மலப்பிரவிர்த்தியாகும் சுரம் அள்ளு வயிறுப்பிசம் முதலானவைகளையும் கண்டிக்கும் மாலையில் கருஞ்சீரகம் ஓமம் சாம்பலாக்கி அதற்குமேல் மிளகு கொஞ்சம்போட்டு கடலையிட்டுக்கொண்டு அதற்குமேல் கொஞ்சம் சுக்கு நறுக்கிப்போட்டு தண்ணீர்விட்டு நாலுக்கொன்றாய் கியாழம்வைத்து 2-சங்கு வார்க்கவும் இதற்குத் தாயார் பத்தியமிருக்கவேண்டியது. அதாவது வாய்வான பதார்த்தம் தள்ளி மற்றதெல்லாம் ஆகும்.

## பிள்ளைகள் குறுகுறுப்புக்கு மாத்திரை.

| | |
|---|---|
| பார்ப்பாரமுள்ளிப்பூவின் இதழ் | கால்துலாம் |
| ஓமப்பூ | அரைக்கால்துலாம் |
| கோரோஜனம் | அரைக்கால்துலாம் |
| கஸ்தூரி | ஒருகுன்றுமணி |
| மூசாம்பரம் | கால்துலாம் |
| குங்குமப்பூ | 5-குன்றிமணி |

இவைகளை பச்சைத் தண்ணீர்விட்டரைத்து கம்பு அல்லது பயறுபிரமாணம் உருட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு பிள்ளைகள் நெஞ்சில் கபங்கட்டிக்கொண்டு குறுகுறுப் புண்டானால் இந்த மாத்திரை கொடுக்கவும்.

இரவில் படுக்கும்போது குழந்தைகள் நிட்டமறிந்து 1-அல்லது 2-மாத்திரையெடுத்து முலைப்பாலிலிழைத்துக் கொடுக்கவும் இப்படி 2-நாள் கொடுத்தால் குறுகுறுப்பு, வயிறுசுரப்பு, இருமல் இவை தீரும். இரவில் கொடுத்தால் பத்திய மிருக்கவேண்டிய அவசியமில்லை.



பிள்ளைகளுக்கு இதேபிரகாரம் முலைப்பாலி லிழைத்து காலையில் கொடுத்தால் பத்தியமிருக்கவேண்டியது. மீன், கருவாடு, கறி இவைகள் ஆகா. இச்சாபத்தியமிருக்கவேண்டும்.

பெரியவர்களுக்கு மார்சளி, ஜலப்பு, சீதளம் இவைகளுண்டானால் இரண்டுமாத்திரையெடுத்து வெற்றிலையில்வைத்து மடித்துத் தின்னவும். இச்சாபத்தியம் 2-3-வேளை தின்னவும்.

## பிள்ளைகள் அள்ளுமாந்தத்திற்கு மாத்திரை.

முலைப்பாலில் ஒருநாள் ஊறவைத்து எடுத்த

| | | |
|---|---|---|
| ரசசெந்தூரம் | துலாம் | 1 |
| சயிந்தலவணம் | ,, | 1 |
| திப்பிலி | ,, | 1 |
| சுக்கு | ,, | 1 |
| மாசிக்காய் | ,, | அரை |
| சுத்திசெய்த வாளம் | ,, | அரை |
| கோரோஜனம் | ,, | அரை |
| குங்குமப்பூ | ,, | அரை |
| கஸ்தூரி | 3-குன்றுமணியிடை | |

இவைகள்யாவும் மேற்கூறிய நிறைப்படி நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு குப்பைமேனிச்சாறுவிட்டு இரண்டுநாளரைத்து பயறு பிரமாண மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

### இதற்கு அநுபானம்.

பிரண்டைச்சாற்றிலாவது, துளசிச்சாற்றிலாவது, குப்பைமேனிச்சாற்றிலாவது கொடுக்கலாம் 1-அல்லது 2-மாத்திரைகளிழைத்துக் கொடுக்கவும் வயிறுப்பிசம், மேல்சுவாசம், அள்ளுமாந்தம் முக்கல்முதலிய வியாதிகள்தீரும். இதற்குப் பத்தியம் வறுத்த உப்பு கட்டபுளி கூட்டவேண்டியது. அவரவர்கள் குழந்தையின் திடம் அறிந்து வழக்கம்போல் பத்தியமிருக்கவேண்டியது தாய்மார்களின் கடமையாம்.

## மூலிகைமர்மம் 20-வது பக்கத்திற்கூறிய விசுவுக்கு சிவ நாகத்தைலம்.

| | |
|---|---|
| இரசம் | மிளகு |
| கெந்தகம் | சேங்கொட்டை |
| வெள்ளுள்ளி | வகைக்கு காற்பலம் |

இவைகளை கல்வத்திலிட்டு பசும்வெண்ணெய் போட்டரைத்து துணியில் தடவி வத்திபோல்திரித்து இரும்புக்கம்பியில் கோத்து தீயிற்கொளுத்தியாய்த் துப்பிடிக்கதைலமிறங்கும் அந்த

தைலத்தை பீங்கானில்கிருப்படி பிடித்துக்கொண்டு அந்தயெடு
த்து சீசாவில் பதனம்பண்ணி வைத்துக்கொள்ளவும், புறவிசிவு
அல்லது புறங்கழுத்து வலிப்பு நரம்பிழுப்பு இவைகளுக்கு ஒரு
காசிடை தைலத்தை வெற்றிலையில்விட்டு உள்ளுக்குக் கொடுத்து
விட்டு மேலுக்கும் பூசிக்கத்தக்க நிவர்த்தியாகும் பத்தியம்
கிடையாது.

### புறவிசுவுக்கு வேறு.

இஞ்சிச்சாறு, முலைப்பால், தேன் இவைகளைச் சமமாய்க்கல
ந்து மேற்படி வியாதிகண்டவுடன் உள்ளுக்குக்கொடுக்கவும். மிகு
தினால் வேப்பெண்ணெயாவது முன்சொல்லிய தைலமாவது
கொஞ்சம் விட்டுக் கொடுக்கத் தீரும்.

அல்லது மேற்படி சேங்கொட்டைசேர்ந்த சுடர்த்தைலத்தை
ஒருகாசிடை உள்ளுக்குக் கொடுத்தவுடன் எருக்கு இலையைக்
கொண்டுவந்து சிவப்பெண்ணெய் தடவி பட்டைநெருப்பிலிட்டு
வதக்கி புறங்கழுத்தின் மேலிட்டு சூடுரைக்கும்படி அமுக்கமாய்
ஒற்றிடம் செய்யத் தீரும்.

### ஜன்னியைச்சேர்ந்த
### சிரசு கலைவலிக்குப் புகை.

பெருங்காயம், ஓமம், சுக்கு, சாம்பிராணி, மிளகு, சிற்றரத்
தை, கழற்சிப்பருப்பு, சீரகம், வசம், இவைகள் சமனிடையெடு
த்து எருக்கம்பால் விட்டு மைபோலரைத்து சீலையில் தடவி திரி
யாகத் திரித்து உலர்த்தி வெடித்து ஒருமுனையைக் கொளுத்தி
அந்த புகை பிடிக்கவும். இந்த புகையை இரவில் போஜனம் செ
ய்து படுக்கும்போது மூக்கிலேயாகிலும் 1-அல்லது 2-3-நிமிஷம்
வரையில் நாசியில் புகை பிடித்து பிறகு நித்திரை செய்யவேண்
டியது. இப்படி இரண்டு மூன்று நாள் பிடித்தால் நீர்க் தலைபா
ரம் புறவசி இவைகள் தீரும் சீதளபதார்த்தம் ஆகாது. சம்போ
கம் ஆகாது வேறு பத்தியமில்லை.

### மூலிகைமர்மம் 38-வது பக்கத்திற்கூறிய
### சர்வ குட்டமுறும் கூஷ்பாண்டலேகியம்.

இரண்டுபடி பசும்பாலில் இருபதுபலம் சீனிபோட்டுக்கரை
த்து பாகுசெய்து அதில் பெரும்பூசணிக்காயை மேற்றோல் சீவி
நறுக்கி உலர்த்தியிடித்து வடிகட்டின பொடி படி-1, கோஷ்டம்
இலவங்கம் கஸ்தூரி மஞ்சள் இந்துப்பு திரிபலை மதுரம் ஜாதி
பத்திரி இவைகள் வகைக்குப் பலம் அரைக்கால் சூரணித்து யாவுங்
கலந்து தூவி அரைப்படி நெய்விட்டுக்கிண்டி மெழுகுபதத்திலிற
க்கி வேளையொன்றுக்கு கொட்டைப்பாக்குப்பிரமாணம் சாப்
பிடவும் வரட்சி எலும்புருக்கி சிரங்கு நீர்கடுப்பு கல்லடைப்பு
வெட்டைதீரும் தேகம் குளிர்ச்சியடையும் வசகண்டது.



### சர்வ சூடு, தேகவூரல், நமை முதலியவற்றிற்கு
### சாமிநாத எண்ணெய்.

சிற்றாமணக்கெண்ணெய் சேர் 1, எலுமிச்சம்பழச்சாறு சேர்
1, பூந்திப்பட்டை பலம் 1, கழற்சிப்பருப்பு 3, இவைகளை அரை
த்து எண்ணெயிற்கலந்து மெழுகுபதமாய்க் காய்ச்சி யிறக்கிக்
கொண்டு இந்த எண்ணெயினால் பேதிக்குச் சாப்பிட்டுவிட்டு மறு
நாள்முதல் கொஞ்சங்கொஞ்சமாய் 10-நாள் சாப்பிட்டுக்கொண்டு
வந்தால் ஊறல் நமை சூடு சொஸ்தமாகும். இச்சாபத்தியம் இராஜ
வைத்திய சிந்தாமணிமுறை.

### சகல வாயுக்களையுங் கண்டித்து குளிர்ச்சியுண்டாக்க
### அமிர்தாதி சூரணம்.

| | |
|---|---|
| | மஞ்சிட்டி |
| ஏலம் | கடுகுரோகிணி |
| இலவங்கம் | திப்பிலிமூலம் |
| அதிமதுரம் | ஜாதிக்காய் |
| நற்சீரகம் | கிராம்பு |
| கருஞ்சீரகம் | வசவாசி |
| மகரப்பூ | சிற்றரத்தை |
| குரோசானிஓமம் | சித்திரமூலம் |
| வால்மிளகு | நிலவாகை |
| திப்பிலி | நிலவேம்பு |
| வாயுவிளங்கம் | குங்குமப்பூ |
| ஜடாமாஞ்சி | |

இவைகள் வகைக்கு சமனிடையெடுத்திடித்துச் சூரணித்து
வஸ்திரகாயஞ்செய்து இதற்குச் சரிபிடை சீனிகூட்டி வேளைக்கு
இருகடிப்பிரமாணம் சாப்பிட்டு கொஞ்சம் வெந்நீர் குடிக்கவும்
இப்படி மண்டலக்கணக்காய் தின்றுவந்தால் கைகால் உளைச்சல்
உள்ளுருக்கி எலும்புருக்கி பிரமியம் கரப்பான்மூலம் வாதம் பித்
தம் ஊஷ்ணவாயுமுதலிய சகல வாயுவுந்தீர்ந்து நல்ல பசிதீபன
முண்டாகும். தேககுளிர்ச்சியுண்டாகும். இதற்கு இச்சாபத்தியம்.

### புழுவெட்டினால் மயிர் உதிர்வதற்கு மருந்து.

பொரித்த வெங்காரம் ஒரு விராகனிடையை வெங்கலத்
தட்டில்வைத்து அதின்மேலில் கரிசலாங்கண்ணிச்சாறுவிட்டு இரு
ம்பினால் 3-நாழிகையிழைத்து பிறகு வெண்ணெய்சேர்த்து சங்
கினால் 3-நாழிகை யரைத்து வழித்து டப்பியில் வைத்துக்கொ
ள்ளவும். புழுவெட்டினால் மயிர் உதிருமிடத்தில் இந்த மையை
5-நாள் தடவினால் மறுபடியும் மயிர்முளைக்கும்.

## விரைவீக்கத்திற்கு மெழுகு.

கெச்சக்காய்ப்பருப்பு வெள்ளைக்குன்றுமணி முடக்கொத்தான் எருக்கம்விரை காட்டுக்கொள்ளு இவை சமவெடை சேர்த்து கல்லுரலிற்போட்டிடித்து பிறகு கல்வத்தில் போட்டுக்கொண்டு ஆமணக்கெண்ணெய்விட்டு மெழுகுபோலரைத்து கொட்டைப்பாக்குப்பிரமாணம் ஒருவேளைக்குச் சாப்பிடவும். விரைவீக்கம் அண்டவாயுவு தீரும். பத்தியம் உப்பு தள்ளுபடி. வீக்கம் அதிகமாயிருந்தால் ஒட்டைலந்தி கெச்சக்காயிலை யிரண்டையும்வறுத்திடித்து விரைக்கு ஒத்திடங்கொடுத்தால் அநுகூலமாகும்.

## வாந்திபேதிக்கு மாத்திரை.

மிளகு பெருங்காயம் அபினி காலேவிசம்பலம் இவைகளைச் சேர்த்து மைபோலரைத்து 12-மாத்திரைகளாகச் செய்துகொண்டு அரைமணிக்கொருதரம் வாந்திபேதி நிற்கிறவரையில் கொடுக்கவேண்டியது. 7-முதல் 14-வயதுள்ளவர்களுக்கு பாதிமாத்திரையாகக் கொடுக்கவேண்டியது. இந்தமாத்திரை வங்காளதேசத்தில் மிகவும் அநுபோகமானதாக டாக்டர் ஜெகந்நாத நாயகரால் சொல்லப்பட்டது.

## இரத்த அதிசாரத்திற்கு.

பெருமாப்பட்டை பலம் 1, மாதுளைச்சாறு வாழைப்பூசாறு தென்னம்பூசாறு வகைக்கு வீசம்படி. இந்தச்சாற்றால் மேற்படி மருந்தை அரைத்து ஒன்றாய்க்கலக்கி 5-நாள் உட்கொண்டால் இரத்த அதிசாரப் பேதி தீரும்.

## சேதுபண்டிதர் தாம்பிராதிமாத்திரை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சங்கு | விராகனிடை | 6 | ஜாதிகம் | விராகனிடை | 5 |
| சுக்கு | ,, | 1 | கடுரோகணி | ,, | 6 |
| திப்பிலி | ,, | 10 | கோஷ்டம் | ,, | 5 |
| அதிமதுரம் | ,, | 12 | இந்துப்பு | ,, | 5 |
| தாம்பிர | அரப்பொடி | 12 | | | |

இவையிடித்து வஸ்திரகாயஞ்செய்து பழச்சாறு விட்டரைத்து அந்தமருந்தை செப்புப்பாத்திரத்தில் தடவிவைத்து மறுநாள் வழித்தெடுத்து முன்போலரைத்து மேற்படி பாத்திரத்தில் தடவிவைத்து மறுபடியும் வழித்தரைத்து தடவி வைக்கவும். இப்படி 21-நாள் செய்து பிறகு மிளகுபோல் மாத்திரைசெய்து வைத்துக்கொண்டு தண்ணீரிலிழைத்து கண்ணில் தடவினால் துர்மாமிச வளர்ச்சி நீர்முட்டல் காசம் படலம் அமரம் திமிரம் இவை சொஸ்தமாகும்.



உ

சிவராமஜயம்.

# பஸ்பசிந்தூர வகுப்பு.

முன்சொல்லிய லேகியங்களுடன் சேர்க்கவேண்டிய செந்தூரங்களும் அத்துடன் சிலபஸ்பங்களும் கூறப்படுகின்றன.

## தங்கபஸ்பம்.

தங்கரேக்கு ஒருவிராகனிடை கொண்டுவந்து சிறுபொடியாகக் கத்தரித்து கல்வத்திலிட்டு சிற்றண்டத்தோல் இரண்டு விராகனிடை பொடித்துப்போட்டு முள்ளுக்கீரைச்சாற்றால் ஒருஜாமம் அரைத்து மூசையிலிட்டு மேலேமூடி சீலைசெய்துகாய்ந்த பிறகு உலையிலிட்டு மூசை பழுக்கும்படி மூன்றுவிசை ஊதி அப்படியே உலையுடன்விட்டு மறுநாள்வரையிலும் ஆறியபிறகு எடுத்து சீசாவில்போட்டு வைத்துக்கொள்ளவும். பூரணதிமுதலிய லேகியங்களில் சம்பந்தப்படுத்தி அருந்திவந்தால் தேகம் தங்கநிறமாயிருக்கும். இச்சாபத்தியம் நல்ல பசியும் தாதுபுஷ்டியுமுண்டாகும்.

## வெள்ளிபஸ்பம்.

மேற்படி தங்கபஸ்பம் செய்யும் பாகத்தைப்போலவே வெள்ளியையும் செய்து எடுத்துப்பார்க்கவும் கம்மலாயிருந்தால் அண்டத்துள் வெள்ளைக்கருவாலரட்டி பில்லைதட்டி 50-வரட்டியில் புடம்போட்டு மறுதினமெடுத்துக்கொள்ளவும். திரிகடுகு திரிபலாதி சமன்கொண்டு சூரணித்து ஒருவிராகனிடை சூரணத்திற்கு இரண்டு அரிசியிடை பஸ்பம்சேர்த்து அரைதோலா நெய்விட்டிழைத்துச் சாப்பிடவும் சகலவாய்வுங் கண்டிக்கும். தேகமிறுகும். நல்ல பலமுண்டாகும். இந்த பஸ்பத்தை உயர்ந்த லேகியங்களுடனுஞ்சேர்த்து சாப்பிடலாம்.

## பவளச்சுன்னம்.

பவளத்தை பழச்சாற்றில் ஒருநாள் ஊறவைத்து மறுநாள் கழுவி உலர்த்தி கலசத்திலிட்டு எருக்கம்பாலை மிதக்கவிட்டு ரவியில்வைக்க மெழுகாகும் உடனே எடுத்து ஒரு ஓட்டில் எருக்கம் புழுப்பரப்பி அதின்மேல் பவளத்தைவைத்து மேலும் எருக்

கம்பழுப்புபரப்பி ஓடுமூடி சீலைசெய்து முழுப்புடம்போட கடுங்காரச்சுண்ணமாகும். வெற்றிலையில் தடவிபோட்டுக்கொள்ளலாம் க்ஷயரோகிகள் தாம்பூலத்தில் தடவிப்போட்டுவர நிவர்த்தியாகும்.

## அபிரேக்கு சேந்தூரம்.

கிருஷ்ண அபிரேக்கு பலம் 1, அன்னபேதிபலம் 1, வெடியுப்பு பலம் 1, எலுமிச்சம்பழச்சாறுவிட்டு 3-நாளரைத்து பில்லைதட்டி கலசத்தில்வைத்து மூடி சீலை வலுவாய்ச்செய்து 20 - வரட்டியில் புடமிடவும் சகல வியாதிகட்கும் ஆகும்.

முன்கூறிய லேகியத்திற்குச் சேரவேண்டிய களவுக்குப்படி கலந்து சாப்பிடவும்.

## அயச்சேந்தூரம்.

அயம் ராவின பொடி 3-நாள் பழச்சாற்றில் ஊறவைத்து நாலாநாள் ஜலத்தில் அலம்பிவிட்டு குப்பைமேனி ரசம்விட்டரைத்து பில்லைதட்டிக் காயவைத்து 25-வரட்டியில் புடம்போடவும், மறுபடியும் பழச்சாற்றில் ஒருபுடம், கரிசலாங் கண்ணிச்சாற்றில் ஒருபுடம், குப்பைமேனிச்சாற்றில்ஒருபுடம், மறுபடியுங்குப்பைமேனிச்சாற்றில் ஒருபுடம், இந்த ஐந்து புடமும்போட்டு எடுத்து வைத்துக்கொள்ளவும். இவைந்த தேகங்களுக்கும் சில லேகியங்களிலும் கலந்துகொடுக்கலாம். "இளைத்தவன் இரும்பைத் தின்னவேண்டும்" என்ற பழமொழியுண்டு.

## அன்னபேதி சேந்தூரம்.

2-பலம் அன்னபேதியை கல்வத்திலிட்டு பழச்சாற்றை மிதக்கவிட்டு மேலோடு மூடி சீலைசெய்து முழுப்புடத்திலிட்டு ஆறிய பிறகு கல்வத்திலிட்டு சீசாவில் வைத்துக்கொள்ளவும் சகல சுரத்திற்கும் தேன் முலைப்பாலில் கொடுக்கலாம் இச்சாபத்தியம்.

## வெள்வங்கபஸ்பம்.

ஒருபலம் வெள்வங்கத்தை யுருக்கி விளக்கெண்ணெயில்சாய்க்க சுத்தியாம் அதன்பிறகு அதை ஈயமிறகுபோல் தகடடித்து பொடியாகக் கத்தரித்து பூவரசம்வேர் சமனாகக் கொண்டுவந்து அந்த வேரை ஒருபக்கம் தொளைத்து மேற்படி பொடியைப்போட்டு தொளை தெரியாமல் அந்தவேரினால் தமர்போட்டு 2-3-மண் சீலைசெய்து கஜபுடம்போட்டுமூன்றுவதாகாரெடுத்து சீலையைத்



தட்டி உடைத்துப்பார்க்க பஸ்பமாயிருக்கும் அதையெடுத்துச் சீசாவிற்போட்டு வைத்துக்கொள்ளவும்.

## இதற்கு அநுபானம்.

சுக்கு — தானிக்காய்
திப்பிலி — மாசிக்காய்
மிளகு — நெல்லிக்காய்

இவை ஆறும் சமனிடைகொண்டிடித்து சூரணித்து வஸ்திரகாயம்செய்து ஒரு விராகனிடை சூரணத்திற்கு இரண்டு குன்றிமணியிடை மேற்படி பஸ்பம் வைத்து அரை ரூபாயிடை பசுநெய்விட்டுக் குழைத்துச் சாப்பிடவும் இப்படி 7-நாள் அல்லது 10-நாள் சாப்பிடவும் சூடு வெள்ளை பிரமேகம் வாயு இவைகள் தீரும். இச்சாபத்தியம்.

## கருமேகத்திற்கு.

கருமேகத்திற்கு மேற்படி பஸ்பத்தை இரண்டுகுன்றி யெடுத்து அரைரூபாயிடை பசுவெண்ணெயிற்குழைத்துச் சாப்பிடவும். இப்படி இருபதுநாள் சாப்பிட்டு சரியான பத்தியமிருக்கில் கருமேகம் தீரும்.

## கருமேகத்திற்கு கந்தகபஸ்பம்.

ஒருபலம் நெல்லிக்காய்கெந்தகம் கொண்டுவந்து மருதம் பட்டைவேண்டியது கொண்டுவந்துகொளுத்தி சாம்பலாக்கி ஒருபடி ஜலம்பிடிக்கும் மண்கலத்தில் அரைக்குடுவை மேற்படி சாம்பல்கொட்டி நன்றாயழுத்தி கெந்தகத்தை நடுவில் வைத்து மேலும் சாம்பல்போட்டு அழுத்தமாக அழுத்தி உதடுமட்டும் சாம்பலழுத்தி வாய்ப்புறத்திற்கு ஓடுமூடி அடுப்பேற்றித் தீயெரிக்கவும். கலயத்தின் உதட்டைத்தொட்டால் சூடானது கைதாங்காத சமயமட்டில் எரித் திறக்கிவைத்து அப்படியே ஆறிய பிறகு சாம்பலைநீக்கி கந்தகத்தை யெடுத்து குப்பைமேனியிலையை அரைத்து தேங்காய்ப்பிரமாண மொத்தைக்குள் கெந்தியை வைத்து 3-சீலைசெய்து முக்கால்கஜ புடமிட்டு அப்படியே ஆறியபிறகு எடுக்க பஸ்பமாகும். நெய்யில் தேனில் வெண்ணெயில் எதிலாவது அரிசியிடை பஸ்பம்வைத்துக் கொடுக்கவும் இப்படி அரைமண்டலம் கொடுக்க கருமேகம் தேகஊரல் இவைதீரும். இச்சாபத்தியம்.

## இதற்கு அநுபானம்.

முன்சொல்லியபடி அரைமண்டலம் மருந்து சாப்பிட்டு இச்சாபத்தியமிருந்தபிறகு ஸ்நானஞ்செய்துவிட்டு அகத்திக்கீரை வேர் இடித்து தூளாக்கி ஒருபிடியெடுத்து படிஜலத்தில் போட்டு கால்படி கியாழமாகக் காய்ச்சி யிறக்கி இருவேளையாக பாகித்துச் சாப்பிடவும் இப்படி 20-நாள் சாப்பிட்டால் மேகஊறல் கருமேகம் தீரும் இந்த இருபதுநாளைக்குள் தலை முழுகக்கூடாது உடம்புமட்டில் குளிக்கலாம். இச்சாபத்தியம்.

## பவளபஸ்பம்.

ஒருபலம் பவளத்தை ஒருநாள் தண்ணீரில் ஊறவைத்துக் கழுவிப்போட்டு தேள்கொடுக்கிலையையரைத்து அதற்குள் மேற்படி பவளத்தைவைத்துமூடி ஏழுசீலைசெய்து காயவைத்து நாறெருவில் புடம்போட்டெடுத்துப் பிங்கானிலிட்டு அதில் ஆவின்பால்விட்டு ரவியிற்காயவைத்து அப்பாலதை ஆல்பழுப்பிற் கட்டி நெற்குழியில் 3-நாள் புதைத்தெடுத்து அநுபானங்களிலிட க்ஷயம் ஈளை மந்தாரகாசம் சிரங்கு சொறிமுதலான மேற்காட்டிய ரோகங்கள் தீரும்.

## கல்நார்பஸ்பம்.

கல்நாரைச் சிறுதுண்டாய்ப் பிளந்து ஓட்டிலிட்டு அதற்குக் கீழுமேலும் கோங்கிலவம்பட்டையை இடித்துப்போட்டு அப்பால் மேற்படிபட்டை கியாஷம்விட்டரைத்து 3-புடம்போட தவளம்போல நீற்றுப்போகும் தேனிலாவது தூதுளைலேகியத்திலாவது கொள்ள சிலேத்மரோகம் 96-ம் நீங்கும் மேககாங்கைதீரும் மேற்படி பஸ்பத்தைப் பல்விளக்கத் தந்தம் இறுகும்.

## மேற்படி பஸ்பம்.

கல்நாரை சிறுதுண்டுகளாக வெட்டி ஓட்டில்வைத்து அதற்குக் கீழுமேலும் எருக்கம்வேரையிடித்துத் தூளைப்போட்டு மூடிகெஜபுடம்போட்டு மேற்படி பாலிலரைத்து 3-புடம்போட்டு அநுபானத்திலிட மேற்படி வியாதிகள் தீரும் தந்தம் இறுகும்.

## சிங்கிபஸ்பம்.

சிங்கியென்னும் மான்கொம்பு 5-பலமெடுத்து சிறுதுண்டுகளாய் நறுக்கிக் குப்பைமேனிச்சாற்றில் ஊறவைத்து மேற்படி



யிலையை அரைத்து கவசஞ்செய்து காயவைத்து ஓட்டில் பரப்பிவைத்து மேலோடுமூடி சந்துவாய்ச் சீலைமண்செய்து ஐம்பதெருவிற் புடம்போட்டெடுத்து ஆவின்பால் விட்டரைத்து பில்லைதட்டி காயவைத்து முன்போற் புடம்போட பஸ்பமாகும். அநுபானங்களில் மேற்படி பஸ்பத்துடன் பவளபஸ்பம் சேர்த்துக் கொடுக்க நீரடைப்பு, கல்லடைப்பு, சதையடைப்பு, சீசெரிவு, க்ஷயம், ஈளை, இருமல், உஷ்ணம், மேககாங்கை தீரும்.

## சிலாசித்துபஸ்பம்.

கரடில்லாத கற்பூரசிலாசித்து 5-பலமெடுத்து சிறுதுண்டுகளாக நறுக்கி ஒருநாள்முழுதும் நல்லஜலத்தில் ஊறவைத்துமறுநாட்காலையிலெடுத்து அலம்பி இந்தப்படி ஐந்துநாள் அலம்பியெடுத்துக்கொண்டு சிறுசெருப்படைச்சாற்றாலாட்டி பில்லை தட்டிக் காயவைத்து ஓட்டில்வைத்துமேலோடுமூடி சீலைமண்செய்து 50-எருவில் புடம்போட்டு ஆறியபின் எடுத்து மேற்படிச் சாற்றாலாட்டி லேசாக பில்லைதட்டி புடம்போடவும். இப்படி 3-விசை புடம்போட்டெடுத்துச் சீசாவில் வைத்துக்கொண்டு பித்தவெரிவு பித்தவெட்டை நீர்க்கடுப்பு இவைகட்குப் பசும்வெண்ணெயில் கொடுக்கவும். இச்சாபத்தியம்.

## வெண்காரபஸ்பம்.

ஒரு குடுவையில் மேற்படி சிலாசித்துபஸ்பம் கால்தரமிட்டு அதின்மேல் சுத்திசெய்த வெண்காரமிட்டு அதற்குமேலும் சிலாசத்துஇட்டு ஓடுமூடி சீலைமண்செய்து உலர்த்தி 10-எருவில் புடம்போடவும். நீர்க்கட்டு, சுருக்கு, அனல் இவைகட்கு வெண்ணெயில் பணவிடை கொடுக்கவும். தீராவிட்டால் முள்ளங்கி சாற்றில் இரண்டு பணவிடை கொடுக்க உடனே நீர்க்கட்டு உடையும் இச்சாபத்தியம்.

## இதின் உபயோகம்.

மேற்கூறியபடி அந்தந்த பஸ்பத்தை தனித்தனி உபயோகப்படுத்திக்கொள்ளலாம். அல்லது சிலாசித்துபஸ்பம், சிங்கிபஸ்பம், வெண்காரபஸ்பம், பவளபஸ்பம் இவையாவும் சமனிடைகூட்டிச் சீசாவில் வைத்துக்கொண்டு ஒருவேளைக்கு பணவிடையெடுத்து பசும்வெண்ணெயி லிழைத்துச் சாப்பிடவும். இப்படி இருவேளையும் 3-நாள் தின்றால் சகல உஷ்ணமும் தீரும். நீர்க்கட்டும், நீர்

விசுரம் வாயுவு உடம்பெரிவு யாவுந்தீரும். தேகநிதானத்திற்குத் தக்கபடி 3-நாள் 5-நாள் 7-நாள் சாப்பிடவும் இச்சாபத்தியம்.

கஸ்தூரிமெழுகு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கஸ்தூரி | விராகனிடை | 1 | சவ்வாது | விராகனிடை | கால் |
| பச்சைக்கற்பூரம் | ,, | 2 | பூநீக்கிய லவங்கம் | ,, | 4 |
| கோரோசனை | ,, | 4 | வால்மிளகு | ,, | 4 |
| குங்குமப்பூ | ,, | 4 | ஏலக்காயரிசி | ,, | 8 |
| புனுகு | ,, | கால் | சிறுலவங்கப்பட்டை | ,, | 8 |

இதில் சூரணஞ் செய்பவைகளைச் சூரணித்து யாவுங்கூட்டிக் கல்வத்திலிட்டு சம்மாறு வெற்றிலைச் சாற்றில் ஒரு ஜாமமரைக்கவும். கற்பூரவல்லிச்சாற்றில் ஒருஜாமம், தூதுவேளைச்சாற்றில் ஒரு ஜாமமாட்டு வடிகட்டிய இஞ்சிச் சாற்றில் ஒருஜாமம் மிளகுக் கியாழத்தில் ஒருஜாமம், சித்திரமூலவேர் கியாழத்தில் ஒரு ஜாமம், மஞ்சள் கரிசலாங்கண்ணிச்சாற்றில் ஒருஜாமம். இப்படி தனித்தனியாய் ஒவ்வொருஜாமம் அரைத்துக் கல்வத்துடன் நிழலிலுலர்த்தபிறகு சுயம்பான தேனிலே மெழுகுபதமாயரைத்து வழித்து பத்திரம்பண்ணிக் கொள்ளவும் பயறுபிரமாணம் எடுத்து தேனில் குழைத்துக்கொள்ளவும். இப்படி இருவேளையும்3-நாள் 5-நாள் கொடுக்கவும் ஜன்னி, சீதளம், சுரம், க்ஷயரோகம், உபவிஷம், மாந்தம், முகவாதஜன்னி, சூதகஜன்னி, இருமல், மாரடைப்பு, நடுக்குமாந்தம் இவைதீரும். தேகதிடமறிந்து நாள் அதிகரித்தும் குறைத்துங்கொடுக்கவேண்டியது. இச்சாபத்தியம்.

---

அகஸ்தியர் அருளிய

## சண்டமாருதச்செந்தூரம்.

### நொண்டிச்சிந்து.

பரிதிமதியுதித்த—இருப்
பாற்கடல்சூழுமிப்புவிதனிலே
பெருமைமிகப்பெருகு—மானிடராய்
பேர்க்குளியாதியின் சங்கைதன்னை
அறிந்தேகுறுமுனிவர்—மனது
அன்புடன்மானிடர்க்கென்படவே



திருந்தியதோராவிழ்தம்—சண்ட
மாருதமென்றொருசெந்தூரம்
சொன்னார்வெகுசுருக்கிப்—பெருந்
தொல்லைகளாகியஅல்லலில்லை
மூன்றாமூலிகைச்சார்—நல்ல
முற்றிடும்பட்டைகியாழமது
தன்னாலரையாமல்—ரவியில்
தாக்கிடும்வெய்யிலில்வையாமல்
நாணலைக்கட்டிவிட்டே—மூடி
சந்துவாய்சீலைகள்செய்யாமல்
புடம்போட்டுமாயாமல்—கள்ளன்
பொக்கிஷக்காலடிகண்டதுபோல்
திடம்பெற்றசெந்தூரம்—அதி
சீக்கிரம்செய்திடும்தொழில்முறைகேள்
பூரம்நிசையிடையாம்—அதில்
பூட்டிடலிங்கந்திக்கிடையாம்
வீரம்வினையிடையாம்—இன்னம்
வெட்டியகெந்தியும்வீரனிடை
செந்தூரம்வீரவெடை—இதில்
சேர்ந்தசரக்கெல்லாஞ்சுத்திசெய்து
சந்தோஷமாகவேதான்—அம்மி
தன்னிலிருஜாமந்தானரைத்தால்
வர்ணம்பவழநிறம்—அதில்
வந்திடுமுந்தன்மனங்குளிர
சொர்ணமிதற்கீடோ—அதி
சொக்கிதுசொக்கிற்சொல்கிறேன்கேள்
திறமாகுங்குப்பிதனில்—யாவும்
திரட்டியறுகோணந்தன்னில்வைத்து
ஏகத்தியானம்செய்து—புட்டினில்
ஏற்றும்பணவிடைசெந்தூரம்
நடுவினில்வைத்துருட்டி—நடு
நாவிற்படாமல்விழுங்கிடவே
படுபாவிவியாதியெல்லாம்—நினைத்தால்
பறக்குமிதன்பேர்சொல்லிட்டவே
ஜன்னிபதின்மூன்றும்—தர்மம்

நாக்கிடுங்குஷ்டமெட்டுவகை
  பின்னேழுதோஷமும்போம்—சொன்ன
பீலிகையெட்டுமகோதரம்போம்
  வாதங்களெண்பதுவும்—கிட்டி
வந்திடும்பக்கம்தனுர்வாதம்
  ஓதம்விரைவாதம்—வலியும்
உற்றமுடக்குநடுக்கலுடன்
  அசதியுங்கனுவாதம்—புண்ணு
அரணைகிரந்திசூலையுடன்
  கண்டத்தின்மாலையுடன்—உள்ளங்
கைதனிலூறல்கருமேகம்
  வண்டுகடிகளும்போம்—கொடிய
வல்லபல்விஷத்தொல்லையும்போம்
  சைத்தியந்தானேழும்—கொடி
தாகியயோனிப்புற்றுவிடும்
  வைத்தியஞ்செய்கிறவன்—வலு
வாகியவியாதிக்கநுபானம்
  தெரியாமல்செய்தாக்கால்—அவனை
தொடரும்வியாதிரானென்சொல்வேன்
  குறையவனநுபானம்—திறமாய்
கூர்ந்திடில்சந்தோஷமாய்விடுமே. (தந்தினத்)

## இதற்கு விபாம்.

| | | |
|---|---|---|
| பூரம் | விராகனிடை | 4 |
| லிங்கம் | ,, | 8 |
| வீரம் | ,, | 2 |
| நெல்லிக்காய்கெந்தி | ,, | 2 |
| ரசச்செந்தூரம் | ,, | 2 |

இவைகளை இங்ஙனங்கூறிய இடைபோல்கூட்டி அரைத்தால் மாத்திரம் வாய்பிடிக்காது குழந்தைகள்முதல் சகலருக்கும் கொடுக்கலாம். மேற்படி இடைபோல் எடுத்து 2-ஜாம மரைத்து சீசாவில் வைத்துக்கொள்ளவும் சகல வியாதிகட்கும் உபயோகப் படுத்தலாம். கைகண்டது. இச்சாபத்தியம்.



# அகஸ்தியர் மூலிகை வண்ணம்.

சம்புட்டனேவேர்விரையை உண்பவர்தன்கிராணிமூலம்
தெம்புடனேதீருமென்று கும்பமுனிதானுரைத்தார்
  சித்திரமூபுரத்தமூலம் மெத்தஆவலாய்க்கொணர்ந்து
  சத்தரதினுங்கியாழம் வைத்தாகிலும்குடிக்கில்
பித்தமொடுமெத்தமும் பெருத்ததொருமேல்வயிறும்
அத்திசாரதாகமுடன் இத்தனைநோயேகிவிடும்
  நில்வாகைவேருரைக்கில் மலைபோலேவளருவயி
  றலையாக்குலையுமது நிலையாகேகும்நிஜம்
தும்பையதுசான்குடிக்கில் அம்பலத்துவேர்கொடிவை
பம்பரம்போலேகுழைத்து தின்பவர்வயிற்றுவலிபோம்
  கரிசலாங்கண்ணிமதம் பிரியாவசியமது
  கரியாமிளகோடுண்ண தரியாதுபாண்டுரோகம்
  அவர்பிரமேகமேயகற்றுமே.

சங்கனிலைவேர்ப்பொடியை உண்டலத்திலேமேகமெல்லாம்
இங்கிதமாயேகுமென்று மங்கைபாகர்தானுரைத்தார்
  தழுதாழைவேர்ச்சமூலம் வழுவாமலேகொணர்ந்து
  நழுவாமலேயரைத்து விழுதோடேயுண்வை
சித்தமதில்வாதமெல்லாம் மெத்தவதில்சூலைகளும்
சத்திலாதோடமிக மற்றவிஷச்சூனியமும்
  கொத்தானும்வேர்சமூலம் மெத்தாகவேயெடுத்து
  வில்தாரமாயரைத்து மெத்தஆவலாயுண்வை
கட்டுகள்மலத்துசீதம் விட்டுவிடுமேநெப்பில்
குட்டுவலித்தானுமது திட்டமுடன்செய்யகலும்
  முக்காணாயின்வேலை சுக்காகவேயுலர்த்தி
  திக்காமலேவிடித்து விக்காமலேயருந்த
வயிறாறும்பேதிகளும் சுபரூபமாஞ்சுரமும்
சுயவாகவேயடங்கும் நயமாகுங்காயசித்தி
  ஆகண்டத்தைவலி யகற்றுமே.

கொல்லன்கோவைக்கிழங்கை நல்லஆவின்பாலினுண்ண
மெள்ளவேவிஷங்களறு வில்லடைவில்லாமலோடும்
முத்தமெனும்மூலமதில் மெத்தவயிற்சேடனிற்குஞ்
சத்தமொடுதாகமுடன் நிற்குமுன்னில்லாதுசொன்னேன்
இன்பூறல்வேர்சமூலம் தென்பாகவேகொணர்ந்து
தம்பிரானையேதினைந்து தேன்பதாகவேயுணர்வை
குத்திருமல்கோழைஜலம் நாறுறமொடுசீழுகளும்
ஆத்திவிடுமேசுவாசம் பார்த்துபதமாயுணர்வை
சிவனார்தன்வேட்புதன்னை நவநாதர்பேர்வழுத்தி
உவமாகவேயுணர்வை தவமாகுங்காயசித்தி.
பங்கயஞ்செய்நீருலகில் சங்கமற்றமூலிகைநால்
மங்கைபாகர்சொன்னபடி சிங்காரமாயானுரைத்த
வாடாநீகாடை தோஷமகற்றுமே.

கொல்லன்பகையாளிவேரை மெல்லக்கெல்லியேகொணர்ந்து
நல்லகுருவையரிசி மெள்ளஇடித்தேயடுப்பில்
பிட்டாகவேயவித்து மட்டாகவேபருந்த
கெட்டோம்கெட்டோமென்று விட்டோடும்மேல்வலிப்பு
பண்ணரும்பூவுலகில் நன்னாரிவேரதனை
மின்னாரவேகொணர்ந்து தின்னாரவேயகல்நோய்
சோகைக்காமாலைபித்தம் தாகமுடனேயகற்றி
வேகமானவெப்புதோஷம் போகபிரமியந்தீரும்
கூளாத்திநெற்கள்ளியிலை மீளாதகெர்ப்பவலி
தாளாமலோடுமென்று காளாத்திநாதருரை
குப்பையெனுமேனிதன்னில் உப்பிஷங்கள்போக்கிவிடும்
அப்பையதில்கோழைஜலம் அப்புறவாய்நானிறுத்தும்
செப்பிய மகத்துவத்தைப்பாருமே.

பூவரசில்வேரகேகம் ஏகிவிடுமேகரப்பான்
கூவிளையில்வெப்பெரிப்பு தீவினைகளோடிவிடும்
கொடிவேலியானதொரு கொடியானமூலிகையில்
அடியானஅஷ்டகுன்மம் பொடியாகுமேகிரந்தி
செக்குன்றிநாமமதை முக்கியமுடனுரைக்க
சக்கிதைத்தலையின்நோவு மக்கணத்திலேயோடிவிடும்



நாறுவேளையானகற்பம் வேதமொழியாளேபித்தம்
வாதமொடுசன்னிசந்தி தாகமொடுதாதுபுஷ்டி
சம்பிரமுடனேதரும் அம்மையெனுநூலியது
விப்புருத்தமூலம் தம்பனமதாகும்சொன்னேன்
உன்னாபடியேயறு வெள்ளையதின்வேர்கொணர்ந்து
பெண்ணினிமேயருந்தச் சன்னிபிரமியந்தீரும்,
ஆடுதின்னாப்பாளைப் புழுவாற்றுமே.

வெள்ளையெனுஞ்சாரணையிக் கள்ளிவிளிநோயதனும்
புள்ளியின்கருத்துறைக்கு பல்லின்வலிதானதனும்
கற்பூரவள்ளியிலை வெப்பாகவுண்பதற்கு
வெப்பாரிக்குத்ததனும் இப்பாரில்பாண்டுவுக்கு
ரூபியன்றன்காந்திதனிற் சேரும்வெப்புர்சாந்தியதாம்
பிரும்மிசாந்திதனில் மேருகுளிர்ப்போக்காவிடும்
கொட்டையெனுமக்காரந்தை திட்டமுடனேயுதக
மெட்டினில்வடித்தருந்த வெட்டையதகனுஞ்சொன்னேன்
ஆகாசக்கெருடன்விஷம் மாற்றுமே.

கொம்பாக்குவேரகேகம் வம்புசூலம்போயகனும்
தென்பதுமய்காயசித்தி இன்பமுடனேயருந்த
பாசிதனில்நீர்கிரிச்சல் தோஷமொடுகுலையும்
ஆசைகுத்தப்பாலைதனில் மாச்சுவிடுமேபாவை
வள்ளியினாதவயி றுன்னத்திருமென்றுமிக
சின்னியில்சியுசெறு தன்னில்வாரணமகனும்
தோளியவரைதனில் நீர்சளிகளைகளோடு
ச்சனைவயிற்றாதல்வெப்பு கோளைமாந்தகாசமறும்
கண்டெடியதின்வேர்பொடியின் மண்டையதினீக்கத்தும்
என்சொல்லியகடிகள் வண்டுகொல்லியாலோடும்
பாதிரிவேர்கேகம் சாதுரிகமானதொளிர்
நாதாருள்காணவென்று ஓதுமுனிவர்சொல்
ஆற்றலரி அஷ்டகுன்ம மாற்றுமே.

விச்சுவெதுமூலிகையில் பச்சைநல்லபால்கரந்து
கொச்சையுள்ளமாதருக்கு கச்சகதுவாரைபுண்டு

பூராயமானதொரு தேரா தருணியங்கள்
ஆராவாரந்தனில் மீராதகனுங்கண்டீர்

மல்லாரையென்னும்மிக சொல்லாதநற்கினைகள்
வெல்லாதவாதமென்னும் பொல்லாதநோய்களும்

எட்டியுடவேரவையில் குட்டம்பதினெட்டுமோடும்
இட்டமுடனேவிசும் அட்டகுன்மமேயகனும்

நீலியுற்றவேரில்வளக் கோலியுற்றநஞ்சகனும்
வேலியுற்றமேபருத்தி யாலேயுற்றவாதமும்

நிலவேம்பினுல்சுரங்கள் மலைவேம்பிலோடும்ஜன்னி
இலைவேம்பில்கட்டிவயர் தலைவேப்பினுண்டநேகம

குண்டுமணிப்பிசின்கொடியால் உண்டநேகமேல்விரோதம்
சென்றுமுனிநாதர்வந்து கண்டுகொள்ளுவார்கள்நிதம்

அத்திவேர் வயிர்கடுப்பை யாற்றுமே.

குன்னிதன்வேர்வுணவை ஜன்னியுடன்வேர்வைமெத்த
கண்ணியசரோணிதமும் விண்ணில்கண்டோடும்சிறு

பிள்ளைகள்கீர்கட்டலும் வெள்ளைவாதங்களோடும்
தள்ளைநோடாமூலியில் மூலநோய்கள்தாளகனும்

வட்டமெனும்பிரம்பி தட்டகட்டச்சுரம்போகும்
குட்டியவினாவுக் குமட்டிவரும்வாந்திசத்தி

பேய்ப்பீர்க்கினைத்தை வாய்பார்க்கவேயுனர்வை
போய்ப்பாயும்நஞ்சுவிஷம் சாய்ப்பாகவோடிவிடும்

பங்கதனில்மூலிகையின் [illegible] சேர்க்கைமன்னும்
பொய்யண்டவா [illegible] ன்னி [illegible] யோடிவிடும்

மூலிகை [illegible] யாகமே-சகலருந்தும்
ஈசன் [illegible] னாயாகுமே.

---

பார்வதிபாணியமென்னும்
வைத்திய சிந்தாமணி,
முற்றிற்று.

---

சிவசாமிவிலாசம் பிரஸ், சூளை சென்னை.